







முன்னாள் பாதிரியார் இத்ரீஸ் தௌபீக்

அவர்களுக்கு முன் கண்ணீரை மறைத்துக் கொண்டேன் 12


# மீள்பார்வை

இலங்கை முஸ்லிம்களின் தனித்துவக் குரல்

15 வருடங்களையும் தாண்டி...

இதழ் - 213 ✱ 07 ஜனவரி 2011 ✱ வெள்ளிக்கிழமை ✱ ஸபர் 1432 ✱ விலை 30.00









## தேசிய கீத மொழி குறித்து இனங்களிடையே பிரச்சினையை ஏற்படுத்த வேண்டாம்:

**மல்வத்த அனுநாயக்க தேரர்**

தேசிய கீதம் பாடப்படும் மொழி விவகாரம் குறித்து இனங்களுக்கிடையில் பிரச்சினையை ஏற்படுத்த வேண்டாம் என மல்வத்த பீடத்தின் அனுநாயக்க தேரரான நியங்கொட விஜிதசிரி தேரர் பிரதமர் டி.எம். ஜயரட்னவிடம் கேட்டுக்கொண்டார்.

பிரதமர் டி.எம். ஜயரட்ன மல்வத்தை பீடத்தின் அனுநாயக்க தேரரை சந்தித்போதே அனுநாயக்க இவ்வாறு தெரிவித்தார். (பக்.19)

## NGOக்களை பாதுகாப்பு அமைச்சில் பதியுமாறு பணிப்புரை




1300 அரச சார்பற்ற நிறுவனங்களை பாதுகாப்பு அமைச்சின் கீழ் பதிவு செய்யுமாறு அரசு அறிவுறுத்தியுள்ளது.

இவற்றுள் பெரும்பாலானவை அரசின் சட்ட திட்டங்களை மதிக்காமல் நடந்து கொள்வதும் அரசுக்கு எதிரான போக்கைக் கொண்டிருப்பதும் அதற்கான காரணங்கள் எனத் தெரிய வருகிறது.

# ஆளுங் கட்சியில் இருந்தபோதிலும், கிழக்கில் மு.கா. தனித்துப் போட்டி?

(நமது அரசியல் செய்தியாளர்)

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் ஆளுங் கட்சிக் கூட்டணியுடன் இணைந்து போட்டியிட கிழக்கிலுள்ள மு.கா. ஆதரவாளர்கள் பலர் விரும்பவில்லை என அறிய வருகிறது. மு.கா. பொதுச் செயலாளர் ஹஸன் அலி தலைமையில் களநிலவரத்தை ஆராயுமுகமாக மேற்கொள்ளப்பட்ட தூதுக் குழுவின் கருத்தறிதலின்போது இது வெளிப்பட்டுள்ளது.



பெரிய கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுவதன் மூலம் கட்சி முக்கியத்துவமிழந்துவிடும் அபாயம் ஏற்படலாம் என அதன் தீவிர ஆதரவாளர்கள் அஞ்சுகின்றனர். அதனால், மு.கா.வின் மரச் சின்னத்தில் தனித்துப் போட்டியிட வேண்டும் என அவர்கள் விரும்புவதாகத் தெரிகிறது.

இதேவேளை, ஐக்கிய தேசிய முன்னணி அரசில் இணைந்திருந்த போதும் கட்சி அப்போது மரச் சின்னத்தில் தனித்துப் போட்டியிட்டு வெற்றி பெற்றது என ஹஸன் அலி ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

இது இவ்வாறிருக்க, வட கிழக்குக்கு வெளியே அரசுடன் இணைந்து போட்டியிட மு.கா. விரும்புவது போல் தெரிகிறது. எவ்வாறாயினும், கட்சியின் அரசியல் அதியுயர் பீடம் கூடிய பின்னரே இறுதி முடிவு எடுக்கப்படும் என மு.கா. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இப்போது பிராந்திய மட்டங்களில் இது தொடர்பாக அக்கட்சி ஆராய்ந்து வருகிறது.

மு.கா.வின் தீர்மானம் ஆளுங் கட்சியுடனான அதன் உறவுகளில் முக்கிய தாக்கம் செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இலங்கை இந்தியாவுக்கு எதிராக செயற்படாது



எந்த நாட்டின் அழுத்தங்களுக்கும் அடிபணிந்து, இலங்கை அரசாங்கம் இந்தியாவுக்கு எதிராக செயற்படப் போவதில்லை என அமைச்சர் ஏ.எச்.எம் பௌசி தெரிவித்துள்ளார்.

தமிழகம் கீழைக்கரையில் இடம்பெற்ற மேல் மாகாண ஆளுனர் அலவி மௌலானாவின் உறவினர் ஒருவரது திருமண நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

## முஸ்லிம்களின் பயங்களுக்கு ஒரு முடிவு காணப்படாவிட்டால் நிரந்தரத் தீர்வு சாத்தியமில்லை: புளொட் தலைவர் சித்தார்த்தன்

வட கிழக்குப் பிரச்சினைகளைத் தீர்க்கின்ற போது முஸ்லிம்களின் பயங்கள் அபிலாஷைகளுக்கு ஒரு முடிவு காணாவிட்டால் நிச்சயமாக அதுவொரு நிரந்தரமானதும் முழுமையானதுமான தீர்வாக இருக்க முடியாது என புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் வாரப் பத்திரிகையொன்றுக்கு அளித்த நேர்காணலின்போது தெரிவித்துள்ளார்.



முஸ்லிம் காங்கிரஸ் மட்டுமல்ல, ஏனைய முஸ்லிம் கட்சிகளுடனும் பேசுவதற்கு தயாராக இருக்கின்றோம். அனைத்துத் தரப்பினருடனும் பேசி வடக்கு கிழக்குக்கு முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளை, அவர்களின் பயத்தை நீக்கக்கூடியதொரு தீர்வை அணுக வேண்டும். அதைப் பெற்றெடுக்க வேண்டும் என்பதுதான் எமது நோக்கமாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.




மீள்பார்வையில் வினாவிடைப் போட்டிகள் இடம் பெற்றால் நன்றாக இருக்கும்.
-எச்.எம். முனாப், வரிப்பத்தான்சேனை-

ஐவரிகோஸ்டில் இடம்பெறும் அரசியல் அதிகாரப் பிரச்சினை தொடர்பான தகவல்களை வழங்கியமைக்கு நன்றி. முயற்சியும் மனநிறைவுமே வாழ்வில் வெற்றிபெறுவதற்கான அடிப்படை விதிகள் என்பதை நிரூபித்துக் காட்டியிருக்கும் இர்ஷான், அப்கர் ஆகிய இருவரினதும் அர்ப்பணிப்புகள் முஸ்லிம் மாணவர் சமூகத்திற்கு சிறந்த முன்னுதாரணம். -சரீப்டீன் பாத்திமா ஸப்னா, மூதூர்-

மீள்பார்வையில் தொழுகை பற்றிய விடயங்கள் இடம்பெற்றால் சிறப்பாக இருக்கும். -எச்.எம். முஸ்தாக்-

'திரும்பி வராத கிளி', ஆறு வருடம் சென்ற பின்பும் கண் கலங்க வைத்தது.
-அஷ்கர், வெலிகம-

மீள்பார்வையில் இடம்பெறும் செய்திகள், கருத்துக்கள் தரமாக உள்ளன. ஒவ்வொரு முஸ்லிம் சகோதரரும் கட்டாயம் படிக்க வேண்டிய இதழ் மீள்பார்வை. -ரிஹ்மி முஹம்மத், கஹட்டோவிட-

மீள்பார்வை 212ஆவது இதழில் கிண்ணியா அமீர் அலி எழுதிய 'திரும்பி வராத கிளி' எனும் சுனாமி பற்றிய சிறுகதை சிறப்பாக இருந்தது. அவருக்கு எனது நன்றிகள். -ஏ.எம். அக்ரம், பாலைநகர்-

மீள்பார்வையில் வெளியாகும் அனைத்து ஆக்கங்களும் சிந்தனையைத் தூண்டுகின்றன, மாஷா அல்லாஹ். இலகுவாக வாசகர்களின் உள்ளத்தில் உணர்வுகளை ஏற்படுத்தி விடுவது இதன் சிறப்பம்சம். -பாஹிம், பலாங்கொடை-

ராஷித் அல் கனூஷியின் கட்டுரைத் தொடர் சிறப்பாக இருக்கிறது. இலங்கை தஃவா களம் தொடர்பான தொடர் ஒன்று வர வேண்டும் என எதிர்பார்க்கிறேன்.
-மபாஸா தஸ்லீம், திஹாரிய-

கடந்த இதழில் முதலாம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்த கிணற்றின் புகைப்படம் மிக மோசமாக இருந்தது.
-இக்பால், ஹெம்மாதகம-

நான் ஆங்கில மொழி மூலம் கற்கின்ற ஒரு மாணவன். நான் மீள்பார்வையை தொடர்ந்து வாசித்து வருகின்றேன், ஜஸாகல்லாஹ்.
-அஹ்மத் ஷரீஹ், கொழும்பு-

மனித வாழ்வின் யதார்த்தங்களையும் பிரச்சினைகளையும் பேசுவதற்கு மீள்பார்வையில் ஒரு பகுதி ஒதுக்கப்படுமானால் இன்னும் நன்றாக இருக்கும்.
-ஸசான் ஏ. ஸலாம், படுபிட்டிய-

'எம்.எச்.எம். அஷ்ரப் முஸ்லிம் காங்கிரஸின் காவிய நாயகன்' எனும் கட்டுரையை மொழியாக்கம் செய்த நா. கிருஷ்ணராஸாவிற்கு வாழ்த்துக்களும் நன்றிகளும். எமக்குத் தேவை முஸ்லிம் அரசியல் விமர்சகர்கள் மட்டுமல்ல, சிறந்த முஸ்லிம் அரசியல்வாதிகளும்தான். -நௌஷாத், நிலாவெளி-

அறபுலகத்திற்கு மட்டும் அறிமுகமாகியிருந்த அறிஞர்களையும் அவர்களின் கருத்துக்களையும் இலங்கையர்களுக்கு அறிமுகம் செய்த பெருமை மீள்பார்வை வெளியீடுகளையே சாரும். -இனாஸ்-

மீள்பார்வையே, சிந்தனைப் போராட்டக் களத்தின் சோதனைக் களம் இது. கவனமாய் உன் பயணப் பாதையை செப்பனிடு. நாளை இந்தத் தேசத்திலும் பேனா முனைகளால் உருவான சிந்தனைகள் குருதிக்குப் பதிலாய் இஸ்லாத்திற்காய் கொடுக்கப்படட்டும். -ரிஸ்னியா ராஸிக், ஹெம்மாத்தகம-

மீள்பார்வை காலத்தின் தேவைக்கு ஏற்ப தனது கருத்துக்களை தரமாக ஒழுங்கமைக்கின்றது. விடயதானங்களை நடுநிலைமையாக அணுகும் அதன் முறை பாராட்டத்தக்கது. அதன் பணிகள் இன்னும் தொடரட்டும்.
-ஹஸீன் ஹனீபா, இர்பானிய்யா வளாகம்-

212ஆவது இதழில் அரசியல் பாடம் கற்பிக்கும் முஸ்லிம் ஆசிரியர்களுக்கு என்ற பகுதி தொடருமா? -எம்.எஸ். நவீத், கிண்ணியா 4-

மீள்பார்வையின் உள்ளடக்கங்கள் புதுப்பொலிவு பெற்றுள்ளதை உணர முடியுமாக உள்ளது. அதன் ஆக்கபூர்வமான கருத்துக்கள் பாரியளவில் சிந்தனை மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது என்பது எனது கணிப்பு. மீள்பார்வையின் பணிகள் தொடர பிரார்த்திக்கின்றேன். -ஸமீரா சம்ஊன், தெல்தோட்டை-

212ஆவது இதழில் 'எனது புதுவருட அன்பளிப்பு' என்ற ஆக்கம் உண்மையிலேயே மிகச் சிறப்பாக இருந்தது. உள்ளத்தில் ஆன்மீக உணர்வுகளை தட்டியெழுப்பியது. -ஷரீப் ஸிபான், கிண்ணியா-

கண்ணீர் வர வைத்த கிண்ணியா அமீர் அலியின் 'திரும்பி வராத கிளி' ஆக்கத்திற்கு மனமார்ந்த நன்றிகள். -ஏ.ஏ. நவாஸ், குரீகொட்டுவ-

சென்ற இதழில் இடம்பெற்ற முஸ்லிம் அரசியல் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கட்டுரை வரவேற்கத்தக்கது. இஸ்லாமிய அரசியல் கருத்தியல்களோடு மோதும் நவீன அரசியல் கருத்தியல்களின் குறைபாடுகள் குறித்து இதுபோன்ற ஆக்கங்கள் தொடர்ந்து வர வேண்டும் என எதிர்பார்க்கிறோம்.
-ரிஸாஸ் முஹம்மத் - இர்பானிய்யா வளாகம்

**வாசகர்கள் மீள்பார்வையில் வெளிவரும் செய்திகள், ஆக்கங்கள் தொடர்பான தமது கருத்துக்களை வழமை போன்று கடிதம் மூலமாகவும் மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பலாம். குறுஞ்செய்தி மூலம் (SMS) கருத்துக்களை அனுப்புவோர் தமது பெயர், ஊர் என்பவற்றை குறிப்பிட மறக்க வேண்டாம். [ஆ-ர்] - 0772227569**

## சொல்வதை தெளிவாகச் சொல்லுங்கள்

கருத்துக்களம்

**கருத்துக் களத்தில் எழுதப்படுவன வாசகர்களின் கருத்துக்களே. மீள்பார்வையின் உத்தியோகபூர்வ கருத்தாக அவை இருக்கவேண்டும் என்ற அவசியமில்லை (ஆ-ர்)**

### அரசியல் பாடம் கற்பிக்கும் முஸ்லிம் ஆசிரியர்களுக்கு கட்டுரை தொடர்பாக...

கடந்த மீள்பார்வை இதழ்களில் (211, 212) மேற்படி தலைப்பில் கட்டுரை எழுதப்பட்டிருந்தது. அது மேற்கத்தேய ஜனநாயகத்துக்கும் இஸ்லாமிய ஜனநாயகத்துக்குமான ஒரு ஒப்பீடாகக் காணப்பட்டது மட்டுமல்லாமல் இறைமை அல்லாஹ்வுக்குரியது எனும் இஸ்லாமிய அரசின் அடிப்படையையும் சுட்டிக் காட்டியிருந்தது.

இதேபோன்று, விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு... எனும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதி மனிதன் பரிணாம வளர்ச்சிக் கொள்கை (டாவினிஸம்) மூலம் வந்தவனல்ல என்றும் உலகம் வெடிப்புக் கொள்கை மூலம் (Big Bank Theory) உருவானது எனும் அலெக்ஸான்டர் பிரட்மனின் விஞ்ஞானக் கூற்றிலிருந்து தோன்றியதுமில்லை. மாறாக மனிதன் உட்பட பிரபஞ்சம் அதிலுள்ள அனைத்தும் அல்லாஹ்விடமிருந்து திட்டமிடப்பட்ட முறையில் உருவாக்கப்பட்டவை எனும் இஸ்லாத்தின் உறுதியான நிலைப்பாட்டை சொல்ல வேண்டும்.

மேலும், வரலாறு, புவியியல், குடியுரிமைக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு எனும் தலைப்பில் மேற்கத்தேய கல்வி மனிதனின் அடிப்படைத் தேவைகளாக உணவு, உடை, உறையுள், சுகாதாரம் போன்ற சட ரீதியான தேவைகளைக் காட்டுகின்றது. ஆனால், மனிதனின் உயர்ந்த ஆன்மீகத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டால்தான் உளஅமைதி நிலவும் எனும் இஸ்லாமிய கல்விக் கொள்கையின் யதார்த்தத்தையும் விளங்கப்படுத்த வேண்டும்.

ஆக மொத்தத்தில் மேற்கத்தேய கல்விக் கொள்கையே இவ்வாறுதான் உள்ளது.

இதனைத்தான் துருக்கிய நாட்டு இஸ்லாமிய அறிஞர் பதுர்ஸமான் அஸ்ஸனூஷி ''எவ்வாறு ஒரு பைத்தியக்காரனுடைய ஆடை ஒரு நல்ல மனிதனுக்குப் பொருந்தாதோ அவ்வாறே மேற்கத்தேயக் கல்விக் கொள்கை உலகுக்குப் பொருந்தாது'' என விமர்சித்துள்ளார்.

எனவே, நாம் எல்லோரும் இன்று எமது கல்விக் கொள்கையை எவ்வாறு இஸ்லாமியமயமாக்கலாம் (அறிவை இஸ்லாமியமயப்படுத்தல்) எனும் ஒரு நிலைப்பாட்டில் ஒன்று சேர்ந்து எமக்கான ஒரு கல்விக் கொள்கையை உருவாக்கும் காத்திரமான பணியை மேற்கொள்ள வேண்டும்.

தென் ஆபிரிக்காவில் சிறுபான்மையினராக வாழ்கின்ற முஸ்லிம்களால் அவர்களுக்கான தனியான இஸ்லாமியக் கல்விக் கொள்கையை உருவாக்குவது சாத்தியமென்றால், ஏன் எங்களால் முடியாது? எனவே, இவை போன்ற ஆழமான கருத்துக்களை விதைத்து சமூகத்தின் புத்திஜீவிகளின் சிந்தனையைக் கிளர வேண்டும்; தட்டியெழுப்ப வேண்டும்.

எனவே, மீள்பார்வை அந்த வகையில் ஒரு காத்திரமான பணியை மேற்கொள்கின்றது (மாஷா அல்லாஹ்). நானும் தலைப்போடு பொருத்தமான பாடத்தைக் கற்பிக்கும் ஆசான் என்ற வகையிலும், முஸ்லிம் சமூகத்தின் அங்கத்தவர் என்ற வகையிலும் இக்கருத்தினை உரிமையுடன் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நௌபாஸ் ஜலால்தீன் (B.A.)

ஆசிரியர் - பொத்துவில்.


# VACANCIES
## AMANA INTERNATIONAL SCHOOL

AMANA International School (AIS) is one of the pioneer private schools in Colombo, harnessed by qualified and experienced staff members. It has embarked on a massive restructuring and development process under a new and internationally trained leadership.

Thus, AMANA is looking for a few more qualified and experienced staff members to increase the staff capacity and school resources as to face the growing needs of 2011. AMANA is a place that leads you for personal and professional development and assures an equal opportunity to all.

| VACANT POSITIONS | REQUIREMENTS |
| --- | --- |
| Director of Studies | - Degree/Master's Degree (Male/Female) |
| Counsellor | - Diploma in Counselling |
| English Teacher (Secondary) | - Degree / A/L in English + 3-year experience |
| Sinhala Teacher (Secondary) - 2 | - Degree / A/L with experience |
| Arabic & Islam Teacher | - Moulavi / Moulaviya |
| ICT Teachers - 2 | - Diploma in Computer Studies |
| Trainer : Physical Education | - A/L with Sports Interests / Martial Arts |
| Vice Principal | - Degree + 2 Years Experience |
| Science Teacher (Secondary) | - A/L Science or Degree |
| Sectional Head - Pre-School | - Montessori Diploma + 2 Years exp. (Female) |
| Primary Teachers – 6 | - Minimum A/L or Equivalent |

Proficiency in English is a must and teaching experience is always a plus. Please send in your CV with a Cover Letter to the following email or physical address by 15th of January 2010. Graduates and retired teachers from all cultural backgrounds are encouraged to apply.

**New Admission for 2011
is open now from Kindergarten to Grade 10**

**Razeen Assan, Naleemi, B.A., M.Ed. (Couns.)**
Principal,
**Amana International School,**
37, Kolonnawa Road , Kolonnawa 10600 ,
Tel: 011-2533101, Fax: 011- 2531449,
Email: amanaint@sltnet.lk, amana_international_school@yahoo.com

மீள்பார்வை
ஆசிரிய பீடத்திலிருந்து...
Meelparvai Media Centre (MMC)
06, Abhaya Place, Kolonnawa Road, Colombo 09. Tel/Fax: 0112 688341
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

## உள்ளூராட்சித் தேர்தலில் காலப் பொருத்தமான அணுகுமுறையின் அவசியம்

மார்ச் மாதம் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடைபெறவுள்ளது. இது தற்போது அமுலிலுள்ள சட்டத்தின் பிரகாரமா அல்லது புதிய திருத்தங்களின் அடிப்படையிலா நடைபெறும் என்பது அரச தரப்பிலுள்ளோருக்கே உறுதியாகத் தெரியவில்லை.

இதற்கான பிரதான காரணம், புதிய சட்ட ஏற்பாட்டின் பிரகாரம் உள்ளூராட்சி சபைகளில் வாக்களிப்புப் பிரிவுகளை வரையறை செய்ய வேண்டியுள்ளது. இது அதிக நேரத்தையும் ஆலோசனையையும் வேண்டி நிற்கும் ஒரு விடயமாகும்.

எனினும், அரசு அவசர கதியில் இதனைச் செய்ய முனைவது, அதற்கு உள்நோக்கம் இருக்கிறதோ என்ற சந்தேகத்தையே ஏற்படுத்தியுள்ளது.

இந்நாடு இன முரண்பாட்டின் உச்ச வடிவமாகிய ஆயுத போராட்டத்தின் விளைவுகளை உயிர் சாட்சியாய் அனுபவித்தவடுக்கள் இன்னும் மாறவில்லை. இவ்வாறான ஒரு தருணத்தில் சிறுபான்மை சமூகத்தினரது அதிருப்தியையும் வெறுப்பையும் அனாவசியமாக அரசு ஏன் சம்பாதிக்க வேண்டும்?

இது குறித்து அரச தரப்பிலுள்ள சிறுபான்மை அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் ஆரோக்கியமான உரையாடலை முன்னெடுக்க வேண்டும். அரச தரப்பிலுள்ள நியாயமான சக்திகளின் ஆதரவை வென்றெடுப்பது மிகவும் இன்றியமையாதது. இது தொடர்பான ஆரோக்கியமான மாற்று ஏற்பாடுகளும் ஆலோசனைகளும் முன்வைக்கப்பட வேண்டும். இதற்கான முன்முயற்சிகள் மிகவும் அவசியப்படுகின்றன.

இல்லாவிடின், சிறுபான்மை சமூகத்தினரின் எதிர்காலம் இருண்டதாக மாறிவிடும். இது குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கைகளை விரைந்து எடுத்தாக வேண்டும்.

## கொழும்பில் சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு

ஜனவரி 6,7,8,9 ஆந் திகதிகளில் கொழும்பில் சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு நடைபெறுகிறது. இதனை சர்வதேச தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் நடாத்துகிறது. கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் ஆய்வரங்கும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. 9ஆந் திகதி ஞாயிறன்று நிறைவுநாள் நிகழ்வுகள் வெள்ளவத்தை ராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

தினமும் மு.ப. 8.30 முதல் பி.ப. 1.00 மணி வரை கணினி வலைப்பதிவு, ஈழத்துத் தமிழ் இலக்கியம், ஆவணப்படுத்தல், சிறுவர் இலக்கியம், மொழிபெயர்ப்பு, சிற்றிதழ், மகளிர் அரங்கு, உலகத் தமிழ் இலக்கியம், செவ்விதாக்கம், நிகழ்த்து கலைகள், பல்துறை ஆகிய தலைப்புகளில் ஆய்வரங்குகள் நடைபெறவுள்ளன.



மீள்பார்வை
இப்போது மீள்பார்வை
தொடர்பான உங்கள்
கருத்துக்களை,
அபிப்பிராயங்களை SMS
மூலமும் அனுப்பலாம்.

கவனக் குவிப்பு
சிராஜ் மஷ்ஹூர்

# 2011 சனத்தொகைக் கணக்கெடுப்பும் முன் தயாரிப்பின் தேவையும்



இலங்கையில் 15ஆவது நாடளாவிய சனத்தொகைக் கணக்கெடுப்பு இவ்வருடம் நடைபெறவுள்ளது. இலங்கையில் முறையானதும் விஞ்ஞானபூர்வமானதுமான சனத்தொகைக் கணக்கெடுப்பு 1971ல் முதன்முறையாக நடைபெற்றது. அதிலிருந்து ஒவ்வொரு 10 வருடங்களுக்கு ஒரு முறை இது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

எனினும், 1991ல் சனத்தொகைக் கணக்கெடுப்பு இடம்பெறவில்லை. நாட்டில் உக்கிரமடைந்திருந்த போர்ச் சூழலே இதற்கு முக்கிய காரணமாகும். 2001ல் சனத்தொகைக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டாலும், அது மொத்தமுள்ள 25 மாவட்டங்களில் 18ல் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டது. இந்த வகையில் 20 வருடங்களின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட 2001 சனத்தொகைக் கணக்கெடுப்பும் பூரணமான ஒன்றாக அமையவில்லை.

ஆதலால், இவ்வருடம் நடைபெறவுள்ள சனத்தொகைக் கணக்கெடுப்பு 30 வருடங்களின் பின்னர் நாடு முழுவதும் மேற்கொள்ளப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இன்னொரு வகையில் சொன்னால் 1981க்குப் பின்னர் இப்போதுதான் முறையான விஞ்ஞானபூர்வமான சனத்தொகைக் கணக்கெடுப்பொன்று நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படுகிறது.

இம்முறை நடைபெறவுள்ள சனத்தொகைக் கணக்கெடுப்பின் புள்ளிவிபரங்களே எதிரே வரவுள்ள 10 ஆண்டுகளில் (2020 வரை) செல்வாக்கு செலுத்தும். வெறுமனே இது தரவுகளாக மட்டுமன்றி வளப் பகிர்வு, சமூக, அரசியல், பொருளாதார விவகாரங்கள், கல்வி, வேலை வாய்ப்பு... என எண்ணற்ற விடயங்களில் நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்கம் செலுத்தும்.

இவ்வாறான பல காரணிகளின் அடிப்படையில் இதன் முக்கியத்துவத்தை நாம் உணர்ந்துகொள்ள வேண்டியுள்ளது. இதில் நாம் பாராமுகமாக இருந்துவிடக் கூடாது. குறிப்பாக கடும்போக்கு சக்திகள் இதனை சிறுபான்மையினருக்கு எதிரான ஆயுதமாக மாற்றுவதற்கான சூழ்ச்சிகளில் ஈடுபடக் கூடும். அது குறித்த இரட்டிப்புக் கவனமும் நுணுக்கமும் அவசியம்.

இவ்வருடம் நடைபெறவுள்ள சனத்தொகைக் கணக்கெடுப்பில் முஸ்லிம்களது எண்ணிக்கையும் நூற்று வீதமும் அதிகரிப்பதுதான் முக்கியமான விடயமாக அமையும் என இணையத்தளமொன்றில் வாசகர் ஒருவர் பின்னூட்டல் குறிப்பில் எழுதியுள்ளார். இவ்வாறான எதிர்பார்ப்பு பரவலாக உள்ளது. அதன் காரணமாகவே நாம் விளிப்பாகவும் முன்னெச்சரிக்கையுடனும் செயற்பட வேண்டியுள்ளது.

முன்பொருமுறை தொலைக்காட்சி அரசியல் கலந்துரையாடல் ஒன்றின்போது இந்நாட்டில் சிங்களவர்களுக்கு அடுத்ததாக முஸ்லிம்களே பெரும்பான்மையாக உள்ளனர். தமிழர்கள் இரண்டாவது சிறுபான்மையினராக மாறிவிட்டனர். இது வெளிப்படையான யதார்த்தம் என புளொட் தலைவர் சித்தார்த்தன் குறிப்பிட்டதை இங்கு நினைவூட்டுவது பொருத்தமானது.

பொதுவாக, முஸ்லிம்களது சனத்தொகை 7.5% என உத்தியோகபூர்வ ஆவணங்களில் குறிப்பிடப்பட்டாலும், அது உண்மையில் 10%மாக இருக்கக் கூடும் என்ற அண்ணளவான கணிப்பு முஸ்லிம் சமூக மட்டத்தில் நிலவுகிறது. எனினும், இது இன்னமும் விஞ்ஞானபூர்வமாக நிறுவப்படாத ஒன்று என்ற வகையில், இது குறித்து அபிப்பிராய பேதங்கள் நிலவுகின்றன.

முஸ்லிம் சமூகத்தவரிடையே கூடிய சனத்தொகை அதிகரிப்பு வீதம் காணப்படுகிறது என்பதை 2001ல் நடைபெற்ற முழுமை பெறாத சனத்தொகைக் கணக்கெடுப்பின் தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன. 2001 கணக்கெடுப்பு முஸ்லிம்களையே சிங்களப் பெரும்பான்மையினருக்கு அடுத்துள்ள முதலாவது சிறுபான்மையினராகக் குறிப்பிடுகிறது எனினும், அது வட கிழக்கை உள்ளடக்கவில்லை என்பதால் அதனைச் சான்றாகக் கொள்ள முடியாது.

அத்தோடு அம்பாறை, கொழும்பு, கண்டி, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம் போன்ற மாவட்டங்களில் குறிப்பிடத்தக்க முஸ்லிம் சனச்செறிவு காணப்படுகிறது என்பதையும் அத்தரவுகள் புலப்படுத்துகின்றன. குருணாகல், கம்பஹா, அனுராதபுரம், களுத்துறை, கேகாலை போன்ற மாவட்டங்களும் இதற்கு அடுத்த நிலையில் உள்ளன. மன்னார் மாவட்டம் குறிப்பிடத்தக்க முஸ்லிம் சனச்செறிவை கொண்டிருந்த போதிலும், அவர்களுள் கணிசமானோர் பலவந்த இடப்பெயர்வு காரணமாக புத்தளம் மாவட்டத்தில் செறிவாகவும் ஏனைய மாவட்டங்களில் சிதறியும் வாழ்கின்றனர்.

அம்பாறை, திருமலை மாவட்டங்களில் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக உள்ளனர். அதேபோல மலே சமூகத்தினர் கொழும்பு மாவட்டத்தில் கணிசமாக வாழ்கின்றனர். கிழக்கு மாகாணத்திலேயே முஸ்லிம்கள் அதிகளவு செறிவாக வாழ்கின்றனர். அதற்கு அடுத்த நிலையில் மேல் மாகாணத்தில் முஸ்லிம்களது சனச்செறிவு கணிசமாக உள்ளது.

இவ்வாறான அடிப்படை அம்சங்களையும் இன்னும் அவசியப்படும் விடயங்களையும் கவனத்தில் எடுத்து 2011 சனத்தொகை கணக்கெடுப்பு தொடர்பாக முஸ்லிம் சமூகத்திற்கென்று மூல உபாயமொன்று வகுக்கப்பட வேண்டும். இதனை பள்ளிவாசல்களும் மஹல்லாக்களும் சமூக அமைப்புகளும் நடைமுறைப்படுத்தி கண்காணிக்கும் உள்ளகப் பொறிமுறை ஒன்று வகுக்கப்பட வேண்டும்.

இந்தப் பணிக்கு ஜம்இய்யதுல் உலமா போன்ற சமூகத்தின் பொது அங்கீகாரம் பெற்ற நிறுவனங்கள் தலைமையையும் வழிகாட்டலையும் வழங்க முடியும். இது குறித்து நாம் போதிய முன் தயாரிப்புகளையும் திட்டமிடலையும் செய்ய வேண்டும். இது காலத்தின் கட்டாயமாகும்.

# இலங்கை முஸ்லிம்கள் தனியான தேசிய இனம்! குறுந்தேசிய இனவாதிகளைத் தவிர அதில் யாருக்கு சந்தேகம்?

அபூ நிதால்

இரண்டு பாகங்கள் கொண்ட கட்டுரையின் முதல் பாகம்

இந்தக் கட்டுரை எழுதப்படுவதன் நோக்கம் 'தேசம் நெற்' இதழில் எஸ்.ஆர் நிஸ்தார் முகம்மட் எழுதிய 'சோனகர் என்றோர் இனமுண்டு தனியே அதற்கோர்...' என்ற கட்டுரைக்கு பின்னூட்டமிட்ட கணிசமானவர்களின் பின்னால் உள்ள காட்டமான முஸ்லிம் இன விரோதம், காழ்ப்புணர்வு கிளர்த்திய அரசியல் தூண்டல்தான் என்பது இங்கு சொல்லப்பட வேண்டிய விடயமாகிறது என்பதை இதனை வாசிப்போர் கவனத்தில் கொள்ளுமாறு கேட்கிறேன். (தேவைப்படின் அக்கட்டுரைக்கு பதிவிடப்பட்ட பின்னூட்டங்களை முதலில் வாசிக்குமாறும் தமிழ் முஸ்லிம் சகோதர சகோதரிகளை வேண்டியும் கொள்கிறேன்.) இனி நேரடியாக விசயத்திற்கு வருகிறேன்.



முஸ்லிம்கள் (இலங்கை சோனகர்) தனியான ஒரு தேசிய இனம் இல்லை என நிறுவ எடுக்கப்படுகின்ற முயற்சிகள், அரசியல் பிரச்சாரங்கள், காட்டப்படுகின்ற முன் உதாரணங்கள், கட்டவிழ்த்துவிடுகின்ற காழ்புணர்வுகள் இன்று நேற்றல்ல, இலங்கையின் அரசியல் சமூக வரலாற்றில் பல தசாப்தங்களாய் தொடர்கின்ற போக்கு ஒரு சாராரால் தொடர்ந்தும் வாழையடி வாழையாக கைக்கொள்ளப்பட்டு வருகிறது என்பதுதான். இந்த அரசியல் சமூக சிறுபிள்ளைத்தனங்களும் கடைந்தெடுத்த ஆதிக்க இனவாத சிந்தனைப் போக்கும் எமக்கு ஆச்சரியமூட்டுவதல்ல, வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறுகிறது அவ்வளவுதான்.

காலத்திற்கு காலம், இப்போது நிஸ்தார் முகம்மட் அவர்கள் (தேசம் நெற் கருதுவதால் சோனகர் இனம் பற்றி மீண்டும் பேச வேண்டியுள்ளதாக) எழுதப்போய் முன் வருகின்ற இந்த மறுத்துரைப்புக் குறித்தும் தேசம் நெற் கருதுகின்ற விவாதம் குறித்தும் தேசம் நெற் ஆசிரியர் குழு பொறுப்புடன் பதில் கூறவேண்டியதும் இந்த விவாதத்தை ஆரோக்கியமான வழியில் முன்னகர்த்த வேண்டியதும் ஆசிரியர் குழுவின் பொறுப்புமாகும்.

விவாதம், உரையாடல் என்று வருகின்றபோது முன்வைக்கப்படும் கருத்துக்கள், சொல்லாடல்கள், கடந்த காலங்களில் இவை தொடர்பாக முன்வைக்கப்பட்ட ஆதாரபூர்வமான நிகழ்வுகளுடன் சமகால யதார்த்தங்களும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை.

ஒரு சாரார் ஒரு தேசிய இனத்தை தமது அரசியல், சமூக, குறுகிய நலன்களுக்காக, எதிர்நிலை கொண்டு மறுத்துரைக்கின்றபோது, அத்தேசிய இனம் தனது தேசிய இன, அடையாளத் தனித்துவத்தை இழந்து விடும் என நினைப்பது உரலை நினைத்துக்கொண்டு அவலை இடிக்கும் கதைதான்.

இது இலங்கை முஸ்லிம்களுக்கு மட்டுமல்ல, உலகின் எந்த தேசிய இனத்திற்கும் பொருந்தக் கூடியதே. இலங்கை முஸ்லிம்கள் தம்மை எதுவாக அடையாளப்படுத்த விரும்புகிறார்களோ, அதுவாக அவர்களை அங்கீகரிப்பதுதான், தேசிய இன விடுதலையை, இனங்களின் தனித்துவத்தை, அம்மக்களின் அபிலாசையை மதிப்பவர்களின் கடமையுடன் கூடிய அரசியல் நேர்மையுமாகும்.

நான் இங்கு நிஸ்தார் தொட்டுள்ள தொன்ம வரலாற்று ஆய்வுகளுக்கு செல்லப் போவதில்லை. இலங்கையின் சுதந்திர கால கட்டத்திற்கு கிட்டிய 1930களில் இருந்தே இந்த விவகாரத்தை பேசுகிறேன். இலங்கையில் முஸ்லிம்கள் ஒரு தேசிய இனம் என தம்மை நிறுவ ஒரு எண்பது வருட அரசியல் சமூக வரலாறும் அது கடந்து வந்த பாதையும் பயணமும் போதுமானதென்றே என நான் நினைக்கிறேன். சமகால வரலாறும் நமக்கு முன்னுள்ள கிட்டிய சாட்சியமாகும்.

தற்போது மேற் கிளம்பியுள்ள இந்த விவாதத்தின் போக்கை தீவிரமாக கையில் எடுத்திருப்பவர்கள் தீவிர தமிழ் குறுந்தேசியவாதிளும் தமிழ் இனவாதிகளும் என்பது வெளிப்படையானது. இவர்களின் நிலைப்பாட்டின் பின்னால், இவர்களது சிந்தனை, மொழி, எழுத்தை தீர்மானிப்பது இவர்களது தலைக்குள் இருக்கும் மேலாதிக்க தமிழ் குறுந்தேசியவாதமே! இதனை நோக்கிய விமர்சனங்கள், அரசியல் கதையாடல்கள், மறுத்துரைப்புகள் நமக்கு முக்கியமாகப் படுவதால்தான் இந்த விடயம் பற்றி எழுதுவது பொருத்தமான சந்தர்ப்பமாகவும் உள்ளது.

இந்த இடத்தில் இன்னுமொரு விடயத்தையும் சுட்டிக் காட்டுவது பொருத்தமாக இருக்கும். தமிழ் முற்போக்கு சக்திகள், நேர்மையான அரசியலாளர்கள், சமூக இனத்துவ ஆய்வாளர்கள், செயற்பாட்டாளர்கள், தமிழ் தேசிய சக்திகளில் ஒரு பிரிவினர் நீண்ட காலமாகவே முஸ்லிம்கள் ஒரு தனித்த தேசிய இனம் என்பதை அழுத்தம் திருத்தமாக எடுத்துரைத்து வந்திருக்கின்றனர். இந்த உண்மைக்காக அவர்கள் தமது சமூக அகத்தினுள் பெரும் போராட்டத்தையே தமது எழுத்தால், கருத்தால் மேற்கொண்டு வந்திருக்கின்றனர்.

ஆகவே, இந்த விடயம் தொடர்பாக நாம் தற்போது விவாதிக்க, உரையாட வேண்டிய பிரிவினராக தமிழ் சமூகத்திற்குள் எஞ்சியிப்போர் தமிழ் குறுந்தேசிய இனவாதிகள் மட்டுமே ஆகும். இந்த தமிழ் குறுந்தேசியவாதிகளின் கருத்தியல், சிந்தனை, செயற்பாட்டு முறைமை என்பது முஸ்லிம்களுக்கு மட்டும் எதிரானதல்ல. தமது சொந்த மக்களுக்கும் கூட எதிரானதுதான். தமது இன அகத்தினுள் இருக்கின்ற தலித்துகள், பொருளாதார ரீதியாக பின்தங்கியோர், யாழ்ப்பாணத்திற்கு வெளியேயான பிற பிரதேசங்களைச் சேர்ந்தோர் என பல்வகைப்படுத்த முடியும். அத்துடன் மலையக தமிழர், இலங்கை சிங்களவர் என நாம் அடையாளம் காணமுடியும்.

(பக்.19)

# சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு: ஒரு புதுக்கதை

றியாஸ் குரானா

கடந்த காலங்களில் அதிகமும் பேசப்பட்ட விசயமாக, சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டை சொல்லலாம். ஆதரவாகவும், எதிராகவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, கையெழுத்திட்டு வெளியிடும் நிலை வரை இந்த மாநாடு பற்றிய உரையாடல்கள் நீண்டிருக்கின்றன.

இலங்கை அரசு சார்பானது அல்லது அரசு சார்பாக மாறி விடக்கூடியது என்ற ஊகங்களும், அச்சங்களும், எதிர்ப்பவர்களின் முன்வைப்புக்களாக அமைந்திருக்கின்றன.

இந்தக் குற்றச்சாட்டுக்களை மறுத்து சர்வேதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டை வரவேற்பவர்கள், சர்வதேச் தமிழ் எழுத்தாளர்களுக்கிடையிலான சிந்தனைப் பரிமாற்றம், சமூகங்கள் இடையிலான பகை மறப்பு என பல விடயங்களை சாத்தியப்படுத்த இந்த மாநாடு பயன்படும் என முன்வைத்திருக்கின்றனர்.

சிறு கதையாடல் சமூகங்களின்பால் சாய்வு கொண்டு செயற்படும் எங்களுக்கு இந்த மாநாட்டை ஆதரிப்பதே முக்கிய தேர்வாக இருக்கிறது. சர்வதேச தமிழ் எழுத்தாளர்களிடம் ஈழத் தமிழ் அரசியல், மற்றும் ஈழத்து இலக்கியம் போன்ற கதையாடல்களிலும், அவை தொடர்பான புரிதல்களிலும், வெளியிலே வைத்துப் பார்க்கப்படுகின்ற சிறு சமூகங்கள் தமது கதைகளை பேசுவதற்கும், பகிர்ந்து கொள்வதற்கும், இது முக்கிய தருணமாக அமையும் என்றே நம்பியிருந்தோம்.

அதுவே இந்த மாநாட்டை ஆதரிப்பதற்கான மிக முக்கிய காரணம். எமது எதிர்பார்ப்பு கலைந்து போகும்படி மாநாட்டு ஏற்பாடுகள் தெரியவருகின்றன. ஆகவே, புறக்கணிக்கப்பட்ட சிறு கதையாடல் நிலைப்பட்டவர்கள் தமது எதிர்ப்பையும் வெளிப்படுத்த வேண்டியது அவசியம் எனக் கருதுகிறோம்.

எமது எதிர்ப்பை துண்டுப் பிரசுரமாகவும், மாநாட்டு மேடைக் குறுக்கீடாகவும் நிகழ்த்தத் திட்டமிட்டுள்ளோம். எமது நிலைப்பாடுகளுக்கு இந்த மாநாட்டை எதிர்க்கின்ற மற்றும் ஆதரிக்கின்ற இருதரப்புகளிடமிருந்தும் ஆதரவு கிடைக்குமென்று கருதுகின்றோம். அப்படி கருதுவதற்கான காரணங்களை இவ்விரு தரப்பினரினதும் அறிக்கைகளில் எம்மால் கண்டு கொள்ள முடிகிறது.

மாநாட்டை எதிர்ப்பவர்கள் தமது அறிக்கையை ''வரலாறு நெடுகிலும் படைப்பாளிகள், கலைஞர்கள் ஒடுக்கு முறைக்கு எதிராகவும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாகவுமே சார்பு நிலை எடுத்திருக்கிறார்கள் என்று ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்கள் ஒடுக்கப்பட்ட, படுகின்ற சமூகங்கள், மக்கள் போன்றவர்களுக்கு ஆதரவாக செயற்படுவர்கள் என்ற ஒரு நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

அது போல இந்த மாநாட்டை வரவேற்பவர்கள் ''இலங்கையின் எல்லாச் சமூகத்தளங்களிலும் இருந்தும் எழுத்தாளர்களை இந்த மாநாடு ஒன்றிணைக்க வேண்டுமென விரும்புகிறோம். குறிப்பாக தலித்துகள், பெண்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் போன்ற விளிம்பு நிலையினரைப் பிரதிநிதித்துவம் செய்யும் எழுத்தாளர்கள் மாநாட்டில் முன்நிலைப்படுத்தப்பட வேண்டுமென மாநாட்டு அமைப்பாளர்களைக் கேட்டுக் கொள்கிறோம்'' என தமது அறிக்கையினை முடித்திருக்கின்றனர்.

ஆக, இருதரப்பினரும் ஒடுக்கப்பட்ட மக்களின்பால் கரிசனை கொண்டவர்கள் என தம்மை வெளிப்படுத்தியிருப்பதை அறிய முடிகிறது. இந்த இரு தரப்பினரும் ஈழத்து இலக்கிய மற்றும் அரசியல் கதையாடல்களுக்குள் விளிம்பு நிலையில் வைத்துப் பார்க்கப்படும் சிறு சமூகங்களின் அரசியல் இலக்கியச் செயற்பாடுகளுக்கு ஆதரவாக என்ன செய்யப்போகிறார்கள்?

## எழுதுகிறேன் ஒரு கடிதம்



வீரவன்சவுக்கு,

ஐ.நா. ஆலோசனைக் குழு இலங்கை வர அரசு அனுமதியளிக்கும் சமிக்ஞைகள் திடீரென்று வெளிப்படத் தொடங்கியது உங்களது வயிற்றில் புளியைக் கரைத்திருக்கும்.

ஐ.நா. ஆணைக்குழு சட்டபூர்வமற்றது என்று அதிர்ந்து பேசியவர் நீங்கள். அது மட்டுமா? இலங்கையிலுள்ள ஐ.நா. அலுவலகத்தின் முன் சாகும்வரை உண்ணாவிரதம் என்ற நாடகத்தை நடத்திய உங்களுக்கு உச்சக் கட்டத்தில் ஜனாதிபதி பானம் வழங்கி அதை சப்பென்று ஆக்கிவிட்டார்.

இப்போது வெளிவிவகார அமைச்சு சாதகமாக சமிக்ஞை வெளியிடும்போது நீங்கள் அவ்வதிகாரிகளை கீறிக் கிழிக்கிறீர்கள். அதிகாரிகள் சொந்தமாக முடிவெடுக்க மாட்டார்கள் என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும். அது தெரிந்தும் அவர்கள் நாட்டுக்குத் துரோகமிழைப்பதாக நாக் குழறுகிறீர்கள்.

உண்மையில் உங்களுக்கு 'ஆப்பு' அடித்திருப்பது மேல் மட்டமா அல்லது அதிகாரிகளா என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும் என்பதுதான் சுவாரஸ்யமான விடயம். ஆனால், மேல் மட்டத்தை எதுவும் செய்ய முடியாது என்பதால்தானே இந்த அப்பிராணி அதிகாரிகளை முறைக்கிறீர்கள்.

ஐ.நா. ஆலோசனைக் குழுவை நாட்டினுள் அனுமதித்தால் அரசாங்கம் வீடு செல்ல வேண்டி வரும் என்று நீங்கள் சேர்ந்து உருவாக்கிய தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர சாடியிருக்கிறார். அமரசேகர சாடி என்றால் நீங்கள் மூடிதானே. உயரப் பார்த்துத் துப்பினால் அது உங்கள் முகத்தில்தானே விழும்.

ஜே.வி.பி.யிலிருந்து அதிரடியாகப் பிரிந்து தேசிய சுதந்திர முன்னணியை உருவாக்கினீர்கள். அதிலிருந்து இப்போது ஒவ்வொருவராக கழன்று செல்கிறார்கள். உங்கள் ஆஸ்தான நண்பர் அச்சல ஜாகொட எம்.பி இப்போது எங்கே? உங்களது வியாபாரத்தைக் காப்பாற்றவே அரசோடு சேர்ந்திருக்கிறீர்கள். உங்களது ஆதிக்கம் எல்லை மீறி விட்டது என்று உங்களது கட்சியிலிருந்து பிரிந்து செல்பவர்களே உங்களை நோக்கி விரல் நீட்டுகிறார்கள்.

உங்களது கட்சியின் முகவரி அழிந்துகொண்டிருக்கிறது. அதுவும் கடைசியில் ஒரு ஆள் கட்சியாக -ரப்பர் ஸ்டேம்ப் கட்சியாக- மாறிவிடும்போல்தான் தெரிகிறது. பொறுத்தார் பூமியாள்வார். எகிறிப் பாய்பவர் தலை குப்புற வீழ்வார்.

-இப்படிக்கு அவதானி

# நாங்களும் இருக்கிறம்

## மாற்றுப்பிரதி வெளியிட்ட பிரசுரம்

அயல் நாடுகள் மற்றும் புலம்பெயர்ந்த தமிழ் எழுத்தாளர்களுக்கும், இலங்கையிலிருக்கும் எழுத்தாளர்களுக்கும் இடையே அரசியல், இலக்கியச் சிந்தனைப் பரிமாறலை சாத்தியப்படுத்துவதோடு அவர்கள் எதிர்காலத்தில் இணைந்து பல்வேறு இலக்கிய அரசியல் பணிகளை முன்னெடுக்கவும் இந்த மாநாடு வாய்ப்பளிக்கும் என நம்பியிருந்தோம்.

ஆனால், இன்று கொழும்பில் நடத்தப்படுகிற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு ஒரு குழு நிலை அளவிலான செயற்களத்தைக் கொண்டதாகவே உணர முடிகிறது. விரிந்த தளத்தில் இதன் உரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்குமானால் இந்த மாநாட்டின் செம்மையும் விரிவும் முக்கியத்துவமும் வேறாக அமைந்திருக்கும். அப்படி அமைக்கப்பட்டிருக்க வேண்டியது அவசியமுமாகும்.

'சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு' என்ற அடையாளப்படுத்தல் அனைத்துத் தரப்பினரையும் ஏகமாகக் கொண்டிருக்கிறது. அதே வேளை இந்தப் பொது விளிப்பின் கீழ் முக்கியமான விடயங்கள் விடுபட்டுள்ளன.

குறிப்பாக கடந்த 25 ஆண்டு கால எதிர்ப்பிலக்கியம் அல்லது ஜனநாயகத்துக்கான போராட்டம் எனக்கருதும் இலக்கியமும், அத்தோடு இருபெரும் கதையாடல்களுக்கு எதிரில் செயற்பட்ட முஸ்லிம்கள், என்றைக்குமாக மலையைச் சுமக்கும் மலையக மக்கள், தலித்கள், போராளிகளாக தம்மை அறிவித்துக்கொண்டவர்கள், பிற உதிரிகள் ஆகியோரை உள்ளடக்கிய விளிம்புநிலை இலக்கியச் செயற்பாடுகள் கவனத்திற் கொள்ளப்படவில்லை.

இந்த இலக்கியப் போக்குகளே கடந்த கால் நூற்றாண்டுகாலத்தின் மையப் போக்காகவும் பெரும்போக்காகவும் இருந்துள்ளன. பல்வேறு நெருக்கடிகளின் மத்தியில் சவால்களை எதிர்கொண்டவாறு இந்த இலக்கியப் பங்களிப்பினை ஒடுக்குமுறைகளுக்கெதிராக வழங்கிய படைப்பாளிகளும் அவர்களுடைய படைப்புகளும் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மாநாட்டின் பிரதான ஒருங்கிணைப்பாளர் திரு. முருகபூபதியுடன் பேசியபோது அவர் நெகிழ்ச்சியோடு இந்த விடயத்தை அணுகியிருந்தாலும் இறுதிவரையில் மாநாட்டில் இந்த பிரதான இலக்கியப் போக்குகளுக்கான அரங்குகள் உரிய முறையில் வழங்கப்படவில்லை. வேண்டுமானால், கட்டுரையை மட்டும் வாசிப்பதற்கான வாய்ப்பளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. இதற்காக திரு. முருகபூபதிக்கு நன்றிகள்.

ஆனால், விளிம்பு நிலை மக்கள் அல்லது மற்றமைகள் எப்போதும் பொது விளிப்பினுள்; அமிழ்த்தப்படுவது அல்லது புறக்கணிக்கப்படுவதே வழமையாக உள்ளதை இந்த மாநாடும் உறுதி செய்துள்ளது. இத்தகையதொரு புறக்கணிப்பானது இந்த மாநாட்டின் முழுமைப்பாட்டைச் சிதைப்பதுடன் பல கேள்விகளையும் எழுப்புகின்றது. முக்கியமாக 11 விடயங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கும் இந்த மாநாட்டின் அரங்குகளில் பெண்கள் தவிர முக்கியமான விடயங்களுக்கு இடமளிக்கப்பட வில்லை என்பது நம்பிக்கையீனத்தையும் தொடர்ந்து அனைத்துத் தரப்புகளோடும் போராட வேண்டும் என்ற எண்ணத்தையுமே ஏற்படுத்துகின்றன.

சம்பிரதாயபூர்வமான நிகழ்ச்சிகள் கதையாடல்களிலிருந்து விலகியிருப்பதையும் அர்த்தபூர்வமான உண்மைத் தளத்தை நோக்கிய எழுத்துப் பங்களிப்பை வழங்க முயற்சிப்பதனாலும் மாற்றுப்பிரதி மற்றும் மற்றமைகள் இந்த மாநாட்டை முழுமையாகக் கருதவில்லை என்பதை அழுத்தமாகப் பதிவு செய்து கொள்கின்றன.

தமிழ் இலக்கியம், ஈழத்து இலக்கிம் போன்று இலக்கியச் செயற்பாடுகளை நெகிழ்ச்சியற்ற முறையில் பொதுமைப்படுத்துகின்ற இறுக்கமான வரையறுத்தல்களை புறக்கணிக்கிறோம். இவ்வகைப் பொதுமைப்படுத்தல்களுக்குள் மறைத்தொதுக்கப்படுகின்ற சிறுகதையாடல்களின் பக்கம் நாம் செயற்படவிரும்புகிறோம்.

இலக்கியம், அரசியல் போன்ற வெளிகளில் சிறுகதையாடல்களுக்கான உரிய இடத்தைக் கோருகின்றோம். அதற்கான இடம் வழங்கப்படாத இம் மாநாட்டை வன்மையாக கண்டிக்கிறோம்.

# சர்வதேசத் தமிழ் எழுத்தாளர்கள் மாநாட்டை வரவேற்கிறோம்!

## இலங்கையிலிருந்தும் புகலிடத்திலிருந்தும் எழுத்தாளர்கள் கையொப்பமிட்டு அறிக்கை

இலங்கை மற்றும் புகலிடத்தில் வாழும் சமூக அக்கறையாளர்களான நாங்கள் எதிர்வரும் சனவரியில் இலங்கையில் நடக்கவிருக்கும் எழுத்தாளர்கள் மாநாட்டை வரவேற்று இந்த அறிக்கையின் கீழே கையொப்பமிட்டுள்ளோம்.

கடந்த முப்பது வருடகால யுத்தத்தால் உறவுகள் சீர்குலைந்து போயிருக்கும் தமிழ் -முஸ்லிம் -மலையக -சிங்கள எழுத்தாளர்களிடையே ஒரு பகைமறப்புக் காலத்தைத் தோற்றுவிக்கவும் இலங்கையில் தமிழ்மொழி இலக்கியத்தைச் செழுமைப்படுத்துவதற்கான ஓர் எத்தனமாகவும் பல்வேறு கருத்து -அரசியல் நிலைப்பாடுகளிலிருக்கும் எழுத்தாளர்களிடயே ஓர் ஆரோக்கியமான உரையாடலை ஏற்படுத்திக் கொடுக்கும் களமாகவும் நாங்கள் இந்த மாநாட்டைக் கருதுகிறோம்.

அயல்நாட்டு மற்றும் புலம்பெயர்ந்த தமிழ் எழுத்தாளர்களுக்கும் இலங்கையிலிருக்கும் எழுத்தாளர்களுக்கும் இடையே சிந்தனைப் பரிமாறலை சாத்தியப்படுத்துவதோடு அவர்கள் எதிர்காலத்தில் இணைந்து பல்வேறு இலக்கியப் பணிகளை முன்னெடுக்கவும் இந்த மாநாடு வாய்ப்பளிக்கும் எனக் கருதுகிறோம்.

மாநாட்டு அமைப்பாளர்கள் முன்வைத்திருக்கும் 12 முன்னோக்குகளும் மிகச் சரியானவை எனவும் அவை இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களிற்கும் தமிழ் இலக்கியத்திற்கும் நன்மை



களைச் சாதிக்கவல்லவை என்றும் கருதுகிறோம்.

இந்த மாநாடு இலங்கை அரசால் நடத்தப்படவில்லை என மாநாட்டு அமைப்பாளர்கள் பல தடவைகள் ஊடகங்களில் உறுதிமொழிகளை அளித்துள்ளார்கள். இம்மாநாட்டிற்கும் இலங்கை அரசுக்குமான தொடர்புகள் இதுவரை எவராலும் நிரூபணம் செய்யப்படவில்லை. மாநாடு மீது இவ்வாறு ஆதாரமில்லாத அவதூறுகளைச் சுமத்திய எழுத்தாளர் எஸ். பொன்னுத்துரையையும் குமுதம் ரிப்போர்டர் இதழையும் புதிய ஜனநாயகம் இதழையும் வன்மையாகக் கண்டனம் செய்கிறோம்.

இந்த மாநாட்டை நிராகரிக்கக் கோரி சர்வதேசத் தமிழ் எழுத்தாளர்கள் -கலைஞர்கள் என்ற பெயரால் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையை நாங்கள் முற்று முழுவதுமாக நிராகரிக்கிறோம். இந்த மாநாட்டை இலங்கை அரசு பயன்படுத்திக் கொள்ளக் கூடும் என்ற ஊகமே அவர்களது அறிக்கையின் மையம். இந்த ஊக அரசியல் மலிவானது. ஊகத்தை முன்னிறுத்தியே ஒரு ஆக்கபூர்வமான மாநாட்டை அவர்கள் நிராகரிக்கக் கோருவது அநீதியானது. மாநாடு அரசு சார்பாக மாறாதவரை ஊகத்தின் அடிப்படையில் அதை நிராகரிக்கக் கோருவது நியாயமற்றது எனக் கருதுகிறோம்.

இன்று இலங்கையில் ஊடகச் சுதந்திரம் அரசால் கடுமையாக அச்சுறுத்தலிற்கு உள்ளாகியிருக்கும் நிலையில் இவ்வாறான ஒரு மாநாடு தேவையா என எழுப்பப்படும் எதிர்ப்புகளையும் நாம் நிராகரிக்கிறோம்.

இந்த அச்சுறுத்தல் சூழலுக்குள்ளும் அதை எதிர்கொண்டு மாநாடு நடத்தப்படுவதையும் குழு நிலை மோதல்களிற்கு அப்பால் அரசியல் உண்மைகளைப் பேசுவதற்கு மாநாட்டில் தடையில்லை என அறிவித்திருக்கும் மாநாட்டு அமைப்பாளர்களின் நிலைப்பாட்டையும் வரவேற்கிறோம்.

கடந்த முப்பது வருட யுத்தத்தில் இலங்கை அரசு செய்த அனைத்துக் குற்றங்களையும் மனித உரிமை மீறல்களையும் விசாரணை செய்து பாதிக்கப்பட்டவர்களிற்கு நீதியும் இழப்பீடுகளும் வழங்கப்பட வேண்டும். ஆனால், அதற்காக இலங்கையில் எந்த நிகழ்வுகளையுமே நடத்தக் கூடாது எனச் சொல்லப்படும் கருத்துகளை நாங்கள் மறுக்கிறோம். குறிப்பாகத் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சியை நோக்கி நடத்தப்படும் மாநாட்டை நடத்தக் கூடாது எனச் சட்டாம் பிள்ளைத் தனம் செய்பவர்களை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இலங்கையில் மாநாடு நடத்துவது எமது பிறப்புரிமை. முப்பது வருடகால யுத்தத்தில் எழுத்தாளர்கள், கலைஞர்களிடமிருந்து இலங்கை அரசாலும் தமிழீழ விடுதலைப் புலிகளாலும் இன்னபிற ஆயுதக் குழுக்களாலும் பறிக்கப்பட்ட கருத்து - எழுத்து உரிமைகளை மீட்டெடுக்க வேண்டிய நெடிய போராட்டம் எம்முன்னே உள்ளது. அந்த நெடிய பாதையில் இவ்வாறான ஒரு மாநாடு நடைபெறுவது ஒரு முன்னேற்றகரமான புள்ளியென்றே கருதுகிறோம்.

இலங்கையின் எல்லாச் சமூகத் தளங்களிலும் இருந்தும் எழுத்தாளர்களை இந்த மாநாடு ஒன்றிணைக்க வேண்டுமென விரும்புகிறோம்.

குறிப்பாக தலித்துகள், பெண்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் போன்ற விளிம்பு நிலையினரைப் பிரதிநிதித்துவம் செய்யும் எழுத்தாளர்கள் மாநாட்டில் முன்நிலைப்படுத்தப்பட வேண்டுமென மாநாட்டு அமைப்பாளர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

இந்த மாநாட்டிற்குப் புலமைசார் பங்களிப்பையும் தார்மீக ஆதரவையும் வழங்குமாறு சர்வதேசத் தமிழ் எழுத்தாளர்களையும் கலைஞர்களையும் தோழமையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

28 டிசம்பர் 2010.

(இவ்வறிக்கையில் இலங்கையிலிருந்தும் புகலிடத்திலிருந்தும் பல எழுத்தாளர்கள் கையொப்பமிட்டுள்ளனர். இடநெருக்கடி காரணமாக அப்பெயர்ப் பட்டியலை முழுமையாகப் பிரசுரிக்க முடியாமைக்கு வருந்துகிறோம். ஆ-ர்)

Dr. ரயீஸ் அவர்கள் அக்கரைப்பற்றைச் சேர்ந்தவர். அக்கரைப்பற்று மத்திய கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்று ருஹுணு பல்கலைக்கழகத்தில் தனது மருத்துக் கல்வியைப் பயின்றார். பின் கொழும்பு பல்கலைக்கழகத்தில் சிறுவர் நோய் நல வைத்தியத் துறையில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார்.

பின்னர் மேற்படிப்பிற்காக இங்கிலாந்து சென்றார். இவர் சிறுவர் நோய் நலத் துறையிலும் அதி தீவிர சிகிச்சைப் பிரிவிலும் விசேட பட்டப் பின் படிப்பைப் பூர்த்தி செய்திருக்கிறார். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் ICU Transport Service துறையில் விஷேட சான்றிதழ் கற்கை நெறியையும் பூர்த்தி செய்திருக்கிறார். மேலும் அமெரிக்காவிலுள்ள Urea cycle எனும் நோய் தொடர்பான ஆராய்ச்சி நிறுவனத்தின் அங்கத்தவராக இருப்பதோடு அது தொடர்பான ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் சமர்ப்பித்து வருகிறார். தற்போது இங்கிலாந்தின் அரச வைத்தியசாலை ஒன்றிலும் Harly Street Clinic எனும் தனியார் வைத்தியசாலையில் அதி தீவிர சத்திரசிகிச்சைப் பிரிவின் வைத்திய அதிகாரியாகவும் இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக சிறுவர் நோய் நல மருத்துவத் துறையின் தலைவராகவும் பணியாற்றி வருகிறார். மேலும் பிரித்தானியாவைத் தளமாகக் கொண்டியங்கும் Sri Lanka Islamic Forum UK எனும் அமைப்பின் தலைவராகவும் இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. Dr. ரயீஸ் அவர் இஸ்லாமிய தஃவா துறையில் அதிக ஈடுபாடும் அக்கறையும் கொண்டவர். அண்மையில் அவர் இலங்கை வந்திருந்தபோது அவருடன் மீள்பார்வை மேற்கொண்ட நேர்காணலை வாசகர்களோடு பகிர்ந்து கொள்கிறோம்.

சந்திப்பு: இன்ஸாப் ஸலாஹுத்தீன்

# மாற்றுக் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதல்ல; அவற்றை மதிக்க வேண்டும்

## Dr. ரயீஸ்



**நீங்கள் ஒரு முஸ்லிம் மருத்துவர் என்றவகையில் உங்களது மருத்துவம் சார்ந்த அனுபவங்களை பகிர்ந்து கொள்ள முடியுமா?**

உண்மையில் ஒரு முஸ்லிம் வைத்தியனாக இருக்கின்றபோது, அல்லாஹ்வின் அற்புதங்களைக் காண முடியுமாக இருக்கின்றது. மனித உடலே மிகப் பெரும் அத்தாட்சியாக இருக்கின்றது. மனித உடலின் கட்டமைப்பைப் பார்க்கின்றபோது அல்லாஹ்வின் இருப்பை விஞ்ஞானபூர்வமாக உணர முடிகின்றது.

மேலும் ஈமானை அதிகரிப்பதற்காக பலரும் பல வழிமுறைகளைக் கையாள்வதைப் பார்க்கலாம். என்னைப் பொறுத்தவரையில் சிலவேளை தொழுகையில் அதிகரிக்காத ஈமான் சத்திர சிகிச்சை அறையினுள் அதிகரிப்பதனைக் காண்கிறேன். இருதய சத்திர சிகிச்சை நடைபெறுகின்றபோது அங்கு இதயம் துடிப்பதைக் காணும் போது படைப்பின் ஆற்றலைப் பச்சையாகக் காண முடிகின்றது. இதயத்தை வெறுமனே இதயம் என்று பார்ப்பதனைவிட அதனை அல்லாஹ்வின் ஆற்றல் என்று நினைத்துப் பார்க்கும்போது ஈமானின் உச்சத்திற்கே செல்ல முடியுமாக இருக்கின்றது.

என்னைப் பொறுத்தமட்டில் கற்பனையாக இல்லாமல் யதார்த்தமாகவே ஈமானை சுவைக்க முடிந்தது. எனது தக்வாவை அதிகரிக்க ஒரு வழிமுறையாகக் கூட நான் வைத்தியத் துறையை பயன்படுத்துகின்றேன்.

**நீங்கள் 'அல்ஹஸனாத்' சஞ்சிகையில் 'எனது டயரியின் மறுபக்கம்' என்ற தொடர் பத்தியை எழுதி வந்தீர்கள். அது அதிக வரவேற்பைப் பெற்றது. அந்த அனுபவம் குறித்து...**

பொதுவாக மனிதர்கள் வைத்தியர்களை பெரிதாக மதிப்பார்கள். வைத்தியர்களை அவர்கள் பல மடங்கு மேலாக நம்புகிறார்கள் என்றே நான் கருதுகின்றேன். மனிதர்களுக்கு வருகின்ற நோய்கள் மற்றும் அதன் தன்மைகள் பற்றி சகல விடயங்களும் வைத்



தியர்களுக்குத் தெரியும் என்றுதான் மக்கள் நினைக்கின்றார்கள். ஆனால், யதார்த்தம் அதுவல்ல. மனித உடல் என்பது மிகப் பெரிய அற்புதமாகும். அதில் வைத்தியர்கள் அறிந்த விடயங்களை விட அறியாத விடயங்கள்தான் அதிகமாகும்.

மேற்கத்திய வைத்தியம் அதனை ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் அதுதான் யதார்த்தம். மேற்கத்தேய வைத்திய ஆராய்ச்சியின் உச்சங்களை சந்தித்தவன் என்ற வகையில்தான் நான் இதனைக் கூறுகின்றேன். என்னிடம் பல மாதிரியான நோயாளிகள் வந்து செல்வார்கள். உண்மையில் மனிதனின் சமநிலை குழம்பும்போது எவ்வளவு பெரிய பிரச்சினை வருகின்றது? எனவே எங்களை சமநிலை குழையாமல் வைத்திருக்கும் அல்லாஹ்வைப் புகழ வேண்டும் என்ற உணர்வு அடிக்கடி வரும். அப்படி ஒரு பார்வை என்னிடம் வந்தது. இதனை மற்றவர்களும் அனுபவிக்க வேண்டும் என நினைத்தேன். அதனால்தான் அந்தத் தொடரை எழுத ஆரம்பித்தேன். அதில் இருக்கின்ற ஒவ்வொரு சம்பவமும் நான் கண்ட நிகழ்வாகும். அவை கற்பனையல்ல, உள்ளத்தால் உணர்ந்து எழுதியதாகும். எனவே, அந்த எழுத்துக்கள் உள்ளங்களை போய்ச் சேர்ந்திருக்கின்றன.

**ஐரோப்பாவின் இஸ்லாமிய தஃவா செயற்பாடுகளை நோக்கும்போது இலங்கை தஃவா சூழலுக்கு நாம் என்ன மாதிரியான படிப்பினைகளை எடுத்துக் கொள்ளலாம் எனக் கூற முடியுமா?**

ஐரோப்பாவின் இஸ்லாமிய அமைப்புகள் மற்றும் அதன் செயற்பாடுகளுக்கும் இலங்கைக்கும் இடையில் நாம் நிறைய வித்தியாசங்களைக் காணலாம். அங்கிருக்கின்ற மக்கள் பரஸ்பரம் மற்றவரை ஏற்றுக்கொள்கின்றவர்களாக இருக்கின்றார்கள். தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் எனும் தன்மை இங்கிருக்கின்றது. சுயவிமர்சனம் சார்ந்த மதிப்பீடுகள் எமது சமூகத்தில் இல்லை. அதேபோல மற்றவரை ஏற்றுக்கொள்கின்ற மனப்பாங்கும் இங்கு இல்லாமல் இருக்கின்றது. ஒவ்வொருவருக்கும் ஒரு பார்வைக் கோணம் இருக்கின்றது. கருத்து வேறுபாடு என்பது இயற்கையாகும். அந்த இயற்கையை நாம் ஒரு பிரச்சினையாக ஆக்கிக் கொள்ளக் கூடாது.

வித்தியாசமான கருத்துக்களை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதில்லை. ஆனால் அவற்றை மதிக்க வேண்டும். ஒரு தனிநபரோ இயக்கமோ ஒரு கருத்தில் இருக்கின்றது என்றால் அதற்கு நியாயங்கள், பின்னணிகள், ஆதாரங்கள் இருக்கின்றன. எனவே அவற்றை மதிக்கப் பழக வேண்டும். பரஸ்பரம் புரிந்துணர்வுடன் அனைவரும் ஒன்றிணைந்துதான் இஸ்லாமிய தஃவா செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும். இது ஐரோப்பிய இஸ்லாமிய அமைப்புக்களிடமிருந்து பெற வேண்டிய ஒரு முக்கியமான படிப்பினையாகும்.

மற்றது ஐரோப்பாவில் இஸ்லாம் பரந்த அளவில் விவாதிக்கப்படுகிறது. இஸ்லாம் ஒரு பேசு பொருளாக மாறியிருக்கின்றது. ஆனால், இங்கு அந்த நிலைமையை நாம் காண முடியாது. அதற்கு நாங்கள்தான் காரணம். ஏனெனில், எமது தஃவாவின் எல்லை குறுகியதாக இருக்கின்றது. ஒவ்வொருவரும் தங்களுக்கென்று சில எல்லைகளை வைத்துக் கொண்டு செயற்படுகிறார்கள். நிச்சயம் அதிலிருந்து வெளிவர வேண்டும். அனைவரும் ஒன்றிணைந்து எல்லோருக்கும் பொதுவான பணிகளில் ஈடுபட வேண்டும்.

**உங்களது பார்வையில் இஸ்லாமிய செயற்பாடுகளில் முதன்மைப்படுத்த வேண்டிய அம்சங்களாக எதனைக் காண்கிறீர்கள்?**

உண்மையில் இது ஷரீஆ துறையோடு சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்க வேண்டியது என நினைக்கிறேன். முதன்மைப்படுத்தல் என்பது இடங்களுக்கேற்ப மாறுபடக்கூடியது. என்னைப் பொறுத்தவரையில் இஸ்லாத்தை முஸ்லிம் அல்லாதவர்களுக்கு அறிமுகப்படுத்துவதில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும் என நினைக்கிறேன். இஸ்லாம் என்பது ஒரு பொக்கிஷம். அதனை நாம் மட்டும் வைத்துக் கொண்டு பயன்பெறாமல் ஏனையோருக்கும் கொடுக்க வேண்டும். பல இஸ்லாமிய அமைப்புக்கள் தஃவாவில் ஈடுபட்டு வருகின்றன. அவை நல்ல பல விளைவுகளைக் கொண்டு வந்திருக்கின்றன என்பதனை நான் மறுக்கவில்லை. ஆனால், அவற்றின் Output பாரியளவில் வரவில்லை என்றே எண்ணுகின்றேன். அதில் போதாமை காணப்படுகின்றது.

இதற்குக் காரணம் நாம் இஸ்லாத்திற்கு தலைமைத்துவத்தைப் பெற்றுக்கொடுக் காமையாகும். எனவே, தஃவாவின் பிரதிபலிப்பை சக்திவாய்ந்ததாக மாற்றவேண்டும். அப்படியாயின் தலைமைத்துவத்தை இஸ்லாத்திற்கு வழங்க வேண்டும்.

**ஐரோப்பிய நாடுகளில் செயற்படும் இயங்கங்களது பொது இணைப்பு அவசரமாக சாத்தியப்பட்டுள்ளது. அப்படியானால் ஏன் இங்கு அது அவசரமாக சாத்தியப்படவில்லை. அதற்கான சாத்தியங்கள் இருக்கின்றனவா?**

சாத்தியங்கள் நிச்சயமாக இருக்கின்றன. அதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. இதனை நான் மனப்பாங்கு சம்பந்தப்பட்ட விடயமாகவே பார்க்கிறேன். ஐரோப்பாவில் பொதுவாக எல்லாவற்றையும் பரந்துபட்ட பார்வையிலும் Positive ஆகவுமே பார்ப்பார்கள். அங்குள்ள பரீட்சை முறையில் உங்களுக்கு எது தெரியும் என்று பரீட்சிப்பார்கள். ஆனால், இங்கு உங்களுக்கு எது தெரியாது என்றுதான் பார்ப்பார்கள்.

Positive மனப்பாங்கையும் முரண்பாடுகளில் உடன்பாடு காணும் தன்மையையும் நாம் வளர்த்துக் கொண்டால் இங்கும் அதனை விரைவாக சாத்தியப்படுத்தலாம். அந்த மாற்றம் முதலில் தலைமைகளிடத்தில் வர வேண்டும். அண்மைக் காலத்தில் இயக்கங்களுக்குள் நல்ல உறவுகள் வளர்ந்திருக்கின்றன. இது மிகுந்த சந்தோஷத்தை அளிக்கின்றது. இப்படி நல்ல உறவுகளை மேம்படுத்த வேண்டும் என்பது இலங்கையில் நான் செய்ய நினைக்கும் பணிகளில் ஒன்றாகும். எல்லோரும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற வேண்டும் என்றுதான் செயற்படுகிறார்கள். ஆனால் வழிமுறைகள்தான் வித்தியாசப்படுகின்றன.

இந்த சமூகத்திற்கான வழிகாட்டல்களை அனைவருமாகச் சேர்ந்துதான் செய்ய வேண்டியிருக்கின்றது. இலங்கை தஃவாச் சூழலில் நல்ல பல மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. அதற்கான அறிகுறிகளை நாம் காண முடியுமாக உள்ளது.

# உயர்தர அரசியல் பாடம் இஸ்லாமிய நோக்கு

ஓர் ஜனநாயக அரசாங்கமானது அதன் அதிகாரத்தை ஆளப்படுவோரின் முழுமையான சம்மதத்துடன் பெற்றுக் கொள்ள ஜனநாயக ரீதியான பிரதிநிதித்துவ தேர்தலிலேயே தங்கியிருக்கின்றது. தேர்தல்கள் ஜனநாயக ரீதியில் அமைய, அவற்றுக்கு குறிப்பான சில பண்புகள் அவசியம். தனியாதிக்கமுடைய அரசொன்றில் நடைபெறும் பொதுத் தேர்தல், தனிக்கட்சி அல்லது தனி வேட்பாளர் எவ்வித மாற்றுத் தெரிவுமின்றி போட்டியிட்டால் அதனை ஜனநாயகம் என அழைக்க முடியாது.

சுதந்திரமான நடுநிலைமையான மற்றும் ஜனநாயக ரீதியான பொதுத் தேர்தல் போட்டி வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்பதே இதன் மறு அர்த்தமாகும். ஆனால், உலகின் பல நாடுகளில் ஜனநாயகம் நேர்மையாகவும் போட்டித் தன்மையுடனும் நடைபெறுகின்றதா என்பது கேள்விக் குறிதே.

எவர் ஒருவரும் போட்டியிடக் கூடியவராய் இருத்தல் வேண்டும் என்பதுடன் போட்டியிடுபவர்கள் அரசாங்கம் பற்றிய தமது விமர்சனங்களை அல்லது ஏனைய எதிரணிகளுக்கு எதிரான விமர்சனங்களைக் கூறக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும். அவர்கள் கூட்டம் கூடுவதற்கும், இடத்திற்கு இடம் செல்வதற்கும் சுதந்திரம் இருத்தல் வேண்டும். தேர்தல் ஒன்று பெருமளவுக்கு வயது வந்தோர் சனத்தொகையைக் கொண்டிருத்தல் வேண்டும். இத்தகைய அரசாங்கமானது ஒரு சிறப்புரிமையுடைய குழுவினால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கமாக இருக்குமானால் அதுவும் ஜனநாயகமாகாது.

காலா காலம் தேர்தல் நடைபெற வேண்டும். இதன் பொருள் என்னவெனில் ஜனநாயகத்தில் அரசாங்கம் அல்லது நிருவாகத் தலைவர்கள் வாழ்நாள் முழுவதும் அல்லது நீண்ட காலத்திற்கு அதிகாரத்தில் இருப்பதாக வாக்களிக்கப்படவில்லை. ஓர் ஆட்சியை அதிகாரத்திலிருந்தும் விலக்குவதற்கு மக்களுக்கு சந்தர்ப்பத்தை வழங்க தேர்தல் அவசியம். மக்களிடம் பெறும் நம்பிக்கையையும் அனுபவத்தையும் ஓர் அரசாங்கம் கால அளவில் நீடிக்க முடியாது என்பதை இது காட்டுகின்றது. ஆனால், பல நாடுகளில் மக்களின் நம்பிக்கையையும் அனுபவத்தையும் அரசாங்கம் நீண்ட காலத்திற்கு துஷ்பிரயோகம் செய்வதைக் காணலாம்.

ஜனநாயகம், கொடுங்கோண்மை, புரோகிதர் ஆட்சி போன்ற ஆட்சி முறைகளை விட முன்னேற்றகரமானது என்பதில் சந்தேகமில்லை. மனிதர்களுக்கிடையிலான சமத்துவத்தை நிலைநாட்டுவதிலும் தனிநபர் சுதந்திரத்தின் எல்லைகளை விரிவுபடுத்துவதிலும் ஜனநாயகத்தின் பங்கு குறிப்பிடத்தக்கது. ஆனாலும் அதற்கு இன்னொரு பக்கம் உள்ளது. சர்வ வல்லமையையும் ஆள்கின்றவர்களுக்கு வழங்கிய புரோகித ஆட்சியை நிராகரிக்கும் வகையில் தோன்றியதால் ஜனநாயகம் தன்னை மதச்சார்பற்றதாகவே பிரகடனப்படுத்தியுள்ளது. இது ஜனநாயகம் குறித்து முன் சொன்ன சில முன்னேற்றகரமான விடயத்திற்கு முற்றிலும் நேரெதிரான விடயமாகும்.




எப்போது மதம் ஜனநாயகத்திற்கு வெளியேயான விடயமாக மாறிப் போனதோ அப்போதே ஒழுக்கவியலும் வேண்டப்படாத ஒரு விடயமாகப் போய்விட்டது. அது மதங்களுடன் தொடர்புபட்ட தனிமனிதர்களின் சொந்த விடயமாக கருதப்படலாயிற்று. இதன் துரதிஷ்டமான விளைவு தான் அரசியலில் ஈடுபடும் மனிதனுக்கு பொருத்தமான தெரிவு முறை இல்லாததும், அவனுக்கு வழிகாட்டும் விடயம் இல்லாததுமாகும். தற்கால மேற்கின் சிந்தனையாளர்களிடம் பொதுவான ஒரு போக்கு நிலவுகின்றது. அதாவது, பெரும்பான்மையினர் தீர்மானித்த விடயம் என்பதற்காக அதனை எல்லா நிலைகளிலும் சரியென ஏற்றுக் கொள்வது பிழையானது. இதுவோர் அதிஷ்டவசமான நிலைப்பாடு தான். இதன்மூலம் மனித நடத்தையை தீர்மானிக்கின்ற ஒரு நிலையான குறிக்கோளின் அவசியம் இப்போது உணரப்படுகின்றது.

இத்தாலிய தேச பக்தர் மாஸினி பின்வரும் கருத்தை முன்வைக்கின்றார்: ''பொதுவாக பெரும்பான்மை இனத்தவரின் கொள்கை, கோட்பாடுகள் பெரும்பான்மை அல்லாத மக்களிடையே என்ன செய்ய முடியு மென்றால் பெரும்பான்மை இனத்தவர்களின் நலன்களைப் பாதுகாத்து சிறுபான்மையினரை வென்றடக்கலாம். நாம் கடவுள், தனிமனிதன் அல்லது சில மனிதர்கள் என்ற அதிகாரத்தின் கீழ் அடக்கப்பட முடியும்.''

உண்மையில் மனிதனை மிகைத்த ஓர் அதிகாரத் தலைமை இல்லாவிடில் பலமிகு தனிமனிதர்களின் அடக்குமுறையிலிருந்து எங்களைப் பாதுகாப்பதாகக் கூறுவதில் என்னதான் உண்மை இருக்கின்றது. எம்மிடம் மனிதரல்லாத ஒருவனால் இயற்றப்படாத நிலையானதும் புனிதமானதுமான சட்டம் இல்லாவிடின் எம்மால் சரியானதையும் பிழையானதையும் பகுத்தறிய முடியாமல் போகும். இறைவனல்லாத அதிகாரத்தில் இருக்கும் எந்த ஒருவரும் கொடுங்கோண்மையாளராகவோ சர்வதிகாரியாகவே தான் இருப்பார் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

ஒரு நவீன மனிதன் இந்தச் சட்டங்களை கண்டறிந்து கொள்வதற்கு முன்னர் தடுமாறியவனாக மதச்சார்பின்மையின் எல்லையை அடைந்திருப்பான். நிறையத் தவறுகளும் குறைகளும் கொண்டு காணப்படும் ஜனநாயக ஆட்சி முறையை சிறந்த குறிக்கோளுடைய ஒன்று எனக் கருதி ஏற்றுக் கொண்டு விடுவான். இதுதான் இப்போது பல நாடுகளில் நடந்துள்ளது.

ஜனநாயகம் அதன் வரைவிலக்கணத்திலிருந்து அனைத்துக் கோட்பாடுகளும் உள்ளார்ந்த முரண்பாடுகளைக் கொண்டுள்ளன. மக்களுக்காக மக்களால் தெரிவு செய்யப்படும் மக்களாட்சியே ஜனநாயகம் எனப்படுகின்றது. இதன்படி ஒரு ஜனநாயக அரசில் ஆள்பவருக்கும் ஆளப்படுபவருக்கும் இடையில் எவ்வித வேறுபாடோ மேம்பாடோ இருக்காது. மக்கள் தங்களைத் தாங்களே ஆண்டுகொள்வதற்காக தங்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்கிறார்கள். அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளிலிருந்து அமைச்சர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அந்த அமைச்சர்கள் தாம் பிரதம மந்திரி என்கிற அதிக ஆசனம் பெற்ற கட்சியின் தலைவரின் கீழ் அரசை முன்கொண்டு செல்கிறார்கள். இதுதான் இன்றைய ஜனநாயக அரச வடிவமாக பல நாடுகளில் காணப்படுகின்றது.

ஜனநாயகத்தின் அடிப்படைக் கருத்தின் படி (பக்.19)




ஆலிப் அனாம்

## எமது சமூகத்தில் எழுத்தாளர்களும் ஆய்வாளர்களும்

இலங்கை முஸ்லிம் சமூகத்திலிருந்து வருடாந்தம் எத்தனை நூல்கள் சஞ்சிகைகள் வெளியாகின்றன என்பதை பரிசீலித்தால் மேலும் பல ஆச்சரியங்களால் நாம் அதிர்ந்து போகலாம். கவிதை, நாவல், சிறுகதை இலக்கியப் பரப்பில் அங்காங்கே சில முயற்சிகள் நடைபெறுகின்ற போதும் சீரியசான சமூக, அரசியல், வரலாற்று நூல்கள் அரிதிலும் அரிதாகவே வெளியாகின்றன.

சமூகத்தின் வாசிப்பார்வம் மட்டுமன்றி புலமையாளர்களின் அலட்சிய மனப்பாங்கும் சேர்ந்ததுதான் இதற்குரிய காரணம். எழுத்தாளர் என்றாலே சிறு பத்திரிகைகளில் கவிதை எழுதுகின்றவர்களாக மட்டுமே பார்க்கப்படுகின்றனர். செய்திப் பத்திரிகையில் ஊடகவியலாளர்களாகப் பணியாற்றுபவர்களும் கூட வெறும் செய்தி எழுதுகின்றவர்களாகவே மட்டும் உள்ளனர்.

அரசியல் வாதிகளின் தெருக்கூத்துக்களையும் திறப்பு விழாக்களையும் பற்றி செய்தி எழுதுபவர்களை மட்டுமே எழுத்தாளர்களாக குறுக்குவதா? ஆழமான சமூக வரலாற்று பிரக்ஞையுடன் முதிர்ந்த பந்தியெழுத்துக்களையோ ஆய்வுத்தடம் கொண்ட கருத்துக்களையோ காணக்கிடைப்பது மிகவும் அரிது. எழுத்தாளர்கள் முதலில் தேர்ந்த வாசகர்களாக இருக்க வேண்டும், தேடல் மிக்கவர்களாகவும் இருக்க வேண்டும்.

சமீபத்தில் முஸ்லிம் கூட்டமொன்றில் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிட்டியது. அங்கு குழுமியிருந்தோர் தம்மை சுயஅறிமுகம் செய்து கொண்டிருந்தபோது ஒருவர் எழுந்து தான் ஒரு சமூக ஆய்வாளர் என்று கூறி அமர்ந்து கொண்டார். கூட்டத்தின் முடிவில் அவரைக்காணும் ஆர்வத்துடன் அவரை நெருங்கிய நான் நீங்கள் இதுவரை என்னென்ன ஆய்வுகளை செய்திருக்கிறீர்கள் எனக் கேட்டேன் அதற்கவர் நான் எதனையும் செய்து எழுத்துருவாக்கவில்லை. ஆனால் சமூகத்தை நன்றாக தெரிந்து வைத்துள்ளேன் என்றார்.

அப்பொழுது நான் சரி இலங்கையில் எத்தனை முஸ்லிம் பாடசாலைகள் இருக்கின்றன எனக் கேட்டேன். அதற்கவர் மேலும் கீழுமாகப் பார்த்துவிட்டு எனக்கு இப்போது மறந்துவிட்டது என மழுப்பலாகக் கூறினார்.

இந்த உதாரணத்தை சொல்வதற்கான காரணம் சில முஸ்லிம் அறிஞர்கள் தம்மை ஒரு ஆய்வுப் பெரியாராகவும் மாபெரும் மேதாவிகளாகவும் கற்பனை செய்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை சொல்வதற்கே.

உண்மையில் ஆய்வறிவாளர் மரபொன்று எம்மிடையே ஏற்படவில்லை. ஆய்வும் திட்டமிடலும் சமூக முன்னேற்றத்தின் இரு சிறகுகள் என்பர். ஆனால், ஆகக் குறைந்தது ஓர் ஆய்வுக் கட்டுரை எழுதும்போது நூல்களை எப்படி மேற்கோள் காட்டுவது என்ற குறைந்தபட்ச அறிவும் நமது அறிஞர்களுக்கில்லாமல் இருப்பது ஆச்சரியம் மேலிட வைக்கின்றது.

ஆய்வு என்பது பற்றிய விளக்கம் கூட இன்னும் சரியாக ஏற்படவில்லை. ஒரு முன்னணி இஸ்லாமிய நிறுவனத்தில் ஒரு மாணவர் தொழுகை பற்றிய ஓர் ஆய்வு என்ற பெயரில் வதவதவென்று எழுதித் தள்ளியுள்ளார். அத்தகைய ஆய்வுகள் அநேக மானவை அலுமாரித் தட்டுக்களை ஆக்கிரமித்தவாறு தூங்கிக் கிடக்கின்றன.

இன்று நாம் ஆய்வு மனப்பாங்கை (Research mind)ஐ அனைத்துத் தரப்பிலும் கட்டியெழுப்ப வேண்டியுள்ளது. குறிப்பாக இஸ்லாமிய துறை சார்ந்தோரிடையே இதன் தேவை இன்னும் அதிகம். உசாத்துணைகளையும், அடிக்குறிப்புக்களையும் எப்படி இடுவது என்பது பற்றியே நாம் இன்னும் அறியாமல் உள்ளோம்.

முஸ்லிம் சமூகத்தில் ஆய்வுப் பாரம்பரியம் எனும் ஒன்று உள்ளதா? என எனக்குத் தெரியவில்லை. ஆனால் வெளிநாடுகளிலிருந்து வரும் நிதிக்காக பல நிறுவனங்கள் ஆய்வு நிறுவனப் பெயர்ப் பலகைகளைத் தொங்க விட்டுள்ளன என்பது எனக்கு நன்கு தெரியும். இதுவரை இந்த நிறுவனங்கள் எவ்விதமான உருப்படியானதோர் ஆய்வையும் மேற்கொள்ளவில்லை.

எனவே, இது குறித்து நாம் சிந்திக்க வேண்டிய காலகட்டத்தில் உள்ளோம்.

## முஸ்லிம்களின் இன்றைய தேவை

# அறிவு ரீதியான போராட்டம்



அஷ்ஷெய்க் ராஷித் கன்னூஸி டியூனீசியாவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1941 ஆம் ஆண்டு டியூனீசியாவின் தெற்கில் அமைந்துள்ள ஹாமா எனும் கிராமத்தில் இவர் பிறந்தார். ஆரம்பக் கல்வியை தனது கிராமத்திலே பூர்த்தி செய்த இவர் உயர்கல்விக்காக காபஸ் நகருக்கு சென்றார். பின்னர் டியூனீஸியாவின் தலைநகரில் கல்வியைத் தொடர்ந்தார். அதன் பிறகு எகிப்து, பிரான்ஸ், சிரியா போன்ற நாடுகளில் தனது உயர்கல்வியைத் தொடர்ந்தார். சிரியாவின் பல்கலைக்கழகத்தில் தத்துவத்துறையில் தனது பட்டத்தை பெற்றுக்கொண்டார்.

1960 களின் பிற்பகுதியில் டியூனீசியாவிற்குத் திரும்பிய அஷ்ஷெய்க் ராஷித் அல் கன்னூஸி அங்கு நஹ்லா எனும் இஸ்லாமிய இயக்கத்தை ஆரம்பித்தார். அதனைத் தொடர்ந்து அவரது அரசியல், தஃவா செயற்பாடுகளுக்காக 1981 ஆம் ஆண்டு முதல் பல தடவைகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார்.

தற்போது லண்டனில் வசித்துவரும் ஷெய்க் ராஸித் அல் கன்னூஸி இஸ்லாமிய அரசியல் சிந்தனை குறித்து ஆழ்ந்த பரீட்சயமுடையவர். அது தொடர்பாக பல நூற்களையும் பல விரிவுரைகளையும் நிகழ்த்தியவர். இக்கட்டுரைத் தொடர் அவர் ஆற்றிய உரைகளின் தொகுப்பாக அமைகின்றது.

**கடந்த இதழில் முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் அவர்களிடம் காணப்படும் வளங்கள் என்பன தொடர்பாக நோக்கினோம். கட்டுரையின் இறுதிப் பகுதியில் முஸ்லிம்களிடம் காணப்படும் ஒரேயொரு பலவீனத்தை அல்லது குறைபாட்டை அடையாளம் கண்டோம்.**

நாகரீகங்களுக்கிடையிலான போராட்டம் என்பது சிந்தனையின் போராட்டம், அறிவின் போராட்டம், ஆயுதங்களை வைத்துப் போராடுவதற்கு முன்னால், இராணுவ வீரர்கள் துப்பாக்கி ஏந்திப் போராடுவதற்கு முன்னால் அது அறிவின் போராட்டமாக இருக்கிறது. அது அறிவின் போராட்டம், நிர்வாகத்தின் போராட்டம், முஸ்லிம் சமூகத்தின் நிலைகளை ஒழுங்குபடுத்துவதன் போராட்டம், முஸ்லிம்களை ஒழுங்குபடுத்துவதன் போராட்டம், அவர்களை ஒழுங்குபடுத்தி குறிப்பிட்ட சந்தர்ப்பத்திலும், குறிப்பிட்ட இடத்திலும் மிகக் கவனமாக வெளிப்படுத்துகின்ற போராட்டம் என்றுதான் நாங்கள் நினைக்கின்றோம்.

இந்தப் பின்னணியில்தான் இஸ்ரேலின் முன்னைய பிரதமராக இருந்த நெதன்யாகு இவ்வாறு கூறினார். ''நாங்கள் ஹமாஸோடு போராடுகின்றோம், அவர்களை பலமுறை தாக்கியிருக்கிறோம், ஆனால் ஹமாஸுடனான போராட்டத்தில் நாங்கள் அறிவு ரீதியான பகுதியில் தோற்றுப் போய்விட்டோம்''. எனவே, அவர் இந்தப் போராட்டத்தை ஆயுதங்களின் போராட்டமாகக் காணவில்லை, அறிவின் போராட்டமாகவே கண்டுள்ளார். எனவே, நாம் அறிவு ரீதியாகப் பார்க்கின்றபோது ஹமாஸோடு தோற்றுப்போய் விட்டோம், இழந்து விட்டோம் என்று அவர் கூறினார். எனவே நாம் போராடுவது அறிவினாலே தவிர வெறும் ஆயுதத்தினால் அல்ல. இந்த வகையில்தான் ஹமாஸ் மிகக் கவனமாகத் தன்னை ஒழுங்குபடுத்திக் கொண்டில்லாதபோது அதிகமான இழப்புகளுக்கு உட்பட்டிருக்கும்.

பலஸ்தீனில் நிறைய முனாபிக்கள் (நயவஞ்சகர்கள்) இருக்கிறார்கள், யூதர்களை விட மோசமாக முஸ்லிம்களுக்கு எதிராக சதி செய்யக் கூடிய பல பலஸ்தீனியர்கள் இருக்கிறார்கள். பலஸ்தீன் முனாபிக்கள் இருக்கிறார்கள். உண்மையில் ஹமாஸ் கவனமாக இருந்தில்லாவிட்டால் அவர்கள் பலஸ்தீனியர்களோடே போராடி இருப்பார்கள். அந்த பலஸ்தீன் முனாபிக்குகளை நோக்கி தங்களுடைய துப்பாக்கிகளை நீட்டி இருப்பார்கள். ஆனால் அவர்கள் சிந்தனையினால் போராடியதன் காரணமாக, தங்களைக் கட்டுப்படுத்துவதில் அவர்கள் வெற்றி கொண்டதன் காரணமாக அதே ஆயுதங்களை யூதர்களை நோக்கிப் பிடித்தார்கள்.



இதைத்தான் நாம் அறிவு ரீதியான போராட்டம் என்கிறோம். இதுவே முஸ்லிம்களிடத்தில் குறைவாக இருக்கிறது. அவர்களிடத்திலே ஈமான் இருக்கிறது, செல்வம் இருக்கிறது, அவர்களுடைய சனத்தொகை மிகப் பெருந்தொகையாக இருக்கிறது. ஆனால், இந்த அறிவு மாத்திரம்தான் குறைந்து போனது. அதனை ஒழுங்குபடுத்தினால்தான் வெற்றி கிடைப்பது சாத்தியமாகும். போராட்டம் என்பது, நாகரீகங்களுக்கிடையிலான போராட்டம் என்பது வெறும் பௌதீக ரீதியான கருவிகளுக்கு மத்தியிலான போராட்டம் தான்.

விஞ்ஞான ரீதியாக நிருவப்பட்ட உண்மை நாம் சாதாரணமாக மூச்சுவிடுகின்றபோது உட்சென்ற பிராணவாயு முழுமையாக வெளியில் வராது. அந்த மோசமான காற்று எங்களுடைய அறிவை, சிந்தனையை பாதிக்கக் கூடியதாக இருக்கும். எனவே, அதனை வெளியே அனுப்பவேண்டுமாக இருந்தால் கடுமையான தேகப் பயிற்சியில் ஈடுபடவேண்டும் அல்லது வேகமாக ஆழ்ந்து மூச்சு எடுக்க வேண்டும். அப்போது அது வெளிச் சென்றுவிடும். அதன் பின்னர் சிந்தனை சீராக செயற்படும்

ஆப்கானிஸ்தான் யுத்தம் எங்களுக்கு பெரும் பாடங்களை கற்றுத் தருகின்றது. அதிலிருந்து நிறையப் பாடங்களை படித்துக் கொள்ள முடியும். ஆப்கானிஸ்தானில் நாங்கள் உண்மையில் தோல்வியடைந்தோம். அதனை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆரம்பத்தில் நாங்கள் வெற்றியடைந்தோம். ஆனால், இரண்டாவதாக தோல்வியடைந்தோம். ஆயுத போராட்டத்தில் நாங்கள் வெற்றி கண்டோம். ஆனால், அறிவு, ஒழுங்குபடுத்தல், நிருவாக போராட்டத்தில் நாங்கள் தோல்வியடைந்தோம்.

இன்று நிறைய முஸ்லிம் இளைஞர்கள் அல்லாஹ்வுடைய பாதையில் போராடவேண்டும், ஆயுதம் ஏந்திப் போராட வேண்டும் என்று மிகவும் விருப்பத்தோடு எதிர்பார்க்கிறார்கள். ஆனால், அவர்கள் எல்லோரும் அல்லாஹ்வுடைய பாதையில் போராடுவது என்பதை மிகவும் சுருக்கி விட்டார்கள். துப்பாக்கியின் வாயில் அதனை அவர்கள் வைத்து விட்டார்கள். துப்பாக்கியின் வாய் ஒருபோதும் அறிவு கொண்டதல்ல, அதற்கு எவ்வித அறிவும் கிடையாது எனவே, அறிவு இல்லாத அந்தத் துப்பாக்கியை எங்களுடைய எதிரிகளே பயன்படுத்திக் கொள்கிறார்கள். இந்த சிந்தனைப் போக்குத்தான் தொடர்ந்தும் எங்களிடம் காணப்படுமாக இருந்தால் இவ்வாறு போராடுகின்ற முஜாஹிதீன்கள் பல்வேறு பிரிவுகளாக பிரிந்து அதன் மூலம் தமது காரியங்களை அவர்கள் சாதித்துக் கொள்வார்கள். இஸ்லாம் எதிர்பார்க்கின்ற எங்களுடைய பல இலக்குகளை நாங்கள் அடைய முடியாமல் போகும்.

உலகத்தில் மிகப் பெரிய கம்யூனிச சக்தியாக இருந்தது சீனா. அந்த சீனா எல்லா மார்க்கங்களுக்கும் அச்சுறுத்தலாக இருந்தது. யூதம், கிறிஸ்தவம், இஸ்லாம், பௌத்தம் போன்ற உலகத்தின் அனைத்து மார்க்கங்களுக்கும் ஒரு அச்சுறுத்தலாகத்தான் இந்த கம்யூனிசம் இருந்தது. தனி மனித வடிவில் தோன்றாமல் ஒரு மிகப் பெரிய வல்லரசு வடிவில் அது தோன்றியது. அந்த கம்யூனிசத்தை முஸ்லிம்கள் மட்டுமே தங்களுடைய தோளில் சுமந்து அதனை வெற்றி கொண்டார்கள். இந்த மிகப் பெரிய அச்சுறுத்தலாக அமைந்த நாட்டை அவர்கள் அழிப்பதிலும், இந்த நாஸ்திகத்தை உலகத்தில் இருந்து ஒதுக்குவதிலும் அவர்கள் வெற்றி கொண்டார்கள்.

ஆனாலும் அந்த வெற்றியின் விளைவு உண்மையில் எதிரிகளின் கைகளுக்குச் சென்றது. யூதர்கள் அதனைப் பயன்படுத்திக் கொண்டார்கள், கிறிஸ்தவர்கள் அதன் விளைவை பயன்படுத்திக் கொண்டார்கள், இந்துக்கள் அதன் விளைவை பயன்படுத்திக் கொண்டார்கள். நாங்கள் ஜிஹாத் என்ற கருத்தை மிகவும் சுருக்கி விட்டோம். நபி (ஸல்) அவர்கள் ''இஸ்லாத்தில் மிகவும் உயர்ந்த நிலைதான் ஜிஹாத்'' என்றார்கள். அதாவது அது கிரீடமாக அமையும் என்று சொன்னார்கள். கிரீடத்தை நாம் ஒரு அரசனின் தலையில்தான் சூட்டுவோம். எப்போதும் ஜிஹாத் என்பது அனைத்துவகையான முயற்சிகளுக்கும் கிரீடம் சூட்டுவதாகத்தான் அமைய வேண்டும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஆனால், ஜிஹாத்தின் கருத்தை ஒரு துப்பாக்கி என்ற ஒரு சிறிய பொருளின் அளவுக்கு சுருக்கிவிட்டார்கள். இஸ்லாமிய உலகம் மிகப் பெரிய ஒரு போராட்டத்தில் இருப்பதைக் நாம் காண்கின்றோம். அந்தப் போராட்டம் பல்வேறு அம்சங்களுடன் ஒன்றோடு ஒன்று பிணைந்ததாக காணப்படுகின்றது. சிந்திப்பவர்களை மிகுந்த தடுமாற்றத்திற்கு உட்படுத்துகின்ற பல்வேறு அம்சங்கள் ஒன்றோடு ஒன்று இணைந்ததாக இருப்பதை நாம் காண்கின்றோம். பல்வேறு கூறுகள் ஒன்றாக இணைந்த இந்தப் போராட்டத்தை நாம் அவிழ்த்து கூறுகளாகப் பிரித்து ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஒரு பூரணமாக பார்வை எங்களுக்கு தேவைப்படும். அந்தப் பார்வையின் ஊடாகத்தான் இந்தப் போராட்டத்தை நாம் விளங்கிக் கொள்ள முடியும். முஸ்லிம்கள் தங்களுடைய வாழ்வு நிலையை புரிந்து கொள்ள வேண்டும். எதிரிகளுடைய நிலையை, போராட்ட ஒழுங்கை புரிந்து கொள்ள வேண்டும். அதனூடாகத்தான் இந்தப் போராட்டத்தின் பாரிய தன்மையை, பல்வேறு அம்சங்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து இந்தப் போராட்டத்தில் கலந்திருப்பதை அவர்கள் புரிந்து கொள்ள முடியும்.









# சுதந்திர பலஸ்தீனத்திற்கு பாதுகாப்புச் சபை அங்கீகாரம் அளிக்க வேண்டும்



## பலஸ்தீன அதிகார சபை

இஸ்ரேலின் குடியேற்றத் திட்டங்களைக் கண்டிக்குமாறு பலஸ்தீனர்கள் ஐ.நா. பாதுகாப்புச் சபையை வேண்டியுள்ளனர். எசோஸியேட் பிரஸ் செய்தி நிறுவனத்திற்கு பலஸ்தீனர்கள் அனுப்பியுள்ள நகலின் பிரதியொன்று கிடைக்கப் பெற்றுள்ளதாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது. அமெரிக்காவுக்கும் பலஸ்தீன் அதிகார சபைக்கும் இடையிலான கருத்து மோதல் தீவிரமடைந்து வரும் நிலையில் இஸ்ரேல் மீதான சர்வதேச அழுத்தங்களை அதிகார சபை சர்வதேச நாடுகளிடமிருந்து தேடுவதற்கு விரும்புகின்றது.

குடியேற்றத் திட்டம் குறித்து விஷேட பிரேரணை ஒன்றை பாதுகாப்புச் சபையிடம் வழங்கியுள்ள பலஸ்தீன் அதிகார சபை, சில நாடுகளில் தமது தூதுவராலயங்களை நிறுவும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளது. அதிகார சபை முன்வைத்துள்ள பிரேரணையை இஸ்ரேல் நிராகரித்துள்ளது. இஸ்ரேல்-பலஸ்தீன் பேச்சுவார்த்தை மூன்று மாதங்களுக்கு முன்பாக இடைநிறுத்தப்பட்டது. மேற்குக் கரை, கிழக்கு ஜெரூசலம் சட்ட விரோதக் குடியேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும் என்று அதிகார சபை முன்வைத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டதே பேச்சுவார்த்தை தோல்வியடைந்ததற்கான காரணமாகும்.

கடந்த காலத்தில் 15 உறுப்பு நாடுகளைக் கொண்ட பாதுகாப்புச் சபை இஸ்ரேலை வார்த்தையளவில் கண்டித்திருந்தது. ஆனால், எழுத்து மூலமான தீர்மானங்கள் எதனையும் வெளியிடவில்லை. அமைதியை எட்டுவதில் பாரிய தடங்கலாக இருப்பது இஸ்ரேலின் குடியேற்றத் திட்டமே என அதிகார சபையின் பிரதான பேச்சுவார்த்தையாளர் ஸஈப் அரகத் கூறியுள்ளார்.

இதற்கிடையில் சுதந்திர பலஸ்தீனின் தூதரகமொன்றை நிறுவும் நோக்கில் மஹ்மூத் அப்பாஸ் பிரேஸிலுக்கு விஜயமொன்றை மேற்கொண்டார். தூதுவரலாயத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவில் கலந்துகொண்ட அவர், இது சுதந்திர பலஸ்தீனின் குறியீடாக இருக்கும் என்று குறிப்பிட்டார். பேச்சுவார்த்தையில் இஸ்ரேலுக்கு எவ்வித ஆர்வமும் இல்லை என்று குறிப்பிட்ட அப்பாஸ், பாதுகாப்புச் சபையே இதற்கான அழுத்தத்தைக் கொடுக்க வேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

பேச்சுவார்த்தையில் தாம் ஈடுபடுவது தொடர்பில் எவ்வித ஆட்சேபனையும் கிடையாது. ஆனால், எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று அப்பாஸ் தெரிவித்துள்ளார். தற்போது சுதந்திர பலஸ்தீனத்திற்கான ஒருமித்த அங்கீகாரத்தைப் பெறுவதே தமது பிரச்சாரத்தின் நோக்கம் என்று அப்பாஸ் கூறியுள்ளார்.

தற்போது பிரேஸில், ஆஜன்டீனா, பொலீவியா, ஈக்குவடோர் ஆகிய நாடுகள் சுதந்திர பலஸ்தீனத்தை அங்கீகரிப்பதாக அறிவித்துள்ளன. சிலி, மெக்ஸிகோ, பெரு, நிக்ராகுவா, ஆகிய நாடுகளும் கிட்டிய எதிர்காலத்தில் தமது அங்கீகாரத்தை வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக மேற்குக்கரைப் பிரதமர் ஸலாம் பையாதினால் இத்திட்டம் வரையப்பட்டது என்று அதிகார சபை கூறுகின்றது. 2011ல் சுதந்திர பலஸ்தீனத்திற்கான அரசாங்க நிறுவனங்களை உருவாக்குவதற்கான முதல் படியே சர்வதேச அங்கீகாரத்தைத் திரட்டுவது என்று அதிகார சபை தெரிவித்துள்ளது.

## ஈரான்-இந்தியா முறுகல்




ஈரானுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பெற்றோலியம் தொடர்பான கருத்து மோதல் கூர்மையடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. நியூடில்லியினால் முன்வைக்கப்பட்டுள்ள புதிய சட்டங்களின் கீழ் இந்தியாவுக்கு பெற்றோலியத்தை ஏற்றுமதி செய்ய முடியாது என்று தெஹ்ரான் தெரிவித்துள்ளது. இந்தியாவின் ரிசேர்வ் பேங்க் ஈரானுடனான சகல உறவுகளையும் ஏசியன் கிளியரிங் யூனியன் முறைமையின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

இந்தியாவின் மத்திய வங்கியின் உத்தரவாதங்கள் இல்லாமல் இந்தியாவிற்கு பெற்றோலை ஏற்றுமதி செய்ய முடியாது என ஈரானின் எண்ணெய்க் கம்பனி தெரிவித்துள்ளது. இரு நாடுகளின் மத்திய வங்கி உயர் அதிகாரிகளிடையே இது தொடர்பான பாரிய கருத்து வேறுபாடுகள் எழுந்துள்ளன. ஐ.நா. பொருளாதாரத் தடையின் கீழுள்ள ஈரான், எண்ணெய் ஏற்றுமதி மூலம் வருடாந்தம் 12 பில்லியன் அமெரிக்க டொலரை சம்பாதிக்க விரும்புகின்றது.

ஐ.நா.வின் பொருளாதாரத் தடை ஈரானின் ஒய்ல் ஏற்றுமதியை உள்ளடக்கவில்லை. எனினும், ஈரானுடனான பெற்றோலிய ஏற்றுமதி இறக்குமதியை துண்டித்துக் கொள்ளுமாறு அமெரிக்கா இந்தியா போன்ற நாடுகளை அழுத்தி வருகின்றது. இதன் பிரதிபலிப்பே நியூடில்லியின் புதிய சட்டம் என்று தெஹ்ரான் நம்புகின்றது.

# ஐவரிகோஸ்ட்: சிவில் யுத்தம் மூளும் அபாயம்

## தடுத்த நிறுத்த ஆபிரிக்கத் தலைவர்கள் மும்முரம்

தேர்தலுக்குப் பிந்திய ஐவரிகோஸ்டின் உள்நாட்டு நெருக்கடியைத் தீர்ப்பதில் ஆபிரிக்க நாட்டுத் தலைவர்கள் மும்முரமாய் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

லோரன்ஸ் பாக்போவை பதவி நீக்குவதற்கான மேற்கு ஆபிரிக்க நாட்டுத் தலைவர்களின் முயற்சி தோல்வியடைந்துள்ளதைத் தொடர்ந்து பாக்போவுக்கு மீண்டும் காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளது. இக்குறிப்பிட்ட காலத்தினுள் அவர் பதவி விலகாத விடத்து, ஐவரிகோஸ்ட் அரசாங்கத்திற்கு எதிரான பாரிய இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

பெனின், சியராலியோன் மற்றும் கேப் வேடா ஆகிய நாட்டுத் தலைவர்கள் அபிஜானில் வைத்து பாக்போவை சந்தித்துள்ளனர்.


பாக்போ


ஒட்டாரா

தேர்தலில் ஒட்டாராவே வெற்றி பெற்ற போதும் பாக்போ ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்ததை அடுத்து, உள்நாட்டில் சிவில் யுத்தம் மூழ்வதற்கான நிலமைகள் தோன்றியுள்ளதாக மேற்கு ஆபிரிக்கத் தலைவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

உள்நாட்டில் தற்போது ஒட்டாராவுக்கு ஆதரவானவர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். ஐ.நா.வின் அமைதிப் படையினரும் ஐவரிகோஸ்டில் நிறுத்தப்பட்டுள்ளனர். பாக்போ பதவி இறங்காத விடத்து நாட்டில் பெரும் குழப்பம் ஏற்படுவதற்கான சூழல் அதிகரித்து வருகின்றது. 17000 துணைப் படையினரும் ஐவரிகோஸ்டின் அரச படையிலுள்ள 1500 பேரும் பாக்போவுக்கு ஆதரவாக இருக்கக் கூடும் என்று நம்பப்படுகின்றது.

இதேவேளை, ஒட்டாராவுக்கு விசுவாசமான 10,000 ஆயுதப் படையினர் பாக்போவின் அரசாங்கத்தை எதிர்த்துப் போராடுவதற்குத் தயாராகி வருகின்றனர். பிரெஞ்சுப் படையினர் மற்றும் ஆபிரிக்க ஒன்றியப் படையினரும் ஐவரிகோஸ்டில் நிலைநிறுத்தப்பட்டுள்ளனர். பாக்போவுடனான பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிவடைந்துள்ளதால், ஐவரிகோஸ்டில் எந்தவொரு நிமிடத்திலும் சிவில் யுத்தம் வெடிக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

# இராணுவத் துறையில் பாலியல் வன்முறை அதிகரிப்பு



அமெரிக்க இராணுவத் துறையில் பணியாற்றும் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் அதிகரித்துள்ளதாக ஆய்வுகளும் புள்ளிவிபரங்களும் தெரிவிக்கின்றன. இதனால் உளவடுவுக்குப் பின்னர் தோன்றும் குறுக்கீட்டு ஒழுங்கீனம் (PTSD) எனப்படும் உளவியல் பாதிப்புக்கு இப்பெண்கள் உட்பட்டுள்ளனர் எனவும் இவ்வாய்வுகள் தெரிவிக்கின்றன.

60%மான பெண்கள் இவ்வாறு உளப்பாதிப்புக்கு உட்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த மாதம் இராணுவத் துறையில் பெண்கள் மீதான பாலியல் அத்துமீறல்கள், வன்முறைகள் தொடர்பான அறிக்கையை அமெரிக்கப் பாதுகாப்பு தலைமையகமான பென்டகன் வெளியிட்டிருந்தது. முன்பொருபோதும் இல்லாத வகையில் பெண்கள் மீதான வன்முறை அதிகரித்துள்ளதை பென்டகனின் அறிக்கை காட்டுகின்றது.

இராணுவத்தில் உயர் அதிகாரிகளாகப் பணியாற்றுகின்றவர்கள் தமக்குக் கீழ் பணியாற்றும் பெண்களை இவ்வாறு துஷ்பிரயோகம் செய்துள்ளதாக இவ்வறிக்கை காட்டுகின்றது. 22 மில்லியன் இராணுவத் துறை உயர் அதிகாரிகள் அமெரிக்காவில் பணியாற்றுகின்றனர். 2 மில்லியன் பெண்களே இராணுவத்தில் பணியாற்றுகின்றனர். இவர்களுள் 12% மான பெண்கள் 2007ல் மாத்திரம் கற்பழிக்கப்பட்டுள்ளதாக பென்டகன் அறிக்கை கூறுகின்றது.

# அமெரிக்கச் சிறையில் நான் கொல்லப்படலாம்



தான் உளவுபார்த்த குற்றச்சாட்டின் பெயரில் லண்டனிலிருந்து அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்பட்டால் அங்கு தனக்குப் பாதுகாப்புக் கிடைக்காது எனவும், சிலவேளை சிறைச்சாலையில் வைத்தே தான் படுகொலை செய்யப்படலாம் எனவும் விக்கிலீக்ஸ் ஸ்தாபகர் ஜூலியன் எசென்ஜே தெரிவித்துள்ளார். லண்டனிலிருந்து வெளிவரும் த காடியன் பத்திரிகைக்கு எசென்ஜே வழங்கியுள்ள பேட்டியொன்றிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

பாலியல் குற்றச்சாட்டின் பெயரில் இங்கிலாந்தில் கைதுசெய்யப்பட்ட எசென்ஜே பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில் லண்டனிலேயே வாழ்கின்றார். அமெரிக்காவின் உயர் மட்ட ராஜதந்திர ரகசியங்களை உளவு பார்த்தார் என்ற குற்றச்சாட்டின் பெயரில் அவரை அமெரிக்காவுக்கு ஒப்படைக்குமாறு அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சு கோரி வருகின்றது. இந்நிலையிலேயே அசென்ஜே இவ்வாறு கூறியுள்ளார்.

இதேவேளை, உளவு பார்த்தல் எனும் குற்றச்சாட்டு அரசியல் வகையைச் சார்ந்தது என்றும் எனவே அரசியல் குற்றச்சாட்டுக்காக தம்மை நாடுகடத்துவதற்கான சட்டரீதியான உரிமை பிரிட்டன் அரசாங்கத்திற்கு இல்லை எனவும் அசென்ஜே இப்பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

# எம்மைச் சீண்டினால் நாம் போருக்கும் தயாராகவுள்ளோம்



வடகொரியாக தொடர்ச்சியாக எம்மைச் சீண்டினால் நாம் போருக்கும் தயாராகவுள்ளோம் என்று தென்கொரிய நாட்டு ஜனாதிபதி லீ யங் பாக் தெரிவித்துள்ளார். கடந்த மாதம் தென்கொரியத் தீவுகள் மீது வடகொரியா தாக்குதல் நடத்தியதை அடுத்து இரு நாடுகளுக்கும் இடையிலான பதற்றம் தீவிரமடைந்தது. அமெரிக்க இராணுவமும் தென் கொரிய இராணுவமும் இணைந்து போர்ப் பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன.

இந்நிலையிலேயே அதிபரின் கருத்து வெளியாகியுள்ளது. தென்கொரிய இராணுவம் தாக்கப்படும் சந்தர்ப்பத்தில் தகுந்த பதிலடி கொடுக்கப்படும். போர் குறித்த அச்சத்தினால் போரைத் தடுக்க வாய்ப்பில்லை. எனவே, பதிலடி மூலம்தான் அமைதியை நிலைநாட்ட முடியுமென்றால் அதற்கும் தமது அரசாங்கம் தயாராகவுள்ளது என்று அவர் கூறினார்.

1950களிலிருந்து வட-தென் கொரிய நாடுகளுக்கிடையே ஏற்பட்ட பதற்றத்தின் காரணமாக இதுவரை இரு பெரும் யுத்தங்கள் நடைபெற்றுள்ளன. வடகொரியாவுக்கு சீனாவும் தென்கொரியாவுக்கு அமெரிக்காவும் ஆதரவளித்து வருகின்றன.

# சவூதியின் அடுத்த மன்னர் யார்

ஐ.நா. சபையைப் பகிஷ்கரிக்குமாறு சவூதி அரேபியாவின் ஷெய்க் முபாறக் விடுத்துள்ள அழைப்பை சர்வதேச இஸ்லாமிய அறிஞர்கள் ஒன்றியத்தின் தலைவர் கலாநிதி யூசுப் அல் கர்ளாவி ஆட்சேபித்துள்ளார். அல்ஜஸீராவின் வாராந்த ''ஷரீஆவும் வாழ்வும்'' நிகழ்ச்சியில் கலந்துகொண்ட போதே கர்ளாவி தனது நிலைப்பாட்டைத் தெரிவித்தார்.

மிதவாத அறபு முஸ்லிம் நாடுகள் உலகமயமாதல் நிகழும் இக்காலகட்டத்தில் சமகால உலகுடன் தொடர்பாடுவது அவசியம். ஐ.நா. சபையைப் பகிஷ்கரிப்பதானது முஸ்லிம் நாடுகளுக்கும் மேற்கு நாடுகளுக்கும் இடையிலான சமாதான மற்றும் கலந்துரையாடலுக்கான வாய்ப்பினை பாதிக்கும் எனக் குறிப்பிட்ட அவர், இது இஸ்லாத்தின் போதனைகளுக்கும் முரணானது என்று வலியுறுத்தினார்.

யுத்தங்கள் இல்லாத வன்முறைகள் அற்ற உலகை உருவாக்கும் நோக்கிலேயே ஐ.நா. உருவாக்கப்பட்டது. எனவே, அந்நோக்கத்துடனான ஒரு நிறுவனத்தைப் பகிஷ்கரிக்கக் கோருவது ஷரீஆவின் அடிப்படையில் தவறானது என்று கர்ளாவி குறிப்பிட்டார்.

சவூதி அரேபியாவின் அடுத்த மன்னராக இளவரசர் அல் வலீத் பின் தலால் மாறுவார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன. தற்போது மன்னராகவுள்ள அப்துல்லாஹ் வயது முதிர்ச்சி காரணமாக நோய்வாய்ப்பட்டுள்ளதால் ஸஊத் மன்னர் குடும்பத்தைச் சேர்ந்த இளவரசர் வலீத் பின் தலால் சில காலங்களுக்கு மன்னராக இருக்கும் வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.



எகிப்திய ஜனாதிபதி முபாரக்கின் மனைவி வலீத் பின் ஹலாலின் குடும்பத்திற்கு வழங்கிய இரவு விருந்துபசாரம் ஒன்றில் கலந்துகொண்ட போதே அல் வலீத் இக்கருத்தை வெளியிட்டார். ''எமது குடும்பத்தில் மன்னர்களின் மகன்மார்களும் பேரப் பிள்ளைகளும் சங்கிலித் தொடரில் மன்னர்களாக வருகின்றனர். அவர்களில் நானும் ஒருவனாக இருக்கின்றேன். நாட்டுக்கு என்னால் முடியுமான அனைத்தையும் செய்வேன்'' என்று நேர்காணலொன்றில் வலீத் தெரிவித்துள்ளார்.

எனினும், மத்திய கிழக்கு கொள்கைக்கான அமெரிக்க நிறுவனத்தின் ஆய்வாளர் சிமோன் ஹென்டஸன், வலீத் மன்னராவதற்கான வாய்ப்பில்லை என்று தெரிவித்துள்ளார். அவரது தந்தை தலால் மன்னர் குடும்பத்தை விமர்சித்தவர். அதேவேளை, அவரது மனைவி லெபனானைச் சேர்ந்தவர். எனவே, வலீத் மன்னராவதற்கான சந்தர்ப்பம் கிடையாது என்று ஐரோ. ஆசிய மத்திய கிழக்கிற்கான ஆய்வுப் பணிப்பாளர் ரோச்சி யொன்ஸி தெரிவிக்கின்றார்.

வலீத் சீர்திருத்த எண்ணம் கொண்டவர். வஹாபி குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இதனை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். சவூதி அரேபியா ஒரு ஜனநாயக நாடாக இல்லாதபோதும் மன்னராட்சி எவ்வாறு பரம்பரை பரம்பரையாக மாற்றமடைகிறது என்பதை அவதானிப்பது மிகவும் சுவாரஸ்யமானது என்று அவர் தெரிவித்தார்.

# பாப்பரசர் பெனடிக்டின் அறிக்கைக்கு சீனா கண்டனம்



கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு பாப்பரசர் பெனடிக்ட் வெளியிட்ட அறிக்கையில், சீனா குறித்து வெளியிடப்பட்ட கருத்திற்கு அந்நாடு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. சீன விவகாரங்களில் தலையிடுவதை போப் நிறுத்த வேண்டும் எனவும் சீனா அரசாங்கம் கூறியுள்ளது.

1949ல் சீனாவில் மாஓ சே துங் தலைமையிலான கம்யூனிஸக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றிய பின் தாஓயிஸம், பௌத்தம், இஸ்லாம், கத்தோலிக்கம், புரட்டஸ்தாந்து கிறிஸ்தவம் ஆகிய ஐந்து மதங்கள் அரசால் அங்கீகரிக்கப்பட்டன. சீன கத்தோலிக்கத் திருச்சபைக்கும் வத்திக்கானும் சம்பந்தமில்லை. சீன அரசின் நேரடிக் கட்டுப்பாட்டிலேயே திருச்சபை இயங்கி வருகின்றது. சீனாவில் திருச்சபை ஆயர்களை வத்திக்கான் நியமிப்பதில்லை. அரசுதான் நியமிக்கின்றது.

சீன-வத்திக்கான் உறவு முறிந்து 60 ஆண்டுகளாகிவிட்டன. இந்நிலையில் சமீபத்தில் நடந்து முடிந்த கிறிஸ்மஸ் பண்டிகையின் போது பாப்பரசர் பெனடிக்ட் வெளியிட்ட சிறப்புச் செய்தில் சீனக் கிறிஸ்தவர்கள் நம்பிக்கையுடன் இருக்க வேண்டும். தங்கள் மதச் சுதந்திரம் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவ தால் அவர்கள மனம் தளர்ந்துவிட வேண்டாம் எனக் குறிப்பிட்டிருந்தார்.

போப்பின் குரல் மதகுரு என்பதை விட அரசியல்வாதியின் குரலாகவே வெளிப்பட்டிருக்கிறது என்று சீனா கண்டித்துள்ளது. சீன விவகாரங்களில் தலையிடுவதை வத்திக்கான் நிறுத்திக்கொள்ள வேண்டும் எனவும் சீன அரசாங்கம் கூறியுள்ளது.

**★ கடந்த 19 ஆண்டுகளாக நடைபெற்று வரும் இஸ்ரேல்-பலஸ்தீன் பேச்சுவார்த்தை தோல்வியடைவதற்கான காரணம் என்ன?**

இதற்கு மூன்று காரணங்கள் உள்ளன. இஸ்ரேல் சமாதானத்தை விரும்பவில்லை என்பதே முதற் காரணமாகும். அவர்கள் சமாதானம் பற்றிப் பேசுகின்றனர். ஆனால், சமாதானத்திற்கான விலையைக் கொடுப்பதற்கு அவர்கள் தயாரில்லை. இரண்டாவது காரணம், சமாதான செயற்பாடுகளை முன்னோக்கித் தள்ளும் பலம் பலஸ்தீனப் பேச்சுவார்த்தையாளர்களின் கையில் இல்லை. மூன்றாவது காரணம், இஸ்ரேலை சமாதானத்தை நோக்கித் தள்ளுவதற்கான விருப்பமோ ஆற்றலோ சர்வதேச சமூகத்திடம் இல்லை.

**★ சமீபத்தில் ஆரம்பித்த பேச்சுவார்த்தைகளுக்கு அமெரிக்கா ஆதரவளித்தது. இது குறித்து தங்களின் அபிப்பிராயம் என்ன?**

இப்பேச்சுவார்த்தைகள் அமெரிக்க-இஸ்ரேலிய நலன்களுக்காக வேண்டியே இடம்பெற்றது. பலஸ்தீனர்கள் அல்லது அறேபியர்களின் எந்த நன்மையையும் அவை கருத்தில் கொள்ளவில்லை. இதனால்தான் அமெரிக்காவின் கட்டளைகளின் கீழ் அதன் அழுத்தங்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் பயந்து பலஸ்தீன் அதிகார சபையும் அறபு நாடுகளும் அதில் ஈடுபட்டன. இப்பேச்சுவார்த்தைகளுக்கு தேசிய ஆதரவு கிடைக்கவில்லை.

பலஸ்தீனின் ஏனைய சிவில் சமூக நிறுவனங்களால் சட்டபூர்வமானதாக ஏற்றுக்கொள்ளப்படவுமில்லை. பலஸ்தீனின் அதிகாரக் குழுக்கள், மேட்டுக்குடியினர், பொதுமக்களில் கணிசமானோர் இவற்றை நிராகரிக்கின்றனர். இதன் விளைவாகவே இப்பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்தது.

அமெரிக்காவின் அணுகுமுறையில் தீவிரமடையும் பிரச்சினைகளை உடனுக்குடன் குறைக்கும் வகையில் அமைகின்றதே ஒழிய, நிரந்தரத் தீர்வுக்கான முயற்சியாக இடம்பெறவில்லை. அமெரிக்க நிர்வாகம் முரண்பாட்டு முகாமை என்ற கொள்கையையே பின்பற்றுகின்து. இது அமெரிக்காவின் குறுங்கால அபிலாஷைகளுக்குச் சாதகமாக இருக்கலாம். ஆனால், பலஸ்தீனைப் பொறுத்தவரை தேவையானது முரண்பாட்டுத் தீர்வாகும் (Resolving Conflict). நீண்டகாலத் தில் அமெரிக்காவின் முரண்பாட்டு முகாமை (Managing Conflict) அணுகுமுறை மிகவும் ஆபத்தானது. முழுப் பிராந்தியத்தையும் பின்னடைவுக்குள் தள்ளக்கூடியது.

**★ கிழக்கு ஜெரூசலத்திலும் மேற்குக்கரையிலும் அதிகமான நிலங்களைச் சூறையாடி, கட்டிட நிர்மாணங்களில் ஈடுபட்டுவரும் நிலையில் இரு நாட்டுத் தீர்வு என்ற கோட்பாட்டை ஹமாஸ் ஏற்றுக் கொள்கின்றதா?**

1967 எல்லைகளுடன் கூடிய பலஸ்தீனை ஹமாஸ் அங்கீகரிக்கின்றது. மட்டுமன்றி, இரு நாட்டுத் தீர்வுத் திட்டத்தை ஹமாஸ் ஏற்றுக்கொள்ளாது.

**★ இவை இரண்டுக்கும் இடையிலான வேறுபாடுகள் என்ன?**

இவை இரண்டும் இடையில் பாரிய வேறுபாடுகள் உள்ளன. நான் ஒரு பலஸ்தீனன்; ஒரு பலஸ்தீனத் தலைவன். பலஸ்தீன மக்கள் எதை எதிர்பார்த்து நிற்கிறார்களோ அதை நிறைவேற்றுவதே எனது கடமை. ஆக்கிரமிப்பிலிருந்து விடுதலை பெறுதல், பரிபூரண சுதந்திரம் பெறுதல், 1967 எல்லைகளுடன் கூடிய சுதந்திர பலஸ்தீனை உருவாக்குதல் இவைதாம் எமது மக்களின் எதிர்பார்ப்பு.

இஸ்ரேலைப் பற்றிப் பேசுவது இங்கு பொருத்தமில்லை. நான் அது பற்றி அலட்டிக் கொள்ளவில்லை. அது ஒரு ஆக்கிரமிப்பு தேசம். நான் அதன் பலிக்கடா. நாம் ஆக்கிரமிப்பிற்கு பலியாகியுள்ளோம். எனவே, ஆக்கிரமிக்கின்ற ஒரு கும்பலுக்கு சட்ட உரிமையை வழங்க நாம் தயாரில்லை. சர்வதேச சமூகம் வேண்டுமானால் அதை ஒரு நாடாகக் கருதி, அதனோடு உறவு கொள்ளலாம். எம்மைப் பொறுத்தவரை பலஸ்தீன மக்களே எமது அக்கறைக்குரியவர்கள். பலஸ்தீன நாட்டை மட்டும் உருவாக்குவதே எமது அக்கறை.



காலித் மிஷ்அல் பலஸ்தீனின் ராமல்லாஹ் நகரில் 1956ல் பிறந்தார். 1967ல் குவைத்திற்குச் சென்றார். வளைகுடா யுத்தம் ஆரம்பமான 1990 வரை, அங்கேயே வாழ்ந்தார். குவைத் பல்கலைக் கழகத்தில் பௌதீகவியல் துறையில் பட்டதாரியானார். 1981ல் திருமணம் முடித்த இவருக்கு 7 பிள்ளைகள் (4 ஆண்கள், 3 பெண்கள்). குவைத்தில் பௌதீகவியலில் ஆசிரியராகப் பணி புரிந்த பின்னர் ஜோர்தானில் தங்கியதும் அரசியல் போராட்டத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். ஹமாஸ் இயக்க ஸ்தாபகர்களில் ஒருவராகவும் இவர் கருதப்படுகின்றார்.

ஹமாஸின் அரசியல் பிரிவு தோற்றுவிக்கப்பட்டதிலிருந்து அதன் அங்கத்தவராக இருந்த இவர், மூஸா அபூ மர்ஸூக் அமெரிக்காவில் சிறையிடப்பட்டதைத் தொடர்ந்து 1996ல் அரசியல் பிரிவுத் தலைவரானார். தற்போது சிரியாவின் தலைநகர் டமஸ்கஸில் வசித்து வரும் மிஷ்அல், சமீபத்தில் மத்திய கிழக்கு பத்திரிகை ஒன்றுக்கு பலஸ்தீன் இஸ்ரேல் பிரச்சினை குறித்து ஆங்கிலத்தில் வழங்கிய நேர்காணலின் முக்கிய பகுதிகள் தமிழில் தரப்படுகின்றன.

# பலஸ்தீன நாட்டை மட்டும் உருவாக்குவதே எமது அக்கறை

## ஹமாஸ் அரசியல் துறைத் தலைவர் காலித் மிஷ்அல்



**★ இந்த அக்கறையை எந்தவகையில் நிறைவேற்ற முடியும் என நீங்கள் எண்ணுகிறீர்கள்?**

20 ஆண்டுகளாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வந்திருக்கிறோம். அதன் மூலம் எமக்குக் கிடைத்த அனுபவம், பேச்சுவார்த்தை மேசையில் எமக்கு சுதந்திர பலஸ்தீனம் கிடைக்காது என்பதை உறுதிப்படுத்தி விட்டது. நெடன் யாஹூவோ ஏனைய எந்தவொரு இஸ்ரேலியத் தலைவரோ பலஸ்தீனை எமக்கு அன்பளிப்பாக வழங்கப் போவதில்லை. பலஸ்தீன் அதிகார சபையும் தமது உண்மையான கோரிக்கைகளை கைவிட்டு இஸரேலுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகிறது. நெடன் யாஹூ சமாதானத்திற்கான ஆரம்ப அடிப்படைகளையே ஏற்றுக்கொள்ளவில்லை. அமெரிக்காவையோ, சர்வதேச சமூகத்தையோ நாம் நம்பிப் பயனில்லை.

நான் ஒரு பலஸ்தீனத் தலைவன் என்ற வகையில் எனது மக்களுக்குச் சொல்வதெல்லாம் இது தான். பலஸ்தீன நாடும் பலஸ்தீன உரிமைகளும் இந்த போலிச் சமாதான முயற்சிகளால் ஒரு போதும் எமக்குக் கிடைக்கப் போவதில்லை. எதிர்த்துப் போராடுவதன் மூலமே நமது இலக்கை அடையலாம். இஸ்ரேலுடனான கசப்பான அனுபவங்கள் மூலம் நாம் எதனையும் சாதிக்கவில்லை. நமக்கு முன்னாலுள்ள ஒரே தெரிவு, சுதந்திர பலஸ்தீனத்தை போராட்டத்தின் மூலம் அடைவதே. பலஸ்தீன மக்கள் இன்று இதனை நன்கு உணர்ந்துள்ளனர். இதற்குக் கொடுக்கும் விலை உயர்வானதுதான். ஆனால், பலஸ்தீன மக்களுக்கு இதைத் தவிர வேறெந்தத் தெரிவும் கிடையாது.

**★ நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் ஹமாஸ் ஏன் பங்குகொள்ளவில்லை. அறபு நாடுகள் ஏன் இதற்கு ஆதரவளிக்கவில்லை?**

இஸ்ரேலுடன் பேச்சுவார்த்தை நடத்த முயற்சிக்கும் அறபு நாடுகள், சமாதான முயற்சிகளை சம்பிரதாயபூர்வமான ஒரு நடவடிக்கையாகவே கருதி வருகின்றனது. இதனால்தான் பேச்சவார்த்தைகளில் எதுவித பயனும் கிட்டவில்லை. அறபு நாடுகளைப் பொறுத்தவரை இஸ்ரேலுடன் பேச்சுவார்த்தைக்குச் செல்வதைத் தவிர வேறெந்தத் தெரிவும் அவர்களுக்கு முன்னால் இல்லை.

**★ வேறு தெரிவுகள் என்பதன் மூலம் எதைக் கருதுகிறீர்கள்?**

இஸ்ரேலை எதிர்த்தல்; எதிர்த்துப் போராடுதல். இதுதான் இஸ்ரேலை அழுத்துவதற்கான பலமான ஆயுதம். ஆனால், அறபு நாடுகளிடம் இந்த மனப் பலமோ தைரியமோ இல்லாமல் போய்விட்டது. அமெரிக்காவிடமிருந்தும் இஸ்ரேலிடமிருந்தும் வரும் எங்கள் மீதான அழுத்தங்களை, எமது வெற்றியைத் தடுப்பதற்கான அழுத்தங்களை நிறுத்துவதற்கான ஆற்றல் கூட இவ்வறபு நாடுகளிடம் இல்லை.

பேச்சுவார்த்தை எவ்வித எதிர்பார்ப்புமின்றி முடிவடைந்தால் எமது போராட்டத்தை முன்கொண்டு செல்வதைத் தவிர வேறெந்தத் தெரிவும் எமக்கு இருக்க முடியாது. இன்று எமது போராட்டத்துக்கு எதிரான சதித் திட்டங்களில் அறபு நாடுகள் ஈடுபட்டுள்ளன என்பதை நாம் அறிவோம்.

**★ நீங்கள் கூறும் அறபு நாடுகளில் எகிப்தும் ஒன்று. காஸா முற்றுகையில் எகிப்தும் ஒரு பங்காளி. பதாஹ்-ஹமாஸ் என்பவற்றுக்கு இடையிலான நல்லிணக்கப் பேச்சுவார்த்தையில் எகிப்தை இடைத் தரகராக அறப் லீக் தெரிவுசெய்தபோது நீங்கள் ஏன் அதை ஏற்றுக் கொண்டீர்கள்?**

எகிப்தின் அரசியல் நிலைப்பாடுகள் மற்றும் தீர்மானங்கள் தொடர்பில் எமக்கு அவர்களோடு பாரிய கருத்து முரண்பாடுகள் உள்ளன. ஆனால், பேச்சுவார்த்தையில் எகிப்தை இடைத் தரகராக ஏற்றுக்கொண்டதற்கான காரணம் வேறுபட்டது. முதலாவது, பிராந்தியத்தில் எகிப்தே பெரிய நாடாகும். இரண்டாவது காரணம், எகிப்துக்கும் பலஸ்தீனுக்கும் இடையில் நிலவி வருகின்ற பிராந்திய அரசியல் மற்றும் வரலாற்று ரீதியான தொடர்புகள். இவைதான் ஏனைய அறபு நாடுகளை விட பலஸ்தீன் விவகாரத்தில் தலையிடுவதற்கான சிறப்பு நியாயங்களாகும்.

மூன்றாவது காரணம், ஹமாஸ்-பதாஹ் இடையில் நல்லிணக்கத்தை உருவாக்குவதே பேச்சுவார்த்தையின் உள்ளடக்கமாக இருந்தது. கொள்கையளவில் தலையிடுவதற்கான உரிமை எகிப்துக்கு இருக்கவில்லை. இதே வேளை, எகிப்தை தவிர வேறெந்த அறபு நாட்டின் தலையீட்டையும் பதாஹ் விரும்பவில்லை. ஹமாஸைப் பொறுத்தவரை அது மத்தியஸ்த நாடொன்றையே விரும்பியது. அது x ஆகவே y ஆகவோ இருக்கலாம். நல்லிணக்கமே எமது முதன்மையான நோக்கமாக இருந்தது. ஆனால், அமெரிக்காவின் தலையீட்டால் அது கேள்விக்குள்ளாகிவிட்டது.

**★ எகிப்து எப்போதும் அமெரிக்காவின் அழுத்தத்திற்குக் கட்டுப்பட்டால் உங்களுக்கிடையிலான நல்லிணக்கம் சாத்தியமாகாதே?**

ஆம், எகிப்தை அடிபணிய வைக்கும் அமெரிக்க அழுத்தம் எப்போதும் இருந்து வருகிறது. மஹ்மூத் அப்பாஸூம் இத்தலையீட்டுக்கு அடிபணிந்து வருகிறார். இதனால், பதாஹ்வுக்கும் ஹமாஸூக்கும் இடையிலான பகைமறப்பும் நல்லிணக்கமும் மிகக் கடினமானதாக மாறியுள்ளது.

# நான் அவர்களுக்கு முன் கண்ணீரை மறைத்துக் கொண்டேன்

**முன்னாள் பாதிரியார் இத்ரீஸ் தௌபீக்**

**தமிழில்: ஏ.ஸீ.எம் நதீர்**



இது இங்கிலாந்தின் கிறிஸ்தவப் பாதிரியார் இத்ரீஸ் தௌபீக்கிற்கு நிகழ்ந்தது. அவர், இங்கிலாந்திலுள்ள ஒரு பாடசாலையில் தனது மாணவர்களுக்கு அல்குர்ஆனை ஓதிக் காட்டினார். அதுதான் அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கான ஆரம்ப எட்டாக அமைந்தது.

அவர் கெய்ரோவிலுள்ள இங்கிலாந்து தூதரகத்தில் ஒரு விரிவுரையை நிகழ்த்தியபோது கூறிய கருத்துக்கள்தான் இவை.

நான் ஒரு பாதிரியாராக இருந்து சில வருடங்களாக மக்களுக்கு சேவை செய்வதில் மகிழ்ச்சியடைந்தேன். என்றாலும் என் ஆழ்மனதில் சந்தோஷம் இருக்கவில்லை. சில விடயங்கள் பிழை என்பதை நான் உணர்ந்தேன். உண்மையில் அது இறைவனின் அருள்தான். சில சம்பவங்களும் தற்செயல் நிகழ்வுகளும் எனது வாழ்வை இஸ்லாத்தை நோக்கி வழிநடாத்திவிட்டன.

தௌபீக்கின் வாழ்வில் நடந்த மற்றுமொரு முக்கியமான நிகழ்வு எகிப்தை நோக்கிய அவரது பயணமாகும். அவர் அதனைப் பற்றிக் கூறும்போது, நான் எகிப்தை பிரமிட்டுகள், ஒட்டகங்கள், மணல், பாம் மரங்கள் உள்ள ஒரு நாடாகத்தான் நினைத்திருந்தேன். நான் அங்கு சென்றடைந்தபோது மிகவும் ஆச்சரியமடைந்தேன். ஐரோப்பாவைப் போன்றே அங்கும் அழகான கடற்கரைகள் இருந்தன. கெய்ரோ நோக்கிய எனது பயணம் எனது வாழ்வில் நான் கழித்த மிகச் சிறந்த காலமாகும்.

இந்தப் பயணம்தான் எனது வாழ்க்கையில் முஸ்லிம்களை, இஸ்லாத்தை அறிமுகப்படுத்திய முதல் சந்தர்ப்பமாகும். எகிப்தியர்கள் சிறந்த, இனிமையான ஆனால், உறுதியான மக்கள் என்பதை நான் அறிந்துகொண்டேன்.

எல்லா இங்கிலாந்து மக்களையும் போலவே இஸ்லாம் பற்றிய, முஸ்லிம்களைப் பற்றிய எனது எண்ணமும் சிறந்ததாக இருக்கவில்லை. நான் அவர்களை தற்கொலையாளிகளாகவும் போராடுபவர்களாகவுமே தொலைக்காட்சிகள் மூலம் அறிந்திருந்தேன். அதனால், இஸ்லாம் குழப்பங்கள் நிறைந்த மார்க்கம் என நான் விளங்கியிருந்தேன். என்றாலும், நான் கெய்ரோவில் இருந்தபோது இந்த மார்க்கம் மிக அழகானது என்பதை தெரிந்துக் கொண்டேன்.

சாதாரண மக்கள் தெருவில் வியாபாரம் செய்துகொண்டிருந்தார்கள். அல்லாஹ்வை வணங்க வருமாறு பள்ளிவாசலிலிருந்து அழைப்பொலி கேட்டது. அவர்கள் உடனடியாக மிகுந்த நம்பிக்கையுடன் பள்ளிவாசலுக்குச் சென்றார்கள். அவர்கள் தொழுகின்றார்கள்; நோன்பு நோற்கின்றார்கள்; தர்மம் செய்கின்றார்கள்; மக்காவிற்கு செல்ல வேண்டும் என்ற கனவு அவர்களுக்கு இருக்கின்றது. இந்த உலக வாழ்வின் பின்னர் நிலையான சுவன வாழ்க்கை இருக்கின்றது என அவர்கள் நம்புகின்றார்கள்.

நான் இங்கிலாந்திற்குத் திரும்பியவுடன் எனது மார்க்கத்தைக் கற்றுக் கொடுக்கும் பதவியை ராஜினாமாச் செய்தேன். இங்கிலாந்தின் கல்வித் திட்டத்திலுள்ள ஒரே ஒரு கட்டாயப் பாடம் சமயமாகும். நான் கிறிஸ்தவம், இஸ்லாம், யூதம், பௌத்தம் மற்றும் ஏனைய மதங்களைப் பற்றி கற்பிப்பவனாக இருந்தேன். எனவே, நான் ஒவ்வொரு நாளும் இந்த மதங்களைப் பற்றிக் கற்பிப்பதற்காக தயாராக வேண்டியிருந்தது. எனது மாணவர்களில் அதிகமானவர்கள் அகதிகளான அறபு முஸ்லிம்களாவர். இன்னொரு வகையில் சொல்வதானால் இஸ்லாம் பற்றிக் கற்பிப்பது எனக்கு நிறைய விடயங்களைக் கற்றுத் தந்தது.

குறிப்பாக, டீனேஜ் பருவத்தினர் மிகுந்த பிரச்சினைகளைக் கொண்டவர். ஆனால், எனது மாணவர்கள் ஒரு முஸ்லிம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு சிறந்த உதாரணமாக இருந்தார்கள். அவர்கள் தூய்மையானவர்களாகவும் இரக்கமுள்ளவர்களாகவும் இருந்தார்கள். எனக்கும் அவர்களுக்கும் இடையில் ஒரு நட்புணர்வு வளர்ந்திருந்தது. அவர்கள் ரமழான் காலத்தில் தொழுவதற்காக எனது வகுப்பறையைக் கேட்டார்கள். அதிஷ்டவசமாக எனது வகுப்பறை மட்டுமே 'காபட்' விரிப்பிடப்பட்டதாக இருந்தது.

எனவே, அவர்கள் ஒரு மாதகாலமாக தொழும்போது நான் வழக்கமாக அவர்களுக்குப் பின்னால் இருந்து அவர்களை அவதானித்து வந்தேன். நான் ஒரு முஸ்லிமாக இல்லாதபோதும் அவர்களோடு சேர்ந்து நோன்பு நோற்றேன்.

ஒரு தடவை வகுப்பில் நான் அல்குர்ஆனைப் பற்றிக் கற்பிக்கும்போது இந்த வசனத்தை ஓதினேன்.

''அவர்கள் தூதருக்கு இறக்கப்பட்டவற்றைச் செவிமடுக்கும்போது அவர்களது கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடும். அவர்கள் சத்தியத்தை அறிந்து கொண்டார்கள்.'' (மாஇதா: 83)

எனது கண்களிலிருந்தும் கண்ணீர் வடிந்தது. நான் அதனை மாணவர்களுக்குத் தெரியாமல் அதனை மறைத்துக் கொள்வதற்கு முயற்சித்தேன். எனது வாழ்க்கையின் இன்னுமொரு முக்கியமான நிகழ்வுதான் 2001 செப்டம்பர் 11 தாக்குதலாகும்.

அதற்கு அடுத்த தினம் நிலத்தின் கீழுள்ள ஓர் அறையில் நான் இருந்தேன். எனக்கு மிகவும் பயமாக இருந்தது. அமெரிக்காவில் போன்று இங்கிலாந்திலும் தாக்குதல் நடக்குமோ என்ற பயம் எனக்கிருந்தது. அதேநேரம் மேற்கத்தேயர்கள் இந்த மார்க்கத்தினால் மிகவும் பயந்திருந்தனர். முஸ்லிம்கள் பயங்கரவாதத்தைத் தோற்றுவிப்பதற்காக உருவாகியுள்ளனர் என்று அவர்கள் நினைத்தனர்.

எவ்வாறிருந்தபோதிலும் முஸ்லிம்களுடனான எனது முன்னைய அனுபவங்கள் என்னை வேறொரு வித்தியாசமானக் கோணத்தில் சிந்திப்பதற்கு இட்டுச் சென்றது. இஸ்லாம் ஏன்? நாம் ஏன் முஸ்லிம்களை பயங்கரவாதிகளாகக் காண்கின்றோம். அவர்களுக்கு நடப்பதைப் போன்று கிறிஸ்தவர்களுக்கும் நடந்தால் கிறிஸ்தவர்களும் அதே வழியில் செல்வார்களா?

ஒரு நாள், நான் லண்டனிலுள்ள மிகப் பெரிய பள்ளிவாசலுக்கு இஸ்லாத்தைப் பற்றித் தெரிந்துகொள்வதற்காகச் சென்றேன். நான் லண்டன் மத்திய பள்ளிவாசலுக்குச் சென்றபோது அங்கு யூசுப் இஸ்லாம் இருந்தார் (இஸ்லாத்தைத் தழுவிய முன்னாள் பொப்பிசைப் பாடகர்). அவரைச் சுற்றி வட்டமாக சிலர் அமர்ந்திருந்தார்கள். அவர் அவர்களுக்கு இஸ்லாத்தைப் பற்றிக் கற்பித்துக் கொண்டிருந்தார். நான் அவரிடம், நீங்கள் ஒரு முஸ்லிமாக இருப்பதற்கு என்ன செய்கின்றீர்கள்? என்று கேட்டேன்.

அதற்கவர் இவ்வாறு கூறினார். ஒரு முஸ்லிம் இறைவன் ஒருவன் என்பதை நம்ப வேண்டும். ஒரு நாளில் ஐந்து வேளைகள் தொழ வேண்டும். ரமழானில் நோன்பு பிடிக்க வேண்டும். நான் அவர் பேசும்போது குறுக்கிட்டு, இவை அனைத்தையும் நான் ஏற்றுக் கொண்டுள்ளேன். ரமழானில் நோன்பும் பிடித்தேன் என்று கூறினேன்.

அவர் என்னிடம் அப்படியானால் எதற்காக நீங்கள் காத்துக் கொண்டிருக்கின்றீர்கள்? ஏன் பின்வாங்குகின்றீர்கள்? என்றார்.

நான், இல்லை. எனக்கு இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளும் உத்தேச மில்லை என்ற கூறினேன். அப்போது தொழுகைக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அனைவரும் எழுந்து சென்று தொழுவதற்காக வரிசையில் நின்றார்கள்.

நான் பின்னால் அமர்ந்திருந்தேன். நான் அழுதேன். தொடர்ந்தும் அழுதுகொண்டிருந்தேன். நான் ஏன் முட்டாளாக முயற்சித்துக் கொண்டிருக்கின்றேன் என என்னிடமே நான் கேட்டுக் கொண்டேன்.

எனக்கு இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளும் உத்தேசமில்லை என்ற கூறினேன். அப்போது தொழுகைக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அனைவரும் எழுந்து சென்று தொழுவதற்காக வரிசையில் நின்றார்கள். நான் பின்னால் அமர்ந்திருந்தேன். நான் அழுதேன். தொடர்ந்தும் அழுதுகொண்டிருந்தேன். நான் ஏன் முட்டாளாக முயற்சித்துக் கொண்டிருக்கின்றேன் என என்னிடமே நான் கேட்டுக் கொண்டேன்.



அவர்கள் தொழுகையை நிறைவு செய்த பின்னர் நான் யூசுப் இஸ்லாமிடம் சென்றேன்.

அவரிடம் நான் இஸ்லாத்தை ஏற்பதற்காக சொல்ல வேண்டிய வார்த்தைகளைக் கற்றுத் தருமாறு கேட்டேன். அவர் எனக்கு அதன் கருத்தை ஆங்கிலத்தில் தெளிவு படுத்தினார். பின்னர் அவர் அறபு மொழியில் அல்லாஹ்வை தவிர வேறு இறைவன் இல்லை. முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராவார் என்று கூறினார். நானும் அதனையே கூறினேன். இதனை கூறியபோது தௌபீக்கின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது.

பின்னர், தௌபீக் இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகள் தொடர்பான ஒரு புத்தகத்தை எழுதினார். அதில் அவர் இஸ்லாத்தை பலரும் சகிப்புத் தன்மையுள்ள மார்க்கம்; அது தீவிரவாதத்தின் மார்க்கமல்ல என்று கூறுகின்றனர். ஆனால், அதனைத் தெளிவு படுத்த ஒருவரும் முயற்சிக்கவில்லை.

எனவே, நான் இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகள் பற்றி முஸ்லிம் அல்லாதவர்களு க்குத் தெளிவுபடுத்துவதற்காக ஒரு புத்தகத்தை எழுதத் தீர்மானித்தேன். நான் அதில் இஸ்லாம் ஓர் அழகான மார்க்கம் என்பதையும் அது நிறைய வரப்பிரசாதங்களைக் கொண்டிருக்கின்றது என்பதையும் மக்களுக்குச் சொல்ல முயற்சித்தேன்.

தௌபீக், நபி (ஸல்) அவர்களைப் பற்றி ஒரு புத்தகத்தை எழுதிக் கொண்டிருப்பதாகக் கூறுகின்றார். அந்தப் புத்தகம் அவர் பற்றி எழுதப்பட்டுள்ள ஏனைய அனைத்துப் புத்தகங்களை விடவும் வித்தியாசமானதாக இருக்கும் என தான் நம்புவதாகவும் அவர் தெரிவிக்கின்றார்.

அவர், இஸ்லாத்தின் உண்மையான வடிவத்தை உலகத்திற்கு அறிமுகப்படுத்துவதற்கு மிகச் சிறந்ததும் மிக விரைவானதுமான வழிமுறை, யதார்த்த வாழ்வில் ஒரு முஸ்லிம் இஸ்லாத்தை தனது வாழ்க்கையில் சிறந்த முறையில் எடுத்து நடப்பதாகும் என்று கூறுகின்றார்.

(மூலம்:ஒன்இஸ்லாம் இணையம் )

# திலாவதுல் குர்ஆன்: சில பத்வாக்கள்



## பத்வா

அஷ்ஷெய்க் அப்துல் ஹை யூசுப்
பேராசிரியர் சூடான் பல்கலைக்கழகம்

நான் எனது தாய்க்காகவும் தந்தைக்காகவும் குர்ஆனை ஓதி, தமாம் செய்ய விரும்புகின்றேன். நான் அவர்கள் இருவருக்குமாக குர்ஆனை தமாம் செய்கின்றேன் என்ற நிய்யத்துடன் ஓத ஆரம்பிக்க வேண்டுமா? அல்லது அவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக அல்குர்ஆனை தமாம் செய்கின்றேன் என நிய்யத் வைக்க வேண்டுமா?

இரண்டு விடயங்களுமே ஆகுமானதாகும். ஏனெனில், யார் அல்குர்ஆனிலிருந்து ஒரு எழுத்தை ஓதுகின்றாரோ அவருக்கு நன்மை காணப்படுகின்றது. அந்த நன்மை, அதனைப் போன்ற பத்து மடங்காகவும் காணப்படலாம். நீங்கள் அவர்களுக்காக ஒரு தடவை அல்குர்ஆனை பூரணமாக ஓதி தமாம் செய்தால், அல்லாஹுத்தஆலா அவர்கள் இருவருக்கும் அதன் கூலியை சமமாக வழங்குவான். நீங்கள் அவர்கள் இருவருக்கும் தனித்தனியாக ஓதி தமாம் செய்தால் அல்லாஹுத்தஆலா அவர்கள் இருவருக்கும் அல்குர்ஆனை ஒரு தடவை ஓதியதற்காக பூரணமான நன்மையை வழங்குவான். அல்லாஹ் மிக அறிந்தவன்.

அல்குர்ஆனை ஓதுவதற்காக தஜ்வீத் சட்டத்தைப் படித்த ஒருவர், தொழுகையில் அதனைப் பேணாது ஓதினால் அவருக்கான தீர்ப்பு என்ன?

நிச்சயமாக அல்லாஹுத்தஆலா எம்மனைவர் மீதும் அல்குர்ஆனை சிறந்த முறையில் ஓதுவதைக் கடமையாக்கி இருக்கின்றான். இது பற்றி அல்லாஹுத்தஆலா அல்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான். அல்குர்ஆனை ஓத வேண்டிய முறையில் அழகாக ஓதுவீராக. இன்னுமொரு இடத்தில் நாம் அவர்களுக்கு வேதத்தை வழங்கினோம். அவர்கள் அதனை சிறந்த முறையில் ஓதுகின்றார்கள். அவர்கள் அதனை விசுவாசம் கொண்டிருக்கின்றார்கள் என்று கூறுகின்றான்.

அல்குர்ஆனை நபி (ஸல்) அவர்கள் எவ்வாறு ஓதினார்களோ அதே முறையிலே ஓத வேண்டும். அதற்கு நாம் அனைவரும் எங்களுக்கு முடியுமான வரையில் முயற்சிப்போம். அல்லாஹ் மிக அறிந்தவன்.

எனக்கு ஒரு சகோதரி இருக்கின்றாள். அவள் குடித்த ஒரு பானத்திலே சூனியம் செய்யப்பட்டிருந்தது. சுமார் 4 வருடங்களாக நாம் அல்குர்ஆனின் மூலமும் ஷரீஆவில் அங்கீகரிக்கப்பட்ட ருக்கிய்யா மூலமாகவும் சிகிச்சையளித்து வருகின்றோம். என்றாலும் எவ்விதப் பலனும் கிடைக்கவில்லை.

உங்கள் மீது அல்குர்ஆன் ஓர் நோய் நிவாரணி என்பதை நம்ப வேண்டிய கடமை இருக்கின்றது. ஏனெனில், அல்லாஹுத்தஆலா கூறுகின்றான். நாங்கள் அல்குர்ஆனிலிருந்து நோய் நிவாரணம் அளிக்கக் கூடியவற்றை முஃமின்களுக்கு அருளாக இறக்கியிருக்கின்றோம். இன்னுமொரு வசனத்தில் நபியே நீர் கூறுவீராக, அது விசுவாசம் கொண்டவர்களுக்கு நேர்வழி காட்டுவதாகவும் நோய் நிவாரணியாகவும் காணப்படுகின்றது என்று கூறுகின்றான்.

பிறிதொரு வசனத்தில் அல்லாஹுத்தஆலா இவ்வாறு கூறுகின்றான்: ''மக்களே அல்லாஹ்விடமிருந்து உங்களுக்கு ஒரு நல்லுபதேசம் வந்திருக்கின்றது. அது உங்கள் உள்ளங்களில் உள்ளவற்றுக்கு நிவாரணமாகவும் முஃமின்களுக்கு நேர்வழி காட்டுவதாகவும் அருளாகவும் காணப்படுகின்றது. எனவே, நீங்கள் பிரயோசனமில்லை என்று சொல்லக் கூடாது. எல்லா விடயங்களுக்கும் ஒரு காலம் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். அல்லாஹுத்தஆலா தனது அடியானுக்குப் பதிலளிப்பதில் அவசரப்படுவதில்லை. நீங்கள் அல்லாஹ்விடம் உதவி தேடுங்கள். நம்பிக்கை இழக்க வேண்டாம். அவனிடம் நிவாரணத்தைக் கேளுங்கள்.

அல்குர்ஆன் வசனங்களை எமது அன்றாட வாழ்க்கையில் மேற்கோள் காட்டுவதற்காகப் பயன்படுத்த முடியுமா?

அல்குர்ஆன் வசனங்களை மேற்கோள் காட்டுவதற்கு எவ்விதத் தடையுமில்லை. ஆனால் அது ஷரீஆ அங்கீகரித்த நோக்கத்தைக் கொண்டதாக இருக்க வேண்டும். உதாரணமாக மக்களுக்கு உபதேசம் செய்தல். அவர்களுக்கு செலவளிக்குமாறு, தர்மம் செய்யுமாறு கூறுதல் போன்றவற்றைக் கூறலாம். அல்லது ஒருவர் தனது மாணவர்களின் அறிவைப் பெற்றுக் கொள்வதற்காக தனது முயற்சிகளை செலவிட வேண்டும். அதன் மூலம் பரீட்சையில் வெற்றிபெற்று, பரிசில்களைப் பெற்று மகிழ்ச்சியடையலாம் என்று கூறுகின்றார். அவரும் ஒரு நல்ல பணியையே மேற்கொள்கின்றார். இதுபோன்ற விடயங்களுக்காக அல்குர்ஆன் வசனங்களை மேற்கோள் காட்ட முடியும்.

மோசமான ஒரு விடயத்திற்காக அல்லது பரிகசிப்பதற்காக அல்லது மோசமான வார்த்தைகளைப் பேசுவதற்காக அல்லாஹுத்தஆலாவின் வசனங்களைப் பயன்படுத்த முடியாது. அத்தகையவர்கள் மீது பாவம் விதிக்கப்படும்.

ஸஜ்தா திலாவத்தில் ஓத வேண்டிய துஆ எது?

ஸஜ்தா திலாவத்தில் (அல்குர்ஆனை ஓதும்போது ஸஜ்தா செய்யுமாறு கட்டளையிடுகின்ற வசனங்கள்) சுஜூத் செய்பவர், நபி (ஸல்) அவர்கள் ஓதிய இந்த துஆவை ஓதலாம்.

''யா அல்லாஹ், எனக்கு நன்மை அளித்துவிடுவாயாக. என்னை விட்டும் பாவங்களை நீக்கிவிடுவாயாக. எனது நன்மைகளை உன்னிடம் சேமிப்பாக ஆக்கிவிடுவாயாக. அவற்றை நீ உனது அடிமை தாவூத் (அலை) அவர்களிடமிருந்து ஏற்றுக் கொண்டது போல ஏற்றுக் கொள்வாயாக. (திர்மிதி)

இந்த துஆவை மாத்திரம் ஓதுவது கட்டாயமல்ல. இது தவிர்ந்த வேறு துஆக்களையும் ஓதலாம். பாவமன்னிப்புக் கேட்கலாம். இன்ஷா அல்லாஹ், அல்லாஹுத்தஆலா கூலி வழங்குவான்.

அல்குர்ஆனின் மீது மூக்குக் கண்ணாடியை வைக்கலாமா?

அல்குர்ஆன் மீது எந்தவொரு பொருளையும் வைக்க முடியாது. மாற்றமாக அதனை கண்ணியப்படுத்த வேண்டும். அல்லாஹுத்தஆலா கூறுகின்றான்: யார் அல்லாஹுத்தஆலாவின் கண்ணியங்களை மதிக்கின்றாரோ அவருக்கு அவருடைய இரட்சகனிடம் கூலி இருக்கின்றது.

இந்த வசனத்தை விளக்குகின்ற தப்ஸீர் அறிஞர்கள், இங்கு வருகின்ற ஹுருமாத் என்ற அறபுச் சொல், அனைத்து வகையான கண்ணியங்களையும் குறிப்பிடுகின்றது எனக் கூறுகின்றனர். அல்லாஹுத்தஆலாவுடைய வேதம் மிகவும் உயர்ந்தது. அது எங்களிடம் மிகவும் புனிதமானதாக இருக்கின்றது. எனவே, அதன் மீது கண்ணாடியை வைப்பது, அல்லது அது தவிர்ந்த வேறெதனையும் வைப்பது முற்று முழுதாக தவிர்க்கப்பட வேண்டும்.



அல்குர்ஆன் மஜ்லிஸுக்குப் பிறகு துஆ ஓதலாமா?

துஆ என்பது ஒரு வணக்கமாகும் (இபாதத்). நபி (ஸல்) அவர்கள் இந்தக் கருத்தைக் கூறியுள்ளார்கள். அவர்கள் ஒவ்வொரு நற்செயல்களுக்குப் பின்னாலும் பிரார்த்திக்கக் கூடிய துஆக்களை எமக்குக் கற்றுத் தந்துள்ளார்கள். நபி (ஸல்) அவர்கள் தனது தோழர்களுக்கு கடமையான தொழுகைகளுக்குப் பின்னர் யா அல்லாஹ் எனக்கு உன்னை திக்ர் செய்வதற்கும் உனக்கு நன்றி செலுத்துவதற்கும் உன்னை நல்ல முறையில் வணங்குவதற்கும் உதவி செய்துவிடுவாயாக என்று பிரார்த்திக்குமாறு கற்றுக் கொடுத்தார்கள். அவ்வாறே நோன்பு திறந்ததன் பின்னர், யா அல்லாஹ் உனக்காகவே நோன்பு நோற்றேன். உனது ஆகாரத்தைக் கொண்டே நோன்பு திறந்தேன் என்ற துஆவைக் கற்றுக் கொடுத்தார்கள்.

நபி (ஸல்) அவர்கள் ஸகாத் கடமையானவர் அதனை வழங்குகின்றபோது அவருக்காகவும் அவரது குடும்பத்தினருக்காகவும் பிரார்த்தித்துள்ளார்கள். எனவே, அல்குர்ஆனை மஜ்லிஸாக இருந்து ஓதியவர்கள் ஓதி முடித்ததன் பின்னர் துஆக் கேட்பதில் எவ்வித பிரச்சினையுமில்லை. ஏனெனில், இவ்வாறான மஜ்லிஸுகளை மலக்குமார்கள் சூழ்ந்திருக்கின்றார்கள். அல்லாஹுத்தஆலாவுடைய அருள் இறங்குகின்றது. அவனுடைய அமைதி இறங்குகின்றது. துஆ சிலவேளை, ஏற்றுக்கொள்வதற்கான காரணமாகவும் இருக்கலாம். அல்லாஹ் மிக அறிந்தவன்.

அல்குர்ஆன் ஒலிநாடாக்களை ஒலிக்கச் செய்துவிட்டு அதனை செவிமடுக்காது நண்பர்களுடன் கதைத்துக் கொண்டிருத்தல், தொலைபேசியில் உரையாடுதல், இது போன்ற வேறு வேலைகளைச் செய்து கொண்டிருத்தல் போன்றன ஆகுமானதா? இசையுடன் கூடிய பாடல்களை ஒலிக்கச் செய்துவிட்டு வேறு வேலைகளைச் செய்வதை விடவும் இது சிறந்ததல்லவா?

இப்னுல் முன்திர், அவருடைய அஷ்ராப் என்ற கிரந்தத்தில் இவ்வாறு குறிப்பிடுகின்றார்: தொழுகை, வெள்ளிக்கிழமை குத்பா தவிர்ந்த ஏனைய நேரங்களில் அல்குர்ஆனை செவிமடுப்பது கடமை அல்ல என்பதில் அனைத்து அறிஞர்களும் ஒருமித்த கருத்தைக் கொண்டிருக்கின்றனர். அதாவது, அல்லாஹுத்தஆலா கூறுகின்றான்: அல்குர்ஆன் ஓதப்பட்டால் நீங்கள் அதற்கு செவிதாழ்த்துங்கள், மௌனமாக இருங்கள், நீங்கள் இரக்கமுடையவர்களாக இருப்பீர்கள்.

என்றாலும், ஷாபிஈ மத்ஹபைச் சார்ந்தோர் அல்குர்ஆன் ஓதப்படும்போது அதனைச் செவிமடுப்பதை ஸுன்னத் என்று கூறுகின்றனர். அதன்போது பேசுவதை மக்ரூஹ் (வெறுக்கத்தக்கது) என்று கூறுகின்றனர். அத்தோடு அதனால் எந்தப் பிரயோசனமும் இல்லை என்றும் கூறுகின்றனர்.

சந்தைகளில் அல்குர்ஆனை ஒலிக்கச் செய்வது தொடர்பில் 2 கருத்துக்கள் காணப்படுகின்றன. அதில் முதலாவது ஆகும் என்பதாகும். ஏனென்றால், பல்வேறு தேவைகளுக்காக அங்கு வந்திருக்கின்ற மக்கள் அதன் மூலம் பிரயோசனமடையலாம்.

இரண்டாவது கருத்து, அவ்வாறு ஒலிக்கச் செய்வது கூடாது என்பதாகும்.

இங்கு இசையுடன் கூடிய பாடல்களையும் அல்லாஹ்வின் வேதமாகிய அல்குர்ஆனையும் ஒப்பிட முடியாது. அதாவது அருளாளனின் அல்குர்ஆனையும் ஷைத்தானின் வேதமாகிய பாடல்களையும் ஒப்பிட முடியாது. அல்லாஹுத்தஆலா அனைத்தையும் அறிந்தவன். அவன் அறியாத எதுவுமில்லை.




நாஸிக் மஜீத்

# உடல் நரம்பில் ஓடும் குருதி போன்றது தஃவா

தஃவா ஒரு சமூகப் புனரமைப்புப் பணி. நபி (ஸல்) அவர்கள் தனது வாழ்வில் 23 வருடங்களை இதற்கெனவே செலவிட்டார்கள். தனது வாழ்வின் நோக்கமே தஃவாதான் என்று வாழ்ந்தவர்கள் அவர்கள். இந்த உயரிய அழைப்புப் பணிக்காக எதனையும் இழக்கத் தயாராய் இருந்தார்கள்; நிறையவே இழந்தார்கள். நிறையவே காயங்கள் சுமந்தார்கள். வசைமொழிகளை எதிர்கொண்டார்கள். வலிகளைத் தாங்கிக் கொண்டார்கள். இந்த இழப்புகளின், காயங்களின், வலிகளின் பெறுபேறாக பண்பாடுமிக்க, நாகரீகமான ஒரு முன்மாதிரி சமூகமொன்றை கட்டியெழுப்பினார்கள்.

சொல்லொணாத் துயர்களினதும், எதிர்ப்புக்களினதும், துன்புறுத்தல்களினதும் பெறுபேறுதான் நாம் ஏற்றிருக்கும் எமது இந்த இஸ்லாம் மார்க்கம். இது எத்தனை கஷ்டங்களின் தலையீடுகளை தாண்டி வந்தது என்பது எமக்குத் தெரியும். இம்மார்க்கத்தைக் கட்டியெழுப்ப, பாதுகாக்க பலநூறு உயிர்களை பலிகொடுக்க நேரிட்டதை நாம் அறிவோம். இந்த தஃவாவின் நிலைத்தலுக்காக வாளேந்திப் போரிட்டதையும் நாம் அறிவோம். பல இரவுகள் தூங்காத விழிகளோடு இரவுகளைப் பகலாக்கியதையும் நாம் அறிவோம்.

அதுமட்டுமல்ல, பல்வேறு காட்டிக் கொடுப்புக்களுக்கும், துரோகத்தனத்திற்கும் நயவஞ்சகத்தனத்திற்கும் முகங்கொடுக்க வேண்டியிருந்ததையும் நாம் அறிவோம். இந்த தஃவாவை கைவிடுமாறுசொல்லி தன் காலடி தேடி வந்த அதிகாரங்களையும், செல்வங்களையும் புறக்கணித்ததையும் நாம் அறிவோம்.

''எனது வலது கையிலே சூரியனையும் இடது கையிலே சந்திரனையும் வைத்தாலும் நான் ஏற்றிருக்கும் இந்த தஃவாவை கைவிடப்போவதில்லை'' என்ற நபி (ஸல்) அவர்களின் கொள்கைப்பற்று மிக்க வீர வார்த்தைகளையும் நாம் அறிவோம்.

இன்று எமது கைகளில் இஸ்லாம் இருக்கிறது. நபி (ஸல்) அவர்களும் தோழர்களும் எதிர்கொண்ட கஷ்டங்கள், சவால்கள் எதுவுமில்லை. எனினும், வெறும் பெயர் தாங்கிய முஸ்லிம்களாக இருக்கிறோம் என்பதுதான் மனதுக்குக் கஷ்டமாக இருக்கிறது. தாய்வழி, தந்தைவழியாக இஸ்லாத்தைப்பெறும் பரம்பரை முஸ்லிம்களாகவே நாம் இருக்கிறோம். முஸ்லிம் தாய்க்கும் தந்தைக்கும் பிறப்பதால் மட்டும் முஸ்லிமாகிவிட முடியாது என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும்.

இன்றைய நாட்களில் எம்மில் பலர் அடிப்படை வணக்கமான தொழுகையைக் கூட நிறைவேற்றாதவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு முஸ்லிமுக்கும் காபிருக்குமிடையிலான அடிப்படை வேறுபாடே தொழுகைதான் என்பதை அறியாதவர்களாகவே இருக்கிறார்கள். ''யாருக்கு தொழுகை இல்லையோ அவருக்கு மார்க்கம் இல்லை'' எனும் ஹதீஸை அறியாதவர்கள் பலர் இன்னும் எம்மில் இருக்கிறார்கள். நபியின் வார்த்தைகள் இப்படி பேசும்போது நாம் தொழுகை இல்லாமல் எப்படி முஸ்லிம்களாக இருக்க முடியும்?

இந்த இழிநிலையைக் களைந்து தனி மனிதர்களை தஃவாவின் பால் உள்ளீர்ப்பதற்கான செயற்பாடு அவசியப்படுகிறது. எனவே, இந்த இடத்தில் தஃவா என்பது இன்றியமையாத தேவையாகிறது. தொழுகை கூட இல்லாமல் இஸ்லாமிய அழைப்புப் பணியில் ஈடுபடுவோரையும், அமைப்புக்களையும் விமர்சிக்கும் 'வெட்டி' மனிதர்களின் இலட்சிய வாதங்களை ஒருபுறம் வைத்துவிட்டு எமது பணியில் நாம் முன்செல்ல வேண்டியது காலத்தின் தேவையாக இருக்கிறது.

தஃவா என்பது எப்போதும், எங்கும் இருக்க வேண்டிய ஒரு பணி. அதற்கென்று காலம், நேரம், இடம் பார்க்க முடியாது. அதிலும், இன்றைய கால சூழ்நிலையில் தஃவா மிக இன்றியமையாத தேவையாக மாறியுள்ளது. ஏனெனில், நாம் வாழும் இன்றைய எமது உலகின் போக்கு இத்தேவையை உணர்த்தி நிற்கிறது. உலகக் கவர்ச்சிகளும் மனிதனின் அபரிமிதமான தேவைகளும் சடவியல் வாழ்வும் மனிதனை ஆன்மீகத்தைப் புறக்கணித்து உலக இன் பங்களின் பால் ஈர்த்துள்ளது.



எனவே, தஃவா என்பது எம் அனைவரதும் முதன்மையான பணி. அது மார்க்கம் விதியாக்கிய கடமை. எமது முதுகுத் தண்டுகளின்மீது சுமத்தப்பட்ட பொறுப்பு. நாளைய நாளில் இதற்கெனப் பதிலளிக்க வேண்டியிருக்கிறது. ''மனிதர்களிடையே உருவாகிய சமூகங்களில் நீங்கள் தான் சிறந்த உம்மத்தாக இருக்கிறீர்கள். ஏனெனில், நீங்கள் நன்மையை ஏவுகிறீர்கள், தீமையைத் தடுக்கிறீர்கள், அல்லாஹ்வை ஈமான் கொள்கிறீர்கள்'' (ஆல இம்றான்: 110) எனும் அல்குர்ஆன் வாசகம் சிந்திக்கத்தக்கது.

அல்லாஹுதஆலா நபி (ஸல்) அவர்களின் சமூகமான எம்மை சிறந்த சமூகமென்று (ஹைர உம்மத்) வர்ணிக்கக் கார ணம் நாம் தஃவாப் பணியில் ஈடுபடுவதனாலாகும். அல்லாஹுதஆலா இப்படிச் சொல்லும் போது நாம் தஃவாவைப் புறக்கணித்து வாழ்ந்தால் எப்படி சிறந்த சமூகமாக இருக்க முடியும்? தஃவா என்பது ஒவ்வொரு தனிநர் மீதுமுள்ள பொறுப்பாகும் என்பதை மனம் கொள்ள வேண்டும்.

தஃவாப் பணியை மேற்கொள்ள வேண்டுமெனில் இஸ்லாத்தை துறைபோக கற்றிருக்க வேண்டுமென்று சிலர் நினைக்கலாம். இது பிழையானதொரு கண்ணோட்டமாகும். நாம் வாழும் சூழலில் காணப்படும் தவறான பழக்கவழக்கங்கள், இஸ்லாத்திற்கு முரணான நடைமுறைகளைக் களைவதும் தஃவாப் பணிதான். நன்மையான செயற்பாடுகளின்பால் தூண்டுதல் வழங்குவதும், தீமையான விடயங்களைக் கைவிடும்படி தடுப்பதும் தான் தஃவாவாகிறது. இதற்கு இஸ்லாமிய ஷரீஆ சட்டங்களை துறைபோகக் கற்றிருக்க வேண்டிய அவசியமில்லை. அவரவரது இயலுமைக்கேற்ப ஒவ்வொரு தனிநபரும் மேற்கொள்ள வேண்டிய பணியே தஃவாவாகும்.

அவ்வாறே, இன்னும் சிலரையும் நாம் எமது சூழலில் காண முடியும். அவர்கள் தஃவாவை தமக்கான கௌரவமாகக் கருதுவர். இது பிழையான ஒரு புரிதலாகும். அதுபோன்று தஃவா அமைப்பினுள் தோன்றுகின்ற சிறுசிறு கருத்து முரண்பாடுகளுக்கும் பிரச்சினைபட்டு விலகிச்செல்லக்கூடிய சில மனிதர்களும் இருக்கிறார்கள். இதுவும்கூட ஒரு பிழையான போக்காகும். இது இஸ்லாமிய அமைப்புக்களின்மீது அவர்களுக்கிருக்கும் புரிந்துணர்வின்மையை அல்லது அறியாமையைப் புலப்படுத்துகிறது.

தஃவா என்பது; தேவையான போது அணிவதற்கும் தேவையில்லாதபோது களைவதற்கும் அதுவொன்றும் ஆடையல்ல. மாறாக, அது மனித உடலின் நரம்புகளில் ஓடும் குருதியைப் போன்றது. மனித வாழ்வோடு இரண்டறக் கலந்தது. ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தது. மனித உடலில் இரத்தம் ஓடிக் கொண்டிருப்பதைப் போல் எமது வாழ்வியல் ஓட்டத்தோடு தஃவாவும் இணைந்து செல்ல வேண்டும். இரத்தவோட்டம் நின்றுவிடுமானால், எமது உயிரும் நின்றுவிடும். அதுபோலவே தஃவாப் பணியும் நின்றுவிடுமானால், இஸ்லாத்தின் இயக்கமும் நின்றுவிடும்.

**தஃவா என்பது; தேவையான போது அணிவதற்கும் தேவையில்லாத போது களைவதற்கும் அதுவொன்றும் ஆடையல்ல. மாறாக அது மனித உடலின் நரம்புகளில் ஓடும் குருதியைப் போன்றது. மனித வாழ்வோடு இரண்டறக் கலந்தது. ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தது.**

நபி (ஸல்) அவர்கள் தஃவா என்பதை தனது உடலில் ஓடும் குருதியாகத்தான் பார்த்தார்கள் என்பதை அவர்களது வாழ்வியல் பக்கங்களைப் புரட்டிப் பார்த்தால் தெரியும். இத்தகைய உணர்வே, தான் வளர்த்துவிட்ட ஸஹாபாக்களிடமும் காணப்பட்டது. அவர்கள் தமது வாழ்வில் எதிர் கொண்ட சவால்களின் போது இதனை வெளிப்படுத்தியிருப்பதை ஸஹாபாக்களின் வரலாறுகளை வாசிப்புக்குட்படுத்தும் போது தெரிந்துகொள்ள முடிகிறது.

இஸ்லாமிய வரலாற்றில் அம்மார், யாஸிர், சுமையா, பிலால், ஹன்ழலா (றழி) போன்ற பல்வேறு ஸஹாபாக்களின் தியாகங்கள் இந்த உண்மையைத் தான் எமக்குச் சொல்கிறது. அவர்கள் தஃவாவை ஆடையாகப் பார்த்திருந்தால் அவர்கள் எதிர் கொண்ட துன்ப துயரங்களின் போது அதனைக் களைந்திருப்பார்கள். ஆனால், அவர்கள் தமது உடலில் ஓடும் குருதியாகப் பார்த்ததன் விளைவே இத்தனை வலிகளும் துயர்களும், வேதனைகளும் சுமக்கக் காரணமாயிற்று. விளைவு-அவர்களை சொர்க்கத்திற்கு சொந்தக்காரர்களாக மாற்றிவிட்டது.

நவீன இஸ்லாமிய தஃவா உலகினை எடுத்துப் பார்த்தாலும் இந்த உண்மையைப் புரிந்து கொள்ளலாம். நவீன இஸ்லாமிய இயக்கங்களின் தந்தையான இமாம் ஹஸனுல் பன்னா (றஹ்) அவர்களின் வாழ்வியலை எடுத்துப் பார்த்தால் இத்தகைய தியாகங்களையும் உழைப்புக்களையும் காண முடியும். அவ்வாறே அந்த இஹ்வானுல் முஸ்லிமூன் அமைப்பின் சகோதரர்கள் சிறையிடப்பட்டது, துன்புறுத்தப்பட்டது, கொல்லப்பட்டது எல்லாமே இந்த இஸ்லாம் வாழ வேண்டு மென்ற நோக்கிலேயே என்பதையும் தெரிந்துகொள்ளலாம்.

ஷஹீத் ஸெய்யித் குத்ப் அவர்களின் வார்த்தைகள் இதற்கு நல்லதொரு சான்றாகக் காணப்படுகிறது. பாருங்கள்! ஷஹீத் ஸெய்யித் குத்ப் அவர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டு தூக்குமேடையில் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். அப்போது கலிமா சொல்லித்தரவந்த மதகுருவை நோக்கி சொல்லும் வீர வார்த்தைகள் தான் இவை: ''நீ லாஇலாஹ இல்லல்லாஹ்வை சாப்பிடுகிறாய். நானோ அதற்காக மரணிக்கப் போகிறேன். தொழுகையில் கலிமதுஷ் ஷஹாதாவுக்காக எந்த விரலை உயர்த்தினேனோ அந்த விரலால் எழுதியதை ஒருபோதும் நான் வாபஸ் பெறப்போவதில்லை. என்னுடைய கருத்தாக இருந்தால் வாபஸ் பெறலாம். அல்லாஹ்வின் கருத்தை வாபஸ் பெறுவதற்கு எனக்கு என்ன யோக்கியதை இருக்கிறது?''

எத்துனை யதார்த்தமான, உணர்வுபூர்வமான வார்த்தைகள் இவை. தஃவாவை ஆடையாகப் பார்க்கும் ஒரு மனிதனின் நாவிலிருந்து இத்தகைய வார்த்தைகளை எதிர்பார்க்க முடியாது. தஃவா தனது உடம்பில் ஓடும் குருதி என்பதை ஷஹீத் ஸெய்யித் குத்ப் அவர்கள் நன்கு விளங்கியிருந்தார்கள்.

இன்று எமது நிலை மிகவும் பரிதாபகரமானது. வெறுமனே கொள்கைவாதம், கோட்பாட்டு வாதம், இலட்சியவாதம் பேசுவதைவிடுத்து தஃவாவை எமது தோள்களில் சுமக்க முன்வர வேண்டும். வெறும் பெயர்தாங்கி முஸ்லிம்களாக இருப்பதைவிடுத்து எமது இந்த மார்க்கம் தொடர்ந்து உயிர் வாழ எம்மாலான ஆக்கப் பணிகளில் ஈடுபடுவோம். அல்லாஹு தஆலா எம் செயல்களுக்கு நற் கூலி தருவானாக.

# பென்டிரைவ்

## சுயமாக இயங்குகின்றதா?

பென்டிரைவ் இப்பொழுது அனைவராலும் உபயோக்கிக்கப் படுகிறது. இதனை கணினியில் நுழைத்தவுடன் அது தானாகவே இயங்க ஆரம்பிக்கும் வகையில் கணினியில் செட்டிங்க்ஸ் செய்ய பட்டிருக்கும். இது சிறந்த வசதியாகும். ஒரு சிலருக்கு இது பிடிப் பதில்லை வேறு ஏதே னும் வேலை செய்துக் கொண்டிருக்கும் போது பென் டிரைவை நுழைத்தவுடன் அது வேலை செய்ய ஆரம் பிப்பதால் செய்து கொண்டி ருக்கும் வேலையில் கவனம் சிதறுகிறது.




இந்த வசதியை நாம் எப்படி செயலிழக்க செய்வது என்பதை இப்பொழுது பார்ப்போம்.

உங்கள் கணினியில் Start - Run -சென்று gpedit.msc என்று கொடுத்து உங்கள் கணினியின் Group policy பகுதிக்கு செல்லுங் கள்.

உங்களுக்கு ஒரு விண்டோ வரும். அதில் கீழே குறிப்பிடப் பட்டுள்ள இடத்திற்கு சரியாக செல்லுங்கள்.

- Administrative Templates

- System

Select Turn off Autoplay - என் பதை தேர்வு செய்து கொள்ளுங் கள்.

Turn off Autoplay என்பதை இரண்டு முறை க்ளிக் செய் தால் ஒரு விண்டோ வரும்.

அதில் Enable என்பதை தேர்வு செய்து கொண்டு கீழே உள்ள கட்டத்தில் All drives என்பதை தேர்வு செய்து கொள்ளுங்கள்.

கீழே உள்ள OK பட்டனை அழுத்தி விடுங்கள். அவ்வளவு தான் இனி நீங்கள் பென்டிரைவை உங்கள் கணினியில் நுழைத்தவு டன் தானாக இயங்காது.

My Computer சென்று நீங்கள் தான் இயக்க வேண்டும்.

## ஹிஜ்ரத்திலிருந்து...

மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் சென்ற அநேகர் மறைமுகமாகவே சென்றனர். உமர் (றழி) அவர்கள் வெளிப்படையாக அறி வித்துவிட்டு சென்றார்.

உமர் (றழி) அவர்களுக்கு ஹிஜ்ரத் செல்ல அனுமதி வழங்கப்பட்டபோது அவர் கஃபா விற்கு சென்றார். அங்கு குறைஷித் தலைவர் கள் வட்டமாக அமர்ந்திருந்தனர் அவர் மகாம் மஹ்மூத் எனுமிடத்தில் இரண்டு ரக்ஆத்துக் களை தொழுதார்.

பின்னர் அந்த குறைஷித் தலைவர்களிடம் வந்து உங்களில் யார் தனது தாய், குழந் தையை இழப்பதற்கும், தனது குழந்தை அநாதையாக இருப்பதற்கும், தனது மனைவி விதவையாக இருப்பதற்கும் விரும்புகின் றாரோ அவர் என்னை இந்தப் பள்ளத்தாக்கிற் குப் பின்னால் சந்திக்கவும் என்று கூறி சென் றார்.

# பிரச்சினையை புரிந்துகொள்ளல்

ஓர் அரசர் தன் நாட்டுக்கு முத லமைச்சர் ஒருவரைத் தேர்ந்தெ டுக்க நினைத்தார். சம தகுதி பெற்ற நான்கு பேர் அவரது அமைச்சரவையில் இருந்ததால், ஏதாவது ஒரு பரீட்சை வைத்து அந்த நால்வரில் ஒருவரை முதல மைச்சராகத் தேர்ந்தெடுக்க முடி வெடுத்தார்.

ஒரு நாள் அந்த நால்வரையும் அழைத்து, ''என்னிடம் ஒரு பூட்டு இருக்கிறது. கணித முறைப்படி வடிவமைக்கப்பட்ட இந்த விஞ் ஞான பூட்டைத் திறக்க நாளை காலை உங்கள் நால்வருக்கும் ஒரு வாய்ப்பு வழங்கப்ப டும். யார் இந்தப் பூட் டைக் குறைவான நேரத் தில் திறக்கிறாரோ அவரே நாட்டின் முதல மைச்சர்'' என்று அறிவித் தார்.






முதலமைச்சராக வேண்டும் என்ற ஆசை யில், அன்று இரவு முழு வதும் விடிய விடியப் பூட்டு பற்றிய ஓலைச் சுவடிகளையும் கணி தம் பற்றிய எல்லாக் குறிப்பு களையும் அந்த அமைச்சர்கள் தேடினார்கள். எதுவும் கிடைக்க வில்லை. அந்த நால்வரில் ஒருவர் மட்டும், ஒருசில ஓலைச் சுவடி களை புரட்டிவிட்டுத் தூங்கப் போய்விட்டார்.

மறுநாள் அரசவையில் கணி தத் தந்திரத்தால் மட்டுமே திறக் கக்கூடிய பூட்டை அரசரின் சேவ கர்கள் தூக்கிக் கொண்டு வந்து நால்வரின் முன்பும் வைத்தார்கள். எதிரே அரசர் வீற்றிருந்தார். பூட்டின் பிர மாண்டம் எல்லோரின் படபடப் பை இன்னும் அதிகரித்தது. கையோடு எடுத்து வந்த ஓலைச் சுவடிகளை அவர்கள் முன்னும் பின்னும் புரட்டிப் பார்த்தார்கள். ஆனால், கணிதப் பூட்டைத் திறக் கும் வழி மட்டும் அவர்களுக்குப் புலப்படவில்லை! தோல்வியை ஒப்புக் கொண்டார்கள்.

இரவிலே நன்றாகத் தூங்கிய அந்த ஒரு அமைச்சர், கடைசியாக எழுந்து வந்தார். அவர் பூட்டின் அருகில் வந்து பார்த்தார். என்ன ஆச்சர்யம்! பூட்டு பூட்டப்படவே இல்லை. சாவியே இல்லாமல், சூத்திரமே இல்லாமல் வர பூட்டை எளிதாகத் திறக்க, அரசர் அவரையே முதலமைச்சர் ஆக்கி னார்.

பிரச்சினையைத் தீர்க்க வேண்டு மென்றால், முதலில் பிரச்சினை யைப் புரிந்து கொள்ள்வேண் டும்.பிரச்சினையைப் புரிந்து கொள்ள வேண்டுமென்றால் மனம் பதட்டம் இல்லாமல் சம னிலையில் இருக்க வேண்டும்

# எதிர்மறை சூழலில் நடந்துகொள்ள வேண்டிய முறைமைகள்

கடந்த இதழில் நாம் எதிர்கொள்ளும் சில எதிர்மறை சூழல்களை நோக்கினோம். இவ்விதழில் அந்த சூழல்களின்போது நாம் நிலை மாறாமல் இருப்பதற்கு கைக்கொள்ள வேண்டிய சில செயற்பாடுகளை நோக்கு வோம்.

- அமைதியிழந்து காணப்படும் நேரத்தில் பதிலளிப்பதை தவிர்த்தல், நாம் ஏதோ சலனத்தில் இருக்கிறோம் என்பதை மென்மையாய் தெரிவித்தல்.
- குரலை உயர்த்திப் பேசுபவர்களிடம் நாம் அதே தொனியில் பேச வேண்டு மென்பதில்லை.
- எதிர்மறைச்சூழலில் நமக்குப் பலரும் ஆலோசனைகள் சொல்வார்கள். அவற்றை புறந்தள்ளிவிடாமல் நாம் இயல்பாய் இருக்கவும், நேர்மறையாய் செயல்பட வும் எது சிறந்த ஆலோசனையோ அதனை ஏற்றுக் கொள்ளலாம்.
- சூழலின் கடுமையை அதிகரிப்பது போல் யார் பேசினாலும் அவரை மதிக்க வேண்டிய நிலையிலிருப்பதைப் பற்றி கவலைப்படாமல் தவிர்த்துவிடலாம்.
- மற்றவர்களின் கருத்துக்களில், செயல் பாடு (நடத்தை) களில் எமக்கு உடன் பாடில்லை என்றாலும் அவற்றிற்காக அவர்களை உள்ளுக்குள் நாம் வெறுப்ப தாயிருந்தாலும் எதிரில் எதனையும் வெளிப்படுத்துதல் கூடாது. அதற்கும் மேலாக அவர்களிடமும் இயல்பாகவே நடந்து கொள்ளுதல் நல்லது.
- எம்முடைய எதிர்மறையான சிந்தனை களோ, செயல்பாடுகளோ மற்றவரைக் விட எமக்குத் தான் அதிகமான பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை நினைவில் நிறுத்துதல் அவசியம்.
- ஒவ்வொரு இடர்ப்பாட்டிலும் ஒரு வாய்ப்பு மறைந்துள்ளது என்று அல் பர்ட் ஐன்ஸ்டீன் கூறுகிறார். எதிர் மறைச் சூழலிலும் எமக்கான வாய்ப்பு எதுவென பார்க்கலாம்.
- நம்மால்தான் தவறு நிகழ்ந்தது எனும் போது நேர்மையாய் அதனை ஒப்புக் கொள்ளுதல் வேண்டும்.
- எம்முடைய நலன்விரும்பும் நண்பர் களை அழைத்து எம் எண்ணங்களை பகிர்ந்துகொள்ளலாம். சரியான ஆலோ சனைகளைக் கேட்கலாம்.
- எமக்குப் பிடித்த நல்ல இசையைக் கேட்க லாம். நமக்குப் பிடித்த புத்தகங்களை எடுத்துப் புரட்டிப் பார்க்கலாம்.
- ஆழ்ந்து மூச்சுவிடுதல். கண்களை மூடியபடி சிறிதுநேரம் அமைதியைக் கடைப்பிடித்தல். தியானம் பழக்கமுள் ளவர்கள் சிறிதுநேரம் தியானம் செய் தல். குளிர்ந்த நீரைப் பருகுதல் போன் றவை எம்மை உடல், மன ரீதியாக ஆசு வாசப்படுத்தும்.
- நாம் எல்லோரையும் எல்லா நேரத்திலும் திருப்தியுறச் செய்ய இயலாது. எனவே, சில சமயங்களில் வேண்டிய மனிதர் களையோ, பொருள் பணத்தையோ, ஏன் நட்பையோ கூட இழக்கவேண்டி வரலாம். அதற்காக இடிந்துபோய் விட வேண்டியதில்லை.
- சில இழப்புகள் பெரும் நிம்மதியைக் கூட கொண்டுவந்து சேர்க்கலாம். எப் போதும் எமக்கு இன்னலை ஏற்படுத்து பவர்கள் என்னதான் தேவைப்படுபவர் களாக இருந்தாலும் அவர்களை இழப்ப தற்கு நாம் எம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

# பறவைகள்

## ஏன் பறக்கின்றன

பறவைகள் ஏன் பறக்கின்றன என்ற தலைப்பில் ஆசிரியர் ஒருவர் வகுப்பில் மாணவர்களுக்கு கட்டுரைப் போட்டி வைத்தார். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாய் பதிலளித்தனர். ஒரு மாணவர் எழுதினார். பல பறவை கள் தங்கள் சிறகுகளைப் பயன்படுத்தாமல் தரையிலேயே தானியங்களைக் கொத்துகின்றன.

அவை பார்க்கும்படியாக பறவைகள் கூட்டம் கூட்டமாய் பறக்கிறபோது இவையும் தங்கள் சிறகுகளை மெல்ல அசைத்துக் கொள்கின்றன. பறக்க எத்தனிக்கின்றன. தங்களாலும் பறக்க முடியுமென்று புரிந்து கொள்கின்றன.

சாதாரண மனிதர்கள் என்று தங்களை நினைப்பவர்கள் சாதனையாளர் களைப் பற்றிப் படிக்கிறபோது அவர்களுக்கும் சாதிக்கத் தோன்றுகிறது.

**கூட்டத்தை நிறைவு செய்யும்போது ஓதும் துஆ**

தூய்மையான இரட்சகனே உனது புகழைக் கொண்டு உன்னைத் தவிர வேறு இறைவன் இல்லை என்று சாட்சியம் கூறுகின்றேன். உன்னிடம் பாவமன்னிப்புக் கோருகின்றேன். உன்னிடமே மீளுகின்றேன்.

سُبْحَانَكَ اللَّهُمَّ وَبِحَمْدِكَ أَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ أَنْتَ أَسْتَغْفِرُكَ وَأَتُوبُ إِلَيْكَ (رَوَاهُ التِّرْمِذِي)

கலாநிதி யூஸுப் அல் கர்ளாவி அவர்கள் உலக றிந்த பெரும் அறிஞர். பெரும் சிந்தனையாளர். இஹ்வானியப் பாசறையில் வளர்ந்த மாபெரும் ஆளுமை. முஸ்லிம் அறிஞர்களுக்கான சர்வதேச ஒன்றியத்தின் தலைவர். அவர்களுடன் அண்மையில் 'அஷ்ஷர்குல் அவ்ஸத்' எனும் பிரபல பத்திரிகையின் ஊடகவியலாளர் ஹுதா ஸாலிஹ் நடத்திய நேர்காணலை கர்ளாவி.கொம் இணையத்தளம் பதிவேற்றியிருந்தது. அதிலிருந்து சில பகுதிகளை இங்கு மொழிமாற்றம் செய்து தருகின்றோம்.

தமிழில்: டீன் ஸலாஹி

# நான் ஷஹீதாகவே விரும்புகிறேன்



## கலாநிதி யூஸுப் அல் கர்ளாவி

***இஸ்லாமிய இயக்கங்களை நெறிப்படுத்தல் தொடர்பான கேள்வியுடன் ஆரம்பிப்போம். இஸ்லாமிய இயக்கங்களின் பணிகுறித்து முன்வைக்கப்படும் விமர்சனங்கள் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றன. அதிலும் குறிப்பாக இரகசிய ஒழுங்கில் செயற்படுபவைகளின் பணிகுறித்து விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. அதுபற்றிய உங்கள் கருத்து என்ன?***

முதலில் இஸ்லாமிய அரசியல் இயக்கம் என்றால் என்ன? என்று கேட்க விரும்புகிறேன். ''இஸ்லாமிய இயக்கத்தின் முதன்மைப் பணிகள்'' என்ற எனது நூலில் இது குறித்து விளங்கப்படுத்தியிருக்கிறேன். இஸ்லாமியப் பணிக்காக ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பில் இயங்கும் கூட்டான மக்கள் செயற்பாடே இஸ்லாமிய இயக்கமாகும். அது உத்தியோகப் பற்றற்ற மக்கள் செயற்பாடாக இருப்பது அவசியம். அவ்வாறே தனிநபராக அன்றி கூட்டு செயற்பாடாக இருப்பதும் அவசியம். அங்கு தனிநபர்களின் இலக்குகள் பெரும் இலக்குகளாக்கப்படுவது சாத்தியமில்லை. அங்கு ஒழுங்குபடுத்தப்பட்ட ரீதியில் தலைமை, யாப்பு இருக்க வேண்டும். இஸ்லாத்திற்கு உதவுதல் அதன் இலக்காக இருக்க வேண்டும்.



அவ்வாறே இஸ்லாமிய இயக்கத்திற்கு அரசியலுடன் கட்டாயம் தொடர்பு இருத்தல் வேண்டும். ஏனெனில், அதற்கு அதிகாரம் இல்லாத நிலையில் இஸ்லாத்தின் தூதை உயர்த்த முடியாது. இஸ்லாம் என்பது ஒரு அழைப்புப்பணி, ஒரு நாடு, ஒரு நம்பிக்கைக் கோட்பாடு, அது ஒரு ஷரீஆ, வணக்கவழிபாடு, கொடுக்கல் வாங்கல் நடவடிக்கை, அது ஒரு மார்க்கம், ஒரு உலகம். எனவே, இது சாத்தியப்பட வேண்டுமாக இருந்தால் அவசியம் அரசியலுடன் தொடர்பு இருக்க வேண்டும்.

***இஸ்லாமிய இயக்கங்கள் இரகசியமாக வேலை செய்வது தொடர்பான உங்கள் நிலைப்பாடு என்ன?***

நீங்கள் சொல்வதுபோல எல்லா இஸ்லாமிய இயக்கங்களும் இரகசிய செயற்பாட்டைக் கொண்டிருக்கவில்லை. எனினும், அவை பணியாற்றும் நாடுகளைப் பொறுத்தே அது அமையும். நாடுளில் இஸ்லாமியப் பணிக்கான அனுமதி இருக்கும் போதும், சட்ட ரீதியான தடையேதும் இல்லாதிருக்கும்போதும் வெளிப்படையாக இயங்க முடியும். பாகிஸ்தான் ஜமாஅதே இஸ்லாமியை உதாரணமாகக் குறிப்பிடலாம். அதன் இயல்பு அது உருவாகியதுமுதல் வெளிப்படையாகவே பணிபுரிகிறது. இஹ்வானுல் முஸ்லிமூன் அமைப்பைப் பொறுத்தவரை தடைசெய்யப்பட்ட அமைப்பு என்றுவர்ணிக்கப்பட்டிருக்கிறது. அது பகிரங்கமாக பணிபுரிவதற்கு நாடுகள் அனுமதிப்பதில்லை. அதற்கென்று இஸ்லாமியத் தொடர்புடைய அரசியல் கட்சியொன்றை நிறுவவும் தடுக்கப்பட்டிருக்கின்றது. மதவாத கட்சிகளை தடைசெய்தல் என்ற பெயரில் இது நடக்கிறது.

மார்க்கத்தைப் பின்பற்றுபவர்கள் அரசியலில் ஈடுபடுவதிலிருந்தும், தேசத்தைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்புதிலிருந்தும் தடுக்கப்பட்டிருப்பதையிட்டு ஆச்சரியமடைகின்றேன். இது பெரும் அநியாயம் என்பதில் சந்தேகமில்லை. மார்க்கம் என்பது வாழ்வின் அடிப்படை. மார்க்கப்பற்றுள்ள ஒருவன் அவன் சிந்திக்கும் பாணியில் தேசத்தைக் கட்டி யெழுப்புவதில் பங்களிக்க முடியும். அந்த சிந்தனை அரசியல் சார்ந்ததாகவோ, பொருளாதாரம் சார்ந்ததாகவோ, கல்வி சார்ந்ததாகவோ அல்லது சுகாதாரம் சார்ந்ததாகவோ இருக்க முடியும்.

நாடுகள் ஏற்படுத்தும் தடை இஸ்லாமிய இயக்கத்தை நிலத்துக்குக் கீழ் செயற்பட நிர்ப்பந்திருக்கின்றன. சந்திப்பொன்றில் வைத்து பாதுகாப்புப் படைவீரர் ஒருவர் எகிப்திய இஹ்வான்கள் குறித்து என்னிடம் கேட்டார். அவர்களுக்கு பகிரங்கமாக வேலை செய்வதற்கான சுதந்திரத்தை வழங்குமாறு நான் வேண்டிக் கொண்டேன். அரசியல் கட்சியொன்றை உருவாக்குவதில் ஏன் இஹ்வான்களுக்கு தடை போட வேண்டும்? பகிரங்கமாக வேலை செய்வதை தடுத்தால் அவர்கள் நிலவறைகளுக்குள்ளிருந்து பணிகளை ஆரம்பிப்பார்கள். இது இஸ்லாமிய ஜமாஅத்களை மறைவிடத்திலிருந்து செயற்பட நிர்ப்பந்திக்கலாம். இது ஒரு ஆரோக்கியமற்ற நிலை. பகிரங்கமாக வேலை செய்யும்போது அவர்களது செயற்பாடுகளை கண்காணிக்கவும் விமர்சனம் செய்யவும் உங்களுக்க முடியும். ரகசியமாக வேலை செய்யும்போது உங்களால் எப்படி அவர்களை மதிப்பிட்டுக்கொள்ள முடியும்.

***இஸ்லாமிய இயக்கங்கள் தமக்குள்ளால் தேசிய அணி, புரட்சி அணி என்று பிளவுபட்டிருப்பதாக சிலர் பேசிக்கொள்கின்றனர். இதனை எப்படிப் பார்க்கிறீர்கள்?***

பிளவுகள் அதிகம் நிகழ்கின்றன. அது இஸ்லாமிய இயக்கங்களிலும் சரி, இஸ்லாம் அல்லாத நிறுவனங்களிலும்சரி நீண்ட மௌனத்தைத் தாங்க முடியாத நிலையும் புரட்சிவயப்பட்ட கடும்போக்கு இயல்புகொண்டவர்கள் இருக்கும்போதும் இது நிகழ்கிறது. அப்படியானவர்களே பிரிந்து சென்று கடும்போக்குடைய இன்னுமொரு அமைப்பை நிறுவுகின்றனர். இங்கு முக்கியமான விடயம் என்னவென்றால், அது அனைத்திலும் தாய் இயக்கமே அதிகம் நிலைத்து நிற்கிறது. பிரிந்து சென்றவர்களால் உருப்படியாக எதையும் செய்ய முடியாமல் போகிறது. சமூகத்திற்குள்ளால் அவர்கள் கரைந்துபோய்விடுகிறார்கள்.

***எனினும், நடைமுறைப்படுத்தும்போது இஸ்லாமிய இயக்கங்கள் ஏன் தோற்றுப் போகின்றன?***

இந்த விடயம் இஸ்லாமிய இயக்கங்களுடன் மட்டும் சுருங்கியதல்ல. கொள்கைகளை சுமந்து கொண்டு அதன்பால் பிரச்சாரம் செய்கின்ற எல்லா கொள்கைவாத இயக்கங்களிடமும் இந் நிலைமை காணப்படுகின்றது. நடைமுறைப்படுத்துகின்ற நேரத்தில் சிந்தனைவாத தஃவா ஒரு அம்சமாகவும், நடைமுறைப் படுத்தல் என்பது வேறொரு விடயமாகவும் மாறுகின்றது. மனிதனது இயல்பும் இதுவே. அவனது சுயமும் அப்படித்தான் இருக்கின்றது. ஏனெனில், மார்க்கம் மோசமான வழிபிறழ்விலிருந்து பாதுகாக்கப்பட்டிருக்கின்றது. ஜனநாயகம் பேசும் எல்லா ஜனநாயகவாதிகளும் ஜனநாயகத்தின் கொள்கைகளை வைத்தே அடக்குமுறை புரிகின்றனர்.

***இஹ்வான்களுக்கும் ஸலபிகளுக்குமிடையிலான தற்போதைய உறவுகுறித்து பேச வேண்டும். அண்மைக் காலங்களில் அரசியல் மற்றும் போராட்டக் களங்களிலே இஹ்வான்களுடன் ஸலபி எழுச்சியின் போட்டியை காண முடிகின்றது. இது குறித்த உங்கள் கருத்து என்ன?***

இது உண்மையே. இஹ்வான்களின் எழுச்சியைப் பொறுத்தவரை அது விசாலமானதொரு எழுச்சியாகக் கருதப்படுகிறது. இமாம் ஹஸனுல் பன்னா இஹ்வானுல் முஸ்லிமூன் அமைப்பைப் பற்றி வர்ணிக்கும்போது அது எல்லா ஜமாஅத்களும் அழைக்கின்ற ஒட்டுமொத்த கருத்துக்கள் அனைத்தையும் உள்ளடக்கியது. அல்குர்ஆன், ஸுன்னாவின்பால் மீளுமாறு அழைப்பதன் மூலம் அது ஸலபிய்ய தஃவா. உள்ளங்களைத் தூய்மைப்படுத்தும்படியும் அல்லாஹ்வின்பால் மீளுமாறும் அழைப்பதன்மூலம் அது ஓர் ஸூபித்துவ உண்மைநிலை.

இஹ்வானுல் முஸ்லிமூன் அமைப்பானது; ஸஹாபாக்களை கண்ணியப்படுத்தி அஹ்லுஸ் ஸுன்னா அடிப்படையில் செயற்படுவதன் அடியாக எழுந்த ஒரு ஸுன்னா வழிமுறை. அவற்றோடு சேர்த்து அது ஓர் அரசியல் கட்சியாகவும், விளையாட்டு அணியாகவும், வாலிபர் ஒன்றியமாகவும் திகழ்கிறது. சீர்திருத்தத்திற்கான அனைத்து அர்த்தங்களையும் அது கொண்டிருக்கிறது. எழுச்சியில் இன்னுமொன்றுடன் இணைத்துக் கூற முடியாதளவுக்கு இஹ்வானுல் முஸ்லிமூன் அதன் முழு மைத்தன்மையிலும், சமநிலைத் தன்மையிலும் சிறப்பிடம் பெறுகிறது.

இப்பின்னணியில் அல்லாஹ்வுக்குரிய பண்புகளுக்கு விளக்கமளித்தல், அஷ்அரீக்கள், மாத்ரூதிக்கள், இன்னும் பலருடன் நிலைப்பாடு தொடர்பில் கடுமையாக நடந்துகொள்ளும் ஸலபிகள் சிலபோது அவர்களை மிகைக்கலாம். அதேநிலையில் ஸலபிகள் களத்தினுள் நுழைகிறார்கள். இந்த விவகாரங்களோடு இன்னும் பல அம்சங்களும் சேர்ந்து பெரும் விவாதங்களாகவும் சர்ச்சைகளாகவும் மாறியிருக்கிறது. குறிப்பாக, வளைகுடா பகுதிகளில் இந் நிலைமை காணப்படுகிறது.

***முன்பெல்லாம் ஸலபிகளுடனான உறவில் பெரும் குழப்பம் காணப்பட்டது. தற்பொழுது எப்படியிருக்கிறது?***

இன்றும் தொடர்புகள் சிறந்த நிலையில்தான் இருக்கிறது. அவர்கள் கூறுவதுபோல் இப்போது நான் ஸலபிகளின் தேசத்தில் இருக்கிறேன். எல்லோருடனான எனது உறவுகள் ஆயுள் பூராகவும் மிகச்சிறந்த நிலையிலேயே இருந்திருக்கிறது. ஸலபிகள்மீது நான் பகையுடன் இருந்ததில்லை. அவர்களது சில விடயங்களில் எனக்கு விமர்சனங்கள் உள்ளன. எப்போதும் நான் அனைவரையும் நடுநிலையின்பால் அழைக்கிறேன். தஸவ்வுபுடனும் அப்படித்தான். தஸவ்வுப்பிலிருந்து அவசியம் பெற்றுக்கொள்ள வேண்டியவை உள்ளன. அதிலிருந்து பயனுள்ளவைகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

**ஷெய்குல் இஸ்லாம் இப்னு தைமிய்யா, இமாம் இப்னுல் கையிம் போன்றோர் அப்படி எடுத்துக்கொண்டார்கள். அவர்கள் இருவரும் பெரும் ஸூபித்துவ அறிஞர்கள். எனினும், தஸவ்வுப் கோட்பாட்டில் பொருத்தமில்லாதவற்றை இருவரும் மறுத்திருக்கிறார்கள். பொருத்தமானதை எடுத்திருக்கிறார்கள். ஸூபித்துவத்தினுள் ஸலபித்துவத்தினையும், ஸலபித்துவத்தினுள் ஸூபித்துவத்தையும் உள்வாங்குமாறு தனிப்பட்ட ரீதியில் நான் அழைப்பு விடுக்கிறேன்.**

ஸூபிகள் ஸலபிகளின் கட்டுக்கோப்பில் இருக்கும் இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்களை எடுக்காதிருத்தல், ஷிர்க் மற்றும் கப்ர் வணக்கம் தொடர்பானவற்றை தவிர்ந்துகொள்ளல் போன்றவற்றிலிருந்து பயனடைய வேண்டும். ஸலபிகள் ஸூபித்துவத்தில் காணப் படும் மென்மை, ஆன்மீகம், உள்ளச்சம் போன்றவற்றை பெற வேண்டுமென நாம் விரும்புகிறோம்.

***பாடல் இசை குறித்து என்ன சொல்கிறீர்கள்?***

ஏற்கனவே, பாடல் மற்றும் இசைகுறித்த நூலொன்றை தொகுத்திருக்கிறேன். அதிலே பாடலையும், இசை கேட்பதையும் ஆகுமென்று கூறியிருக்கின்றேன். அது அன்றும் இன்றும் பிக்ஹ் துறை அறிஞர்கள் கருத்து வேறுபடுகின்ற ஒரு விவகாரம். உண்மையில் பாடல் என்பது ஆகுமானதொரு விடயம். அது இசையுடனோ இசையின்றியோ இருக்க முடியும். ஆனால், அதற்கு சில வரையறைகள் உண்டு. பாடலின் உள்ளடக்கம்; அகீதா, ஷரீஆ, இஸ்லாமிய ஒழுக்க விழுமியங்களுடன் முரண்படக்கூடாது.

அவ்வாறே, பாடலின் பாணி ஒழுங்கீனத்தைத் தூண்டுவதை விட்டும், குழைந்து பாடும்

(17 ஆம் பக்கம்)

# பழைய கதை புதிய பார்வை

இது பேராசிரியர் ஏ.வி. சுரவீர அவர்கள் எழுதிய ''மினிஸ்கம ஹா ரஜகம'' என்ற கதையின் படிமமாகும். 1983 ஜூலைக் கலவரத்தால் தாக்கமுற்ற பேராசிரியர் இக்கதையைப் புதுக்கி 1984 இல் வெளியிட்டார். கலவரச் சூழலின் விபரீதங்களை எடுத்துக்காட்டி மக்களுக்கு அறிவு புகட்டுவதாக அது அமைந்தது. சிங்கள மொழியிலான கதையை பேராசிரியரே ஆங்கிலத்தில் பெயர்த்துள்ளார். ஏ.ஸீ.எம். றாஸிக், ஸமீனா ஷஹீத் ஆகிய இருவரும் அதனைத் தமிழில் பெயர்த்து ''மன்னனுள் ஒரு மனிதன்'' எனத் தலைப்பிட்டுள்ளனர். இதனை கொடகே சகோதரர்கள் வெளியிட்டுள்ளனர். கதைபற்றிய விமர்சனத்தை பேராசிரியர் நந்தசேன ரத்னபால வழங்கியுள்ளார்.

துட்டகாமினி மன்னனால் எல்லாள மன்னன் தோற்கடிக்கப்படுவதிலிருந்து கதை ஆரம்பமாகின்றது. எல்லாளனின் சிதை தீப்பற்றி எரியும்போது, அவனுக்கேற்பட்ட கதி பற்றியும் ஆயிரக்கணக்கில் மரணித்த மக்கள் பற்றியும் காமினி சிந்திக்கின்றான். மனிதன் ஏனைய மனிதர் மீது மிலேச்சத்தனமாக செயல்படும் குரூரத்தன்மை இக்கதையின் கருப்பொருளாக அமைந்துள்ளது. காமினியினால் செய்யப்பட்ட எல்லாச் செயல்களும் நாட்டுக்காகவும் மதத்துக்காகவும் என்றுகூறி மகாசங்கத்தினர் அவனை ஆறுதல் படுத்த முயற்சித்தபோதும் மன்னனின் மனச்சாட்சி அதைவிட ஆழமாக வேலை செய்கிறது. மனமாற்றமடைந்த மன்னன் யுத்தமும் அட்டூழியமுமற்ற சூழலொன்றை உவாக்க திடசங்கற்பம் பூணுகின்றான். காமினியை சித்தரித்துள்ள வரலாற்றாசிரியர் கதாசிரியர்களின் நிலையிலிருந்து வேறுபட்ட நிலையில் பேராசிரியர் அறிமுகம் செய்து வைக்கிறார்.

இக்கதை பயங்கரவாத ஒழிப்புக்குப் பின்னரான எமக்கும், ஒபாமா, புஷ், நெதன்யாஹு போன்ற தேசிய தலைவர்களுக்கும் பாடம் புகட்டுவதாக அமைகிறது.

*அனுராதபுரத்தை ஆட்சியை செய்த எல்லாள மன்னனுக்கெதிராக றுஹுணு - மாகமவிலிருந்து காமினி படையெடுத்து வருகிறார். திஸ்ஸமகா விகாரை நாயக்கதேரரின் ஆலோசனைக்கிணங்க, ''எனது இப்போதைய முயற்சி இராஜ போகத்தை அனுபவிப்பதற்கல்ல. சிங்களவரின் இறைமையையும் புத்த சமயத்தின் ஸ்திரத்தன்மையையும் பாதுகாப்பதற்காகவே'' என்ற சுலோகத்துடன் வடக்கு நோக்கி நகர்த்துகிறார்''. நாட்டு மக்கள் தனக்கு சார்பாக நடந்துகொள்வதற்கு இந்த உயிர்த்துடிப்புள்ள வாசகங்களே காரணமாக அமைந்தன. (பக்கம்: 19)*

*விஜிதபுரத்தில் சிக்குண்ட தமிழ் மக்களின் மரண ஓலத்தை சகிக்க முடியாத காமினியின் தளபதியும் ஆலோசகருமான தேரபுத்தாபய முகாமுக்குப் பின்னாலிருந்து பாதுகாப்பைத் தேடி ஓடினான். (பக்கம்: 24)*

*''அபய, உம்முடைய செயல் தளபதிக்குரியதல்ல, யுத்த களத்தில் மடியும் எதிரியைப் பார்த்து மனிதாபப்படுவது வீரனின் இலட்சனமல்ல. இப்படியான சந்தர்ப்பங்களில் கவலைப்படுபவர் பெண்ணின் குணம் படைத்தவர்கள். எதிரிக்குக் கொடுக்க வேண்டிய விருந்து வெட்டி, குத்தி, குதறி, அவனை அடியோடு இல்லாதொழிப்பதேயல்லாது வேறென்ன? (பக்: 25) என்று வீரம் பேசிய காமினி இன்று மனமாற்றமடைந்துள்ளான்.*

*''திஸ்ஸ இந்த உலகில் எந்த அநியாயமும் யுத்த கொடுமைக்கு நிகரானதல்ல. யுத்தத்துக்கு ஆணிவேர் அதிகாரமோகம். சிங்கள இனத்தையும் புத்த மதத்தையும் காப்பதற்காகவென்று சுலோகமேந்தி யுத்தம் புரிந்தது உண்மை. உண்மையை சொல்வதாயின் முச்சிங்கள பகுதியையும் ஆளும் வரம் வேண்டுமென்று ஆசையும் எனக்கிருந்தது. அதிகார மோகத்துக்கு நியாயம் - அநியாயம், பாவம் - புண்ணியம் பற்றியெல்லாம் சிந்திக்க அவகாசம் இல்லையென்று இப்போது புரிகின்றது. அமைதிகாக்கும் வேளையில் மனிதரைக் கொலைசெய்வது அநியாயம். யுத்தத்தின் போது மனிதரைக் கொலை செய்வது வீரம்.... எனது இரண்டு கரங்களாலும் எத்தனை உயிர்களை அழித்திருப்பேன். இந்த அநியாயத்துக்கு எப்படி பிராயச்சித்தம் தேடுவது?'' இந்த கடைசி வசனங்களை காமினி கவலை தோய்ந்த நிலையில் உரைத்தார்'' (பக்: 40)*

*யுத்த முகாமுக்குப் பின்னால் குடியிருந்த பிக்குகளில் பன்னிருவர் மறுநாள் காலை தன்னை சந்திக்க வந்தது காமினிக்கு ஞாபத்தில் வந்தது.*

*''காமினி குமாரரே நாம் பன்னிருவரும் மீண்டும் றுஹுணு பிரதேசம் போகத் தீர்மானித்துள்ளோம். அதனைக் கூறவே இங்கு வந்தோம்''.*



*'அவர்களின் மனமாற்றத்துக்கான காரணத்தை அம்மதத் தலைவர்கள் சாடையாக வெளிக்காட்டினார்கள். அதன் காரணம் இப்போதுதான் தெளிவாகின்றது. கோட்டைக்குள்ளிருந்த மக்களின் இழப்பால் அவர்கள் கவலையடைந்திருக்கலாம்.' (பக்: 26)*

*யுத்தம் என்றால் எதிரியை வெட்டிக் கொலை செய்வதல்லாது வேறு என்ன? கருணை, இரக்கம் போன்றவற்றுக்கு போர்க்களத்தில் இடமில்லை. எமது கரங்களால் எத்தனை பேர் இறந்தாலும் எமது நோக்கம் உன்னதமானது'' என்று அன்று தேரபுத்தாபயவுக்குக் கூறியவர்தான் காமினி. (பக்: 27)*

*இப்போதுதான், 'அந்த பிக்குவும் தேரபுத்தாபயவும் மனத்தால் எவ்வளவு வேதனையடைந்திருப்பார்கள்' என்பதை காமினி உணர்ந்துள்ளார்.*

*'எல்லாளன் தன் மகனை தேர்க்காலில் சிக்கவைத்து கொலைசெய்தது நீதியை நிலைநாட்டவல்ல. சீரியெழுந்த பௌத்த வளத்தைக் கட்டுப்படுத்த முடியாதபட்சத்தில் மக்கள் தீர்ப்புக்கு சிரம் சாய்ப்பதாய் பாசாங்கு காட்டுவதற்கே தன் மகனைக் கொலை செய்தான்'' என்று மாகவுக்கு தகவல் கிடைத்திருந்தது.*

*பௌத்தர்களின் சொத்துக்களைக் கொல்லையடிப்பது அவனது பொழுதுபோக்காக இருந்தது. நாட்டு மக்கள் அதற்காகவே எதிர்த்துள்ளனர். மக்களுக்காகவும் நியாயத்துக்காகவும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருந்த எல்லாளனுக்கு தனது மகனை தியாகம் செய்ய வேண்டி ஏற்பட்டதற்கு காரணம் அதன் பின்னணியாகும். (பக்: 28)*

*யுத்தத்தின் அகோரத்தை உணர்ந்து தன்னை அமைதிப் படுத்திக்கொள்ள முடியாதிருந்த காமினியின் மனக்கண்ணில் தந்தை தோன்றுகின்றார்.*

*''போரின் கொடுமைபற்றி நான் கூறியும் நீர் நம்ப*

**எம்.எச்.எம். நாளிர்**

*வில்லை. இப்போதாவது அதனை உணர்வீர். நடந்தது நடந்துவிட்டது. இனி வருவதை...'' என்றுகூறி மறைகிறார். (பக்: 30)*

*யுத்தமுனையில் கீழே சாய்ந்துகிடந்த எல்லாளன் கூறினான்: 'நான் தமிழ் அரசன் என்பது உண்மை. எனது ராச தர்மத்திற்கேற்ப நாட்டு மக்களுக்கு நியாயத்தை நிலைநாட்டவே நான் முயற்சி செய்தேன். எனினும், இந்நாடு சிங்கள அரசன் ஒருவனுக்கு உரியது என்பதை ஏற்றுக்கொள்கிறேன். நான் எவ்வளவுதான் நியாயத்தை நிலைநாட்ட முயற்சித்தாலும் தமிழ் மக்களால் சிங்களவர்களுக்கும் புத்த மதத்திற்கும் நிறைய அநியாயங்கள் ஏற்பட்டன... எவ்வாறாயினும் இந்த நாட்டில் இன்னொரு முறை தமிழ் சிங்கள யுத்தமொன்று ஏற்படுவதற்கு இடமளிக்காதீர்கள். திரும்பவும் யுத்தமொன்று ஏற்பட்டால் இந்நாடு பேரிழப்புக்கு ஆளாகிவிடும்.*

**(மிகுதி அடுத்த இதழில்...)**

## நான் ஷஹீதாகவே... (16 ஆம் பக்கத் தொடர்)

பாடலைவிட்டும் நீங்கியிருக்க வேண்டும். இது பெண்களுடன் தொடர்பானது. பெண்களுக்கும் பாடல் கேட்க அனுமதியுண்டு. நபி (ஸல்) அவர்கள் இரு அடிமைப் பெண்களின் பாடலைக் கேட்டிருக்கிறார்கள். பெண்ணின் குரல்; உணர்வுகள் மற்றும் இச்சையைத் தூண்டுவதிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும். மேலும் பாடல் வரிகளில் ஹராம் கலந்திருக்கக் கூடாது. பாடல்; நேரத்தை வீணடிப்பதாகவும் இருக்கக் கூடாது.

***இஹ்வானுல் முஸ்லிமூன் அமைப்பின் பொது வழிகாட்டி பதவி குறித்து என்ன கூறுகிறீர் கள்?***

பல தடவைகள் என்னிடம் வேண்டிக் கொண்டார்கள். எனினும், தனிப்பட்ட ரீதியில் நான் அதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டேன்.

***மன்னிப்புக் கேட்டதற்கான காரணங்கள் என்ன?***

ஜமாஅத் ஒன்றின் கண்ணாணிப்பாளனாக இருப்பதற்குப் பகரமாக சமூகத்தின் அனைத்து வர்க்கத்தினரையும் உள்ளடக்கிய உம்மாவுக்கான கண்காணிப்பாளனாக இருப்பதே பொருத்தம் எனக் கண்டுகொண்டேன். அதுவே சமூகத்திற்கு அதிகம் பயனளிக்கக் கூடியது.

***பதவியை ஏற்க மறுத்ததற்கு அரச அழுத்தங்கள் ஏதும் இருந்ததா?***

இல்லை, அப்படியொன்றும் கிடையாது.

***வாழ்க்கை உங்களுக்கு எதனைக் கற்றுத் தந்திருக்கிறது?***

சந்தேகமே இல்லை. அது எல்லாவற்றிலும் முதிர்ச்சியைக் கூட்டியிருக்கிறது. மனிதன் வாழ்ந்த போது அவனது அனுபவம் அதிகரித்திருக்கிறது. அவனது வாசிப்புக்கள் கூடியிருக்கின்றன. வாழ்வு பற்றிய அவனது ஆழமான பார்வையும் அவனது முதிர்ச்சியும் உயர்ந்தன. உலகம் சிறந்த ஆசான் என்பார்கள். வாழ்வு; அதனை தீட்சண்யப் பார்வையுடனும் புத்தியுடனும் வாழ்ந்தவர்களுக்கு ஒரு பாடசாலையாய் அமைகிறது.

***உங்களை எப்படிக் காண்கிறீர்கள்?***

இஸ்லாத்தின் தொண்டர் படையணியில் நான் ஒரு தொண்டன். அறிவையும் அமலையும் தஃவாவையும் சுமந்த அல்லாஹ்வின் தொண்டன். என் வாழ்வை அல்லாஹ்வின் பாதையில் ஷஹாதத்துடன் முடித்துக்கொள்ள ஆசைப்படுகின்றேன். நாம் கேட்கும் துஆ இது: ''அல்லாஹ்வே மகிழ்ச்சிக்குரியவர்களின் வாழ்வையும் ஷஹீதுகளின் மரணத்தையும், தீர்ப்பு நாளில் வெற்றியையும் எதிரிகளுக்கெதிராக வெற்றியையும் உன்னிடம் நாம் கேட்கிறோம்'' அல்ஹம்துலில்லாஹ். நாம் ஈமானின் மூலம் சந்தோசமாய் இருக்கிறோம். அல்லாஹுத ஆலா எனக்கு ஷஹாதத்தைத் தந்து என் வாழ்வை முடித்து வைக்கட்டும் எனவும் எனது ஷஹாதத் முஸ்லிமல்லாதவனின் கரத்தால் நிகழ வேண்டுமெனவும் வேணவா கொண்டிருக்கிறேன்.

***உங்களது ஷஹாதத் என்றாவது ஒருநாள் முஸ்லிம் ஒருவனின் கரத்தால் நிகழும் என்று சந்தேகிக்கிறீர்களா?***

அது பைத்தியக்கார நபரின் மூலம் நிகழ முடியும்.

***எப்போதாவது அச்சுறுத்தப்பட்டிருக்கின்றீர்களா?***

யூதர்கள் மட்டும்தான் என்னை வெளிப்படையாக அச்சுறுத்தினார்கள். முஸ்லிம் தரப்பிலிருந்து நான் எச்சரிக்கைகளை எதிர் கொள்ளவில்லை.

***உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எதனை இழந்திருக்கிறீர்கள்?***

(தழுதழுத்த குரலில்) என் ஆத்ம நண்பர்களில் பெரும்பாலானவர்களை ஒன்றன்பின் ஒன்றாக நான் இழந்துவிட்டேன். இப்போது நான் மட்டும் எஞ்சியிருக்கிறேன். என்றாலும், எல்லா இடங்களிலும் மக்கள் என்மீது வைத்திருக்கும் அளப்பரிய அன்பை இப்போது நான் உணர்கிறேன்.

# தயாராகு

நிலையில்லா வாலிபம்
நிலைத்து விட்டதாயெண்ணி
துள்ளிக் குதித்து
உலா வந்த நாட்களை
இப்போது
நினைத்து வருந்துவதில்
பயனேதுமில்லை!

முதிர்ச்சியை எண்ணாது
குதூகலமாய்
புல்லாங்குழல் இசைத்தாய்
அதிலே
பிரமித்துப் போய்
இன்பத் தேன் குளித்து
இன்னிசை பாடித் திரிந்தாய்!
போனது இனித் திரும்பாது
நினைவிற் கொள்.

வீணாகக் கழிந்த நாட்களை
அசைப் போட்டுப் பார்ப்பதை
விட்டு விட்டு
நிகழ்காலத்தில் ஜெயித்து
எதிர்காலத்துக்காய் தயாராகு!



அந்தி பட்டுக் கொண்டிருக்கும்
வாலிபத்தை நினைத்து
ஆதங்கத்தில் துவலாமல்
நாளைய நாட்களை
அர்த்தப்படுத்த ஆசை கொள்.
கவலைகள் எப்போதும்
காயங்களை ஆற்றாது.

**பாயிஸா கைஸ்**
**சீனன்கோட்டை**

# பச்சை வெறுத்தல்

பூமியோட்டின்
ஐம்பெரும் கவசத்தகடுகளும்
துரிசம் கூட்டி பொருதி
பிளவுறவும்...
மடிப்புறவும்...
கூடிச் சபித்தன
பசுமையின் குளிர் தேவதைகள்.

பொருக்கிட்டு வெடித்து காறை
உதிர்த்த
பூமிப் பெருதளத்தில்
எஞ்சிய புதர் வனத்தையும்
மூச்செறியும் சிறுத்தையின்
மூர்க்கத்தோடு
தேடி அலைந்து பிதற்றினர்
கோடரி மனிதர்கள்.

சொர்க்கத்தில் மரம்
நடத் தெரிந்தவர்களுக்கு
தெரிந்திருக்கவில்லை
நிலம் கீறி விதை இடுதலின்
வலிமை பற்றி...

**ஏ.எம். குர்ஷித்**

# சுவனத்து வாசனை



நேற்றைய
ஜனனங்களின்
சப்தமில்லா மௌனங்கள்
இன்றைய தினங்களின்
இளமைப் பொழுதுகள்
உயிரற்றுக் கிடக்கும்
ஊமையினுறைவிடங்கள்.

சாலையோர மரங்களின்
சரசரப்புக்களில் ஏற்பட்ட
சலசலப்புகள்
நாளைய தினங்களின்
நச்சரிப்புக்கள்
சுதந்திரச் சுகதேகிகள்

தவழ்ந்து மகிழ்ந்த தசாப்தங்கள்
தாண்டிய பொழுதுக்காய்
கடந்த பொழுதுகளையும்
பாராமல் மீண்டும்
விண்ணப்பிக்கிறேன்
நிரந்தர உலகின்
நிலைத்தலுக்காக.

புலம்பிக் கொண்டிருக்கும்
இதயம்
முணுமுணுக்கும்
உலர்ந்த உதடு.

கண்ணீரை உதிர்த்தபடி
இறைவனிடம் கையேந்தும்
கரங்கள்
உயர்தர சிந்தனைகள்
இருந்தும்
இன்னும் என்னுள்
இடம்பெறவில்லை
சுவன வாசனையை
நுகரும் ஒத்திகை.

**நஸார் இஃஜாஸ்**
**கிண்ணியா 05**

# நீளும் நாட்கள்



இருட்டி
பின்பே
மெழுகுவர்த்திகள்
அனைந்துபோன
ஓர் இரவில்
சலனமின்றி யாவரும்
தேவைகள்
கனவில்!
வரங்கள் யாவும்
சாபங்களாய்.

ஜீவியத்தில்
கண்ணீரும், தோல்வியும்
சமப் பட்டுக்கொள்வதில்
நிஜங்களோடு
முரண்படுகிறது
வாழ்வு!

சரிவிகிதமற்ற
பிரபஞ்ச ரகசியம்
வெற்றுப் பொழுதுகளில்
தேடுகிறேன்
இரவுகள் தொலைத்த
தூக்கம்
இப்போதெல்லாம்
நம்பிக்கையோடு
மட்டுமே!
நகர்கிறது-நாட்கள்

சாளரம்!
வழியே கசியும்
விடியலை!
வரவேற்க புறப்படுகிறேன்
மனதில்!
ஆயிரமாயிரம்
இருள்களோடு.

**முஹம்மத் மஜீஸ்**
**மீராவோடை 04**

# நிழல் வெளி

'நிழல் வெளி' வாசகர்களிடமிருந்து தரமான கவிதைகளை எதிர்பார்க்கிறது. கருத்தாழமுள்ள சிறந்த கவிதைகளை நீங்களும் எழுதியனுப்பலாம். கவிதைகள் நீளம் இல்லாமல் சொற்சுருக்கமாகவும் கருத்துச் செறிவாகவும் இருத்தல் வரவேற்கத்தக்கது. தரமான கவிதைகளுக்கு 'நிழல் வெளி' நிச்சயம் களம் தரும். உங்கள் கவிதைகளை அனுப்ப வேண்டிய முகவரி:

*'நிழல் வெளி'*
Meelparvai Media Centre,
06, Abhaya Place, Kolonnawa Rd,
Colombo 09

# இரத்தக் கொதிப்பு

கெவர் கந்து வெட்டி
அதை அழகழகாய் சீவி
இழுதோலி இரண்டும்
மறைக்கான் ஒன்றும்
எடுத்து
எல்லாவகையிலும்
சுத்த வேண்டிதை
சுத்திக் கட்டிவிட்டேன்

களிமண்ணில்
குண்டு செய்து
உச்சி வெய்யிலில்
காய வைத்துள்ளேன்

எந்தப் பறவைக்கோ
எந்த விலங்குக்கோ
என் சுண்டிலால்
ஓரடியேனும் விழாது
இது சத்தியம்
சத்தியாய்...



அப்படியாயின்
இது ஏன்
என்ற கேள்விகளா
நான் பலஸ்தினப் போராளி-
கலி மண்ணோ?
கோடாலி.

**மூதூர் றிஸ்வின்**

"உள ஆரோக்கியமுள்ள ஓர் தலைமுறையை நோக்கி"
உளவியல் சான்றிதழ் பாடநெறிகள்
(CERTIFICATE COURSES IN PSYCHOLOGY)
வளவாளர் குழு - அரச தொழில்வாண்மைமிக்க உளவளத்துணையாளர்கள்(Professional Counselors)
பாடநெறி 01 காலம் : சனி/ஞாயிறு (25 Hours) பாடநெறி 02

| POSITIVE PARENTING (ஆரோக்கியமான குழந்தை வளர்ப்பு) | SUCCESSFUL FAMILY LIFE (குடும்பவியல் பாடநெறி) |
| --- | --- |
| பிள்ளைகளின் விருத்திக்கட்டங்கள் (Developmental stages) | திருமணத்திற்கு முந்திய ஆயத்தம் (Pre Marital Counseling) |
| முன்பிள்ளைப் பருவம் (Early childhood) | வெற்றிமிக்க குடும்ப வாழ்வின் அடிப்படைகள் (Fundamentals of Family Life) |
| கட்டிளமைப்பருவம் (Adolescent) | ஆண்,பெண் உளவியல் (Psychology of man & Woman) |
| பிள்ளைகளின் நடத்தை பிறழ்வுகளை இனங்காணலும் உதவுதலும் (Abnormal behaviors & counseling) | குடும்ப பிரச்சினைகளை தீர்த்தல் - திறன்கள், அணுகுமுறைகள் - (Problem solving skills) |

இஸ்லாமிய உளவியல் வழிகாட்டலில்...

யார் விண்ணப்பிக்கலாம்
- A/L தகமையுள்ள மாணவ, மாணவிகள்
- ஆசிரியர்கள், முன்பள்ளி ஆசிரியைகள்
- பெற்றோர்கள், இத்துறையில் ஆர்வமுள்ளோர்
- அறபு மத்ரஸாக்களில் பட்டம் பெற்றோர். (மௌலவி, மௌலவியா)

கொழும்பில் ஜனவரி 9 ஞாயிறு காலை 9 மணி
Organized By .
Sri Lanka Muslim Student Federation
150, Baber St. Colombo 12 (Next to Kotehena Hindu College)
கண்டியில் ஜனவரி 8 சனி காலை 9 மணி
Hitech Institute
38, Colombo St. Kandy

மேலதிக விபரங்களுக்கு :
M.R.M. Naleem (Naleemi)B.A,
Dip in cou (NISD), P.G. Dip in psy (pera)
Counselor
MINISTRY OF SOCIAL SERVICE
071-5380021 email : naleemmrm@ymail.com



சம்மாந்துறை அல்வஸத் இஸ்லாமியப் பாலர் பாடசாலையின் கலைவிழா அண்மையில் தாருஸ் ஸலாம் அஷ்ரப் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட இறக்காமம் பிரதேச செயலாளர் ரிபா உம்மா ஜெலீல் உரையாற்றுவதைக் காணலாம். (தகவல்: முஹம்மத் அக்ரம்)

## தேசிய கீத... (1ம் பக்கத் தொடர்)

தேசிய கீதத்தை தமிழில் பாடுவதில் பெரும் சிக்கல் இருப்பின் தேசிய கீதத்தை இசையால் மட்டும் இசைக்க முடியும் என்றும் சுட்டிக்காட்டினார் தேசிய கீதத்தை தமிழில் பாடுவதற்கு அரசியல மைப்பில் இடமளிக்கப்பட்டுள்ளதாகவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

தேசிய கீதம் இசைக்கும் போது மகா சங்கத்தினர் எழுந்து நின்று மரியாதை செய்ய வேண்டுமா இல்லையா என்பது பற்றி மகாநாயக்க தேரர்களுடன் ஆராயு மாறு அனுநாயக்க தேரர் பிரதமரை கேட் டுக்கொண்டார். இந்தியா போன்ற நாடு களில் தேசிய கீதம் இசைக்கும் போது மகா சங்கத்தினர் உட்பட மத தலைவர் கள் எழுந்து நின்று மரியாதை செலுத்துவ தாகவும் அதில் தவறு எதுவுமில்லை என்று அனுநாயக்க தேரர் இங்கு குறிப் பிட்டார்.

## கொழும்பில் கண்காணிப்பு...

(கடைசிப் பக்கத் தொடர்)



தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த வாக னங்களில், கொழும்பு நகர் முழுவதிலும் பொருத் தப்பட்டுள்ள கமராக்களுக்கான செய்மதி இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

உடனுக்குடன் அவற்றின் காட்சிகளை அவதானித்து, குறித்த இடத்துக்கு விரைந்து, சம்பவத்தில் அடையாளம் காண்பவர்களை கைது செய்வதற்காக இந்த வாகனங்கள் இறக்குமதி செய்யப் பட்டுள்ளன.

மீள்பார்வையில் விளம்பரம் செய்யுங்கள்
0777 650 222

## இலங்கை முஸ்லிம்கள்... (4ம் பக்கத் தொடர்)



இந்த தமிழ் குறுந்தேசிய இன வாதத்தின் பின்புலத்தில் முன் னெடுக்கப்பட்ட அரசியலின் காரணமாகக் இன்று தமிழ் இனம் பெற்ற விளைவை நாம் அதற்கு தலைமை தாங்கிய வழி யாலும் அனுபவத்தாலும் கண் கூடாகக் காண்கிறோம். இந்த அரசியலின் மிகப்பெரும் சோகம் என்னவெனில், நியாயமான தமிழ் மக்களின் அரசியல், இன உரிமைக்கான போராட்டமும் குழிதோண்டி புதைக்கப்பட்டு விட்டது என்பதுடன், தமிழ் இனம் மிக அதிகமான விலை யையும் கொடுத்து பூஜ்ஜியமான கையறு நிலைக்கு தள்ளப்பட்டு விட்டது என்பதேயாகும்.

வரலாற்றின் தோல்விகளிலி ருந்து, தமது பலவீனங்களிலி ருந்து, தமது சிந்தனைக் கோளா றுகளில் இருந்து பாடம் கற்காத இவர்கள்- சுயவிமர்சனம் செய்ய முடியாத இவர்கள்- ஒரு தேசிய இனத்தின் அரசியல் உரிமைக் காக அதன் அடையாள இருப்புக் காக போராடுவதாகச் சொல்லிக் கொண்டு ஏனைய தேசிய இனங் களின் தனித்துவங்களையும் அத் தேசிய இன மக்களின் அரசியல் அபிலாசைகளையும் மறுத்து ரைப்பது, இவர்களின் கபடத் தனத்தை அம்பலமாக்கப் போது மானதாகும்.

இந்த குறுந்தமிழ் தேசிய இன வாதிகளுக்கும் முஸ்லிம்களுக்கு மான அரசியல் முரண்பாடுகள், தமிழ் குறுந் தேசியவாதிகள் கட்டமைக்கின்ற நிலம், இனம், அரசியல் அதிகாரம் சார்ந்த வட க்கு கிழக்கு பிரதேசத்தை தளமா கக் கொண்ட தனி ஈழம் என்பதி லிருந்தே தொடங்குகிறது.

அவர்களால் நீண்ட காலமாய் முன்வைக்கப்படுகின்ற அகண்ட தமிழ் ஈழத்திற்குள் முஸ்லிம்கள் தம்மை உள்ளடக்க திணறி மறுத்த போது, தம்மை தனியாக அடை யாளப்படுத்த விரும்பிய போது தமது மேலாதிக்க குறுந் தமிழ் தேசியவாத அதிகாரக் கட்ட மைப்பு கேள்விக்குட்படுத்தப் பட்டபோது முஸ்லிம் இன விரோதம் இவர்களால் தீவிரமாக் கப்பட்டதுடன், முஸ்லிம்கள் (சோனகர்) தனியான தேசிய இனம் இல்லை என்றும் அவர் கள் தமிழர்கள்தான் என நிறுவும் காலம்கடந்த அரசியல் நிறுவுதல் களும் முன்னுக்கு வந்தன; வரு கின்றன. இதற்கு இவர்களால் முன்வைக்கப்படுகின்ற விவாதங் களில் ஒன்று மொழி தொடர் பானதாகும்.

முஸ்லிம்களும் தமிழைப் பேசுவதால் முஸ்லிம்கள் தமிழர் கள்தான் என்பதே இவர்களின் நீண்ட கால கதையாடலாகும். இக்கதையாடல் ஆறுமுக நாவ லர் தொடங்கி இராமநாதன், அன்ரன் பாலசிங்கம் வரை தொடர்ந்து தற்போது தேசம் நெற்றில் பின்னூட்டமிடும் சில நபர்கள் வரை தொடர்கிறது.

ஒரே மொழியைப் பேசுகின்ற காரணத்தினால் அந்த மொழி யைப் பேசுகின்ற எல்லோரும் ஒரே இனமாக இருக்க வேண் டும் என நிறுவும் போக்கு எந்த இனத்துவ ஆய்வுக்குட்பட்டதோ எனக்குத் தெரியவில்லை. அத்து டன் தமிழ் நாட்டில் வாழ்கின்ற முஸ்லிம்கள் உதாரணங்களும் வேறு. (மொழி, இனம், தொடர் பான விவாதத்தை விரும்பினால் பிறிதொரு கட்டுரையில் பேச லாம்.)

## உயர்தர அரசியல்... (07ம் பக்கத் தொடர்)

எந்தவொருவருக்கும் எவரையும் ஆளும் உரிமை கிடையாது. இன்னொருவரை ஆள்வதை குறிக்கோளாக்கிச் செயற்படுவதை ஜனநாயகக் கோட்பாடு அனுமதிக்காது.

ஆனால், ஜனநாயகத்தின் இந்தக் குறிக்கோள் அடைந்து கொள்ளப்பட்டிருக்கிறதா என்ற கேள்விக்கு மேற்கத்தேய சிந்தனை யாளர்கள் இல்லை என்றே பதில் தருகிறார்கள். முற்று முழுதாகவே மக்களால் செய்யப்படும் ஆட்சி என்று கருதப்படுகின்ற ஜனநாயகக் கொள்கையில் ஆள்பவர்-ஆளப்படுபவர்களுக்கு இடையிலான வித்தியாச பேதமின்மை நடைமுறைச் சாத்தியமற்றது என பேராசி ரியர் Alfred Cobban தனது நாகரிகத்தின் சிக்கல் (Crisis of Civilization) என்ற நூலில் குறிப்பிடுகின்றார். ஆள்வது ஒரு மக்கள் குழு, ஆளப் படுவது இன் னொரு மக்கள் குழு என்பதே அவரது வாதம்.

ஜனநாயக உலகு என்பது மக்கள் தங்களைத் தாங்களே ஆட்சி செய்து கொள்ளும் முறையைக் கொண்டது என்ற வரைவிலக்கணத்தி லிருந்தே அது முற்றிலும் சாத்தியப்படாதது என்பது தெளிவாகின் றது. அதாவது, எது ஜனநாயகம் என்று சொல்லப்படுகின்றதோ அது சாத்தியமற்ற விடயமாகும்.

ஆள்பவர்-ஆளப்படுபவர் என்ற தொடர்பு இரு விடயங்களில் இணைந்த தன்மையை வேண்டி நிற்கின்றது. இரண்டு மாதிரிகளின் இணைந்த இருப்பிலேயே ஆள்பவர்- ஆளப்படுபவர் என்ற உறவு நிலை விளக்கப்படுகின்றது. ஆள்பவர் என்ற ஓர் அமைப்பு இல்லா விட்டால் ஆளப்படுவோர் என்ற அமைப்புக்குத் தேவை இருக்காது. ஆனால் இன்றைய நவீன உலகின் மேல்மட்ட ஆதிக்கத்தினர் மக்க ளைத் தங்கள் கட்டுக்குள் வைத்திருக்கும் ஆளுமையைப் பெற்றிருக் கின்றனர். மக்களையே மக்கள் ஆளுகின்றார்கள் என்று நம்பவைக் கும் திறன் அவர்களிடம் இருக்கின்றது. சர்வஜன வாக்குரிமை என்பது ஒரு மாயைத் தோற்றமாகும். அதன் மூலம் ஜனநாயகக் கட்டுக்கோப் புக்குள் மக்கள் இழுக்கப்பட்டு, கவர்ச்சி காட்டப்படுகின்றனர்.

மீள்பார்வை

உள்நாட்டு - வெளிநாட்டு சந்தா விபரம்

மீள்பார்வை தனிப் பிரதி - ரூபா 30.00
ஆறு மாத சந்தா - ரூபா 450.00
ஒரு வருட சந்தா - ரூபா 900.00

இந்தியா
தனிப் பிரதி - ரூபா 75.00
ஒரு வருடம் - ரூபா 2000.00

மத்திய கிழக்கு நாடுகள், மலேசியா
தனிப் பிரதி - ரூபா 90.00
ஒரு வருடம் - ரூபா 2500.00

ஐரோப்பிய நாடுகள், ஜப்பான், தென்கொரியா
தனிப் பிரதி - ரூபா 120.00
ஒரு வருடம் - ரூபா 3000.00

காசுக் கட்டளை அனுப்ப விரும்புபவர்கள், காசுக்கட்டளை பெறுவோர்: Meelparvai Publishers எனவும், தபால் நிலையம்: Grandpass எனவும் குறிப்பிட்டு அனுப்புமாறு வேண்டுகிறோம். முகவரி: MMC, 06 Abhaya Place, Kolonnawa Road, Colombo 09.

MMC

மீள்பார்வை

Registered as a newspaper in Sri Lanka
GPO - QD/06/NEWS/2010 - ISSN 2012-5038


# கொழும்பில் கண்காணிப்பு கமராக்கள்



கொழும்பில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்ற பகுதிகளில், அதிக அளவிலான கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்னால்; விசேடமாக 6 கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின் றன. அத்துடன் ஒடெல் சுற்றுவட்டத்திலும் அதிக கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இதேவேளை அதிநவீன தொடர்பு சாதனங்கள் பொருத்தப்பட்ட வாகனங்கள் பல, கொழும்பு நகர் முழுவதிலும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக (பக்.19)

## செய்தித் துளிகள்



நாட்டினை பயங்கரவாதத்தின் பிடியிலிருந்து மீட்டெடுத்த வீரனை துரோகியாக மாற்றி இந்நாட்டின் அழிவுக்கு வித்திட்ட கே.பி எனும் துரோகியை வீரனாக மாற்றியமைத்து அரசு உலக சாதனை படைத்துள்ளது என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்




அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியில் முதன் முதலாக ஒரு முஸ்லிம் வீரர் இடம்பெற்றுள்ளார். தற்போது நடைபெற்று வரும் 'ஆஷஸ்' கிண்ண டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கி பொன்டிங் காயமடைந்ததைத் தொடர்ந்து அவரின் இடத்திற்கு உஸ்மான் குவாஜா எனும் பாகிஸ்தானை பூர்வீகமாகக் கொண்ட இவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.



ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழுவிற்கு இலங்கை வருவதற்கு விசா வழங்கினால் அரசாங்கம் வீடு செல்லநேரிடும். இலங்கைக்கு எதிரான சர்வதேச நாடுகளின் போர்க்குற்ற விசாரணைகளுக்கு ஜனாதிபதியும் அவரது அரசாங்கமும் சாதகமாக செயற்பட முயற்சிக்க கூடாது என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாசஅமரசேகர தெரிவித்தார்




சர்வதேச தர நிர்ணய சான்றிதழான ISO 9001:2008 இனை இலங்கை வாமி கிளை பெற்றுள்ளது. இது தொடர்பான வைபவத்தில் அதன் பணிப்பாளர் உமர் இத்ரீஸுக்கு ISO தர நிர்ணயம் செய்யும் பியுரோ வெரிற்றாஸ் முகாமையாளர் ரீ.கே.எஸ். ஒசன் சான்றிதழ் வழங்கிறார்.













Published by Meelparvai Media Centre, 06, Abhaya Place, Kolonnawa Road, Dematagoda, Colombo 09. Printed at A.J. Prints, Station Road, Dehiwala.